# முன்னுரை

# கிறிஸ்து தம்முடைய சபையை எவ்வாறு நிலைநாட்டினார்?

கிறிஸ்து ஏறக்குறைய ஏதொன்றையும் தமக்குச் சொந்தமாகத் தேர்ந்து கொள்ளவில்லை என்பதே பூமிக்குரிய அவரது வாழ்வின் தனிச் சிறந்த பண்புகளில் ஒன்றாகும். அவர் ஒரு வீட்டைக் கட்டியதாகவோ, ஒரு கட்டிடத்தைப் புதுப்பித்ததாகவோ அல்லது நிலத்தை வாங்கியதாகவோ புதிய ஏற்பாட்டில் நாம் ஒருக்காலும் வாசிப்பதில்லை. அவர் ஏதொன்றையும் - உடைகள், கருவிகள் அல்லது உணவைக் கூட - வாங்கியதாக சுவிசேஷங்கள் ஒருக்காலும் குறிப்பிடுவதில்லை. அவர் இந்த உலகத்தில் இருந்த பொழுது, ஒரு வகையில் இதன் குடிமகனாய் இருந்தார், ஆனால் ஒருக்காலும் அவர் இதில் இல்லிடம் கொண்டிருந்ததில்லை. அவர் இந்த உலகத்தில் இருந்தார், ஆனால் உலகமானது அவருக்குள் இருந்ததில்லை; அவர் இந்த உலகத்தின் ஒரு பாகமாகவே இதில் வாழ்ந்தார், ஆனால் உலகம் தமக்குள் வாழ்வதை அவர் ஒருக்காலும் அனுமதித்ததில்லை. அவர் இங்கு வாழ்கையில், ஒரு வெளிநாட்டில் அந்நியராக வாழ்ந்தார், இன்னொரு உலகில் அவரது நேசங்களும் வாழ்வும் முழு ஈடுபாடு கொண்ட நிலையில் ஒரு திருப்பயணியாக அவர் வாழ்ந்தார்.

"என்னுடைய" மற்றும் "என்னுடையது" என்ற உடமைப் பெயர்ச் சொற்களைக் கிறிஸ்து அரிதாகவே பயன்படுத்தினார். அவர், "என் சீஷர்கள்" (யோவா. 8:31), "என் பிதா" (மத். 26:39), "என்னுடைய சரீரம்" (மத். 26:26). "என்னுடைய இரத்தம்" (மத். 26:28), "என் வார்த்தைகள்" (லூக். 6:47) மற்றும் "என் சபை" (மத். 16:18) என்பவைகளைப் பற்றிப் பேசினார். அவரது சரீரம், இரத்தம் மற்றும் வார்த்தைகள் பற்றிய அவருடைய குறிப்புகளும் கூட சுத்தமான சொந்த வேட்கைக்கான ஆதாரம் எதுவுமின்றி ஆவிக்குரிய சந்தர்ப்பப் பொருளிலேயே அமைந்துள்ளன.

சுவிசேஷங்களின்படி, கிறிஸ்து - ஒரு கல்லூரியையோ, ஒரு உலகப் பிரகாரமான வீட்டையோ அல்லது உடைமைகளையோ அல்ல ஆனால் - தம்முடைய சபையை மட்டுமே தம்முடைய ஒரே ஒரு தனிப்பட்ட

உடைமையாகத் தமது பூமிக்குரிய ஊழியத்தின் நிலைத்திருப்பென்ற வகையில் விட்டுச் செல்ல நாடினார் (மத். 16:18). தேவனுடைய இராஜ்யத்தின் வருகையைப் பற்றிப் பிரசங்கித்தல் மூலம் அவர் பூமிக்குரிய தம்முடைய ஊழியத்தைத் தொடங்கினார் (மத். 4:17), மற்றும் அவர் இராஜ்யத்தைப் பற்றிப் பிரசங்கித்தலினாலேயே இதை முடித்தார் (அப். 1:3). அவர் தாம் நிலை நாட்டிய சபையானது தேவனுடைய இராஜ்யத்தின் பூமிக்குரிய வடிவமாயிருக்கும் என்று சுட்டிக்காட்டினார்; இவ்விதமாகவே, இக்கருத்தில் அவர் தேவனுடைய இராஜ்யத்தைத் தம்முடைய சபையுடன் சமப்படுத்திக் காட்ட முடிந்தது (மத். 16:16-18).

கிறிஸ்து சொந்தமாகத் தேடிய ஒரே ஒரு பொருள் சபை என்பது மட்டுமே என்றிருக்கிறபடியால், கிறிஸ்து உண்மையாகவே தமக்குப் பின் விட்டுச் சென்ற ஒரே உடைமையாக அது இருப்பதால், சபை என்பது அவருக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும் மற்றும் நமக்கும் அவ்வாறே இருக்க வேண்டும் என்ற கருத்து தொடருகின்றது. அவருடைய சபையாராகி வாழ்வதே நமது மிக மேம்பட்ட விருப்பமாய் இருக்க வேண்டும்.

இவை யாவற்றின் வெளிச்சத்தில் நம்மில் ஒவ்வொருவரிடத்திலும் ஒரு கேள்வியானது மிக முக்கியமானதாக உள்ளது: "நாம் அவரது சபைக்குள் பிரவேசிப்பதும் அவரது சபையாராக வாழ்வதும் எப்படி?" கிறிஸ்து தொடக்கத்தில் தம்முடைய சபையை எவ்விதத்தில் நிலைநாட்டினார் என்று நாம் கண்டறிந்தால் இந்தக் கேள்விக்கு விடையளிக்கப்படும். கிறிஸ்து உண்மையில் தம்முடைய சபையை எவ்விதம் நிலைநாட்டினார் என்பதை நாம் காணும் பொழுது, இன்றைய நாட்களில் அவரது சபை இல்லாத இடங்களில் நாம் அதை நிலைநாட்ட முடியும் என்பதை இணக்கமாய் ஏற்றுக் கொள்வோம் மற்றும் நாம் எங்கிருந்தாலும் அதன் உண்மையான உறுப்பினர்களாய் வாழ முடியும் என்பதை நாம் உணர்ந்தறிவோம்.

கிறிஸ்து தாம் ஏற்படுத்திய வாக்குத்தத்தத்தைக் காத்துக் கொள்ளும் வகையில் தமது உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து வந்த பெந்தெகொஸ்தே நாளன்று தம்முடைய சபையை நிலைநாட்டினார் (மத். 16:18; அப். 2). இதை அவர் எவ்விதம் செய்தார்?

## சுவிசேஷத்தைப் பிரசங்கித்தலினால்

சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல் என்பதே இயேசு தம் சபையை நிலைநாட்டும் அவருடைய திட்டத்தின் முதல் படியாக இருந்தது. தேவனுடைய கிருபையின் மூலம் வந்த இரட்சிப்பின் "மகிழ்வலைகள்" அல்லது "நற்செய்தி" என்பது பெந்தெகொஸ்தே நாளன்று கூடியிருந்த யூதர்களுக்குப் பொதுவான ஒரு அறிவித்தல் மூலம் அறியச் செய்யப்பட்டது.

வரலாற்றுப் பூர்வமான இந்த நாள் அப்போஸ்தலர்கள்மீது பரிசுத்த ஆவியானவர் அருளப்பட்டதுடன் தொடங்கிற்று. இப்படி அருளப் படுவதைக் கிறிஸ்து வாக்குத்தத்தம் செய்திருந்தார், இப்பொழுது அந்த வாக்குத்தத்தம் நிறைவேற்றப்பட்டிருந்தது (அப். 1:4, 5; 2:1-4). இதன்

விளைவாக அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தினால் வல்லமையளிக்கப்பட்டனர், அங்கிருந்தவர்களின் மாறுபட்ட ஜென்ம பாஷைகளில் அவர்கள் தேவனுடைய அற்புதம் நிறைந்த வசனங்களைப் பேசினார்கள் (அப். 2:6-8, 11). பிறகு, கிறிஸ்து பேதுருவுக்குக் கொடுத்திருந்த வாக்குத்தத்தத்தின் (மத். 16:19) ஒரு பகுதி நிறைவேற்றமாக பேதுரு கிறிஸ்துவின் தெய்வீகத்துவத்தைப் பற்றி ஒரு விவரமான பிரசங்கத்தைப் பிரசங்கித்தார் (அப். 2:14-36, 40).

பேதுரு தமது பிரசங்கத்தின் அறிமுகமாக, அந்த நாளில் நடந்து கொண்டிருந்த நிகழ்ச்சியானது யோவேலினால் கூறப்பட்டிருந்த தீர்க்கதரிசன (அப். 2:15-21) நிறைவேற்றத்தின் இருதயம் போன்ற மையப் பகுதியாகும் என்பதைக் காண்பித்தார். அவரது பிரசங்கப் பொருளானது கிறிஸ்து தம்முடைய அற்புதங்கள் (அப். 2:22), தம்முடைய உயிர்த்தெழுதல் (அப். 2:24), தாம் தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றியமை (அப். 2:25-31, 34, 35), சாட்சியங்கள் (அப். 2:32) மற்றும் பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்தது (அப். 2:33) ஆகியவற்றின் மூலம் ஆண்டவராகவும் கிறிஸ்துவாகவும் எவ்விதம் நிரூபிக்கப்பட்டிருந்தார் என்பதைக் கவனத்திற்குக் கொண்டு வந்தது. “ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார் என்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக் கடவர்கள்” (அப். 2:36) என்ற தீர்மானமான முடிவுடன் பேதுரு தமது உரையை முடித்தார்.

பெந்தெகொஸ்தே நாளன்று உலகத்தின் கண்கள் ரோமப் பேரரசின் செயல்பாடுகளின் மீது அநேகமாகக் கொண்டிருந்திருக்கும், ஆனால் பரலோகத்தின் கண்ணோக்கில், உலகில் மிக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியானது எருசலேமில் நடந்து கொண்டிருந்தது: சுவிசேஷமானது முதன் முறையாகப் பிரசங்கிக்கப்பட்டுக் கொண்டிருந்தது! தேவனுடைய திட்டமிடுதல் யாவும், பழைய ஏற்பாட்டுக் காலத்தின் தீர்க்கதரிசனங்கள் யாவும், கிறிஸ்துவின் உலக வாழ்வு மற்றும் ஊழியம் யாவும் ஒன்று குவிக்கப்பட்டு, கலக்கப்பட்டு, தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தினுடைய பிரசங்கித்தலாக உதித்துக் கொண்டிருந்தது. புதிய உடன்படிக்கையானது செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது, மற்றும் சுவிசேஷமானது அதன் முழு நிறைவில் உண்மைத் தன்மையானது.

இந்த பிரசங்கித்தலின் செய்தியானது பிசாசும் அவனுடைய தூதர்களும் பயந்து நடுங்கவும், பரலோகம் அகமகிழவும் காரணமாயிருந்த ஒரு நிகழ்ச்சியாய் இருந்திருக்க வேண்டும். கிறிஸ்து தம்முடைய சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுதல் மூலமாகத் தம்முடைய சபையை இருத்தல் நிலைக்குக் கொண்டு வந்தார்; மற்றும் இந்தக் காலத்திலிருந்து துவங்கி, அவரது சபையானது உலகின் மற்ற இடங்களில் இதே செய்தியைப் பிரசங்கித்தலினாலேயே நிலைநாட்டப்படும்.

பின்வரும் காட்சியைக் கற்பனை செய்தலினால் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தலின் இன்றியமையாமையைப் பற்றி நினைத்துப் பாருங்கள். தன் வாழ்க்கை முழுவதிலும் தெய்வ பக்தியற்ற ஒரு மனிதர் நியாயத்தீர்ப்பின் நாளில் தேவனுடைய அரியணையின் முன் நிற்கின்றார். அவர் ஒருக்காலும்

கர்த்தருடைய சித்தத்தை நாடியதில்லை, ஒருக்காலும் தேவனை ஆராதித்ததில்லை, ஒருக்காலும் கிறிஸ்தவ வாழ்க்கை வாழும் முயற்சியை மேற்கொண்டதில்லை. அவர் தேவனுக்குத் தாம் நிறைவேற்றும் கடமை ஒன்றுமில்லை என்பது போல் இவ்வாழ்வை வாழ்ந்து, தனது வேலையைச் செய்து, பொழுது போக்கில் ஈடுபட்டு, ஒரு குடும்பத்தை வளர்த்து, மற்றும் தான் வாழ்ந்த சமுதாயத்துடன் இணைந்து சென்றுள்ளார். நியாயத் தீர்ப்பின் அரியணை முன்பாக அவர் நின்று கொண்டிருக்க, அவரிடத்தில் தேவன், "பூமிக்குரிய உங்கள் வாழ்வில் ஒருமுறை நீங்கள் பூமியில் எனது ஊழியத்தில் ஒரு உண்மையான மாறுதலை ஏற்படுத்தினீர்கள்" என்று கூறுகின்றார். அந்த மனிதர் முற்றிலும் திகைப்படைந்தார். அவர், "கர்த்தரே, நான் தேவபக்தியே இல்லாதவனாய் இருந்தேன் என்று நீர் அறிவீர். எனது வாழ்வுக் காலத்தில் நான் ஒரு சில ஆராதனை ஊழியக் கூட்டங்களுக்குச் சென்றுள்ளேன், ஆனால் அவையெவற்றிலும் நான் உண்மையிலேயே ஆராதனை செய்ததில்லை. எனது வாழ்வானது சுயநலமுள்ளதாகவும், எனது சொந்தத் திட்டங்களுக்கும் நோக்கங்களுக்கும் மட்டுமே ஒப்புக் கொடுக்கப் பட்டதாகவும் இருந்தது. பூமியில் உமக்காக ஊழியம் செய்ததாக ஒரு உணர்வே எனக்கு இல்லையே. நான் எப்பொழுது அப்படிப்பட்ட ஒரு மாறுதலை உமது ஊழியத்தில் ஏற்படுத்தினேன்?" என்று பதில் அளித்தார்.

அந்த மனிதரிடத்தில் தேவன், "நீங்கள் வாழ்ந்த நகரின் முக்கிய குறுக்குச் சாலையின் மூலையில் நீங்கள் ஒரு சிறு கடையொன்றைச் சொந்தமாக நடத்தி வந்தீர்கள். ஒரு நாள் உங்கள் கடைக்கு வந்து நின்ற மனிதர் ஒருவர் 'இந்நகரில் கிறிஸ்துவின் சபையார் எங்கு கூடி வருகின்றனர் என்று நீங்கள் கூற முடியுமா?' என்று கேட்டார். 'அவர்கள் இங்கு அருகேதான் கூடி வருகிறார்கள்' என்று நீங்கள் அவருக்குக் கூறி சபை கூடும் இடத்திற்குச் செல்லும் வழியைக் காட்டினீர்கள். அந்த மனிதர் எனது பிரசங்கியார்களில் ஒருவராயிருந்தார். அவர் எனது கிருபையின் சுவிசேஷத்தைக் கேட்டு அதன் மூலம் எனது இரட்சிப்பின் பணியை உணர்ந்து பதில்செயல் செய்யக் காத்திருந்த கூட்டத்தாருக்கு அன்று காலை பிரசங்கிக்கச் சென்று சேர்ந்தார். இதை அவ்வேளையில் நீங்கள் அறியாது இருந்தீர்கள். ஆனால் இவ்வுலகத்தில் நடைபெற்ற மிக மேன்மையான பணியில் நீங்கள் ஒரு சிறிய இணைப்புக் கண்ணியாக இருந்தீர்கள். உலகமானது வாஷிங்டன் D.C.யிலோ அல்லது வேறு சில நாட்டுத் தலைநகரங்களிலோ என்ன நடந்ததோ அதுவே உலகில் நடக்கும் மிக முக்கியமான நிகழ்ச்சி என்று நினைத்தது, ஆனால் எனது இரட்சிப்பின் சுவிசேஷமானது சபையின் அந்தச் சிறு கட்டிடத்தினுள் பிரசங்கிக்கப்பட்டதே மிக மிக முக்கியமான நிகழ்ச்சியாகும். நீங்கள் வழிகாட்டிய செயலானது எனது பிரசங்கியார்களில் ஒருவரை ஒரு மக்கள் கூட்டத்திற்குப் பிரசங்கிக்கக் கூடியவராக்கிற்று. அதுவே நீங்கள் செய்த எல்லாவற்றிலும் மிகப் பெரிய செயலாக இருந்தது" என்று கூறுகின்றார்.

பவுல், "எப்படியெனில், தேவஞானத்துக்கேற்றபடி உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில், பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப்

பிரியமாயிற்று" (1 கொரி. 1:21) என்று எழுதினார். அப். 2ல் பேதுருவின் பிரசங்கித்தலானது கிறிஸ்துவின் இறுதி உயிலையும் ஏற்பாட்டையும் செயல் விளைவுக்குக் கொண்டு வந்து, கிறிஸ்துவின் யுகத்தைத் தொடங்கி வைத்தது. முனைவர் ஜேம்ஸ் டி. பேல்ஸ் அவர்கள் அப்போஸ்தலருடைய நடபடிகள் 2ஐ "வேதாகமத்தின் அச்சைப் பொருத்தும் இடம்" என்று அழைத்துள்ளார்; அப். 2க்கு முன் நடந்தவை யாவும் அதற்கு எதிர்நோக்கிக் காத்திருந்தன, மற்றும் அப். 2ஐத் தொடர்ந்து நடந்தவை யாவும் அதைப் பின்னோக்கிப் பார்க்கின்றன. கேள்விக்கிடமின்றி, அவர் சரியாகவே கூறினார்.

சபையின் தொடக்கம் என்பது சுவிசேஷத்தைப் பிரசங்கித்தலைச் சுற்றியே சுழன்றது. இந்த பெந்தெகொஸ்தே நாளன்று நிலைநாட்டப்பட்ட கிறிஸ்துவின் சபையானது பேதுரு பிரசங்கித்த அதே சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதால் மட்டுமே அது (சபை) இல்லாத இடங்களில் நிலை நாட்டப்பட முடியும். இதை வேறொரு வழியில் விளக்கப்படுத்துவதற்கு, ஒரு விவசாயி வளர்க்கும் ஒரு வகைத் தக்காளியை இன்னொரு விவசாயியும் வளர்க்க வேண்டுமானால், அவர் அந்த விவசாயி போலவே அதே வகைத் தக்காளி விதையைப் பயிரிட்டால் மாத்திரமே வளர்க்க முடியும். கிறிஸ்து கட்டிய அதே வகையிலான சபையை நாம் பெறுவதற்கு தொடக்கத்தில் கிறிஸ்து எந்த சுவிசேஷத்தினால் கட்டியெழுப்பினாரோ அதே சுவிசேஷத்தை நாம் பிரசங்கிக்க வேண்டும்.

## சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவதினால்

தம்முடைய சபையை நிலைநாட்டுவதற்கான இயேசுவின் திட்டத்தில், சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிதல் என்பதே இரண்டாவது படியாய் இருந்தது. பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷத்திற்கு அங்கிருந்த மக்கள் கீழ்ப்படியா திருந்தால் அவரது சபையானது ஒருக்காலும் நிலைநாட்டப்பட்டிருக்காது.

பேதுரு தமது பிரசங்கத்தின் ஆதாரத்தை நேர்மையான எல்லா இருதயங்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய குறிப்பானதொரு முடிவில் இருந்து எடுத்தார்: இயேசு ''ஆண்டவராகவும் கிறிஸ்துவாகவும்'' ஏற்படுத்தப்பட்டிருந்தார் (அப். 2:36). பிறகு, கேட்டவர்களின் ஒரு கூட்டத்தார், "நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" (அப். 2:37) என்று கதறினார்கள். தேவ வசனத்தினால் அவர்களுடைய இருதயங்கள் "குத்தப்பட்டன" அல்லது உடைந்தன; பிரசங்கிக்கப்பட்ட வசனத்தின் மூலமாக பரிசுத்த ஆவியானவரால் அவர்கள் குற்றம் உணர்த்தப் பட்டவர்களாயிருந்தனர். பேதுரு தமது பிரசங்க முறைமையினால் அவர்களிடத்தில் குற்ற உணர்வை உருவாக்கவில்லை; அவர் ஆத்துமாவை யும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதுமாயுள்ள வசனத்தை வெளிப்படுத்தியதன் மூலம் அதை (குற்றத்தை), வெளிக்கொணர்ந்தார் (எபி. 4:12).

அடித்து வீழ்த்தப்பட்ட மனச்சான்றுகளுடனும், நொறுக்கப்பட்ட இருதயங்களுடனும் கதறிய யூதர்களுக்கு பேதுரு பின்வரும் பதிலைக்

*கொடுத்தார்: "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக் கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப். 2:38). கிறிஸ்து தம்முடைய அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்த தமது நிறைவுக் கட்டளையில் இரட்சிப்புக்கு மூன்று நிபந்தனைகளைக் குறித்திருந்தார்: விசுவாசம், மனந்திரும்புதல் மற்றும் ஞானஸ்நானம் (மாற். 16:15, 16; லூக். 24:46, 47; மத். 28:19, 20). அவர்களின் கேள்விக்குப் பேதுரு அளித்த பதிலில் அவர் விசுவாசத்தைப் பற்றிக் குறிப்பிடவில்லை, ஏனென்றால் வழிகாட்டுதல்களுக்காக அவர்கள் கதறியதென்பது அவர்கள் கேட்டிருந்த பிரசங்கத்தினால் விசுவாசம் உண்டாக்கப் பட்டிருந்ததைச் சுட்டிக்காட்டியது. அவர்கள் இன்னும் நிறைவேற்ற வேண்டிய இரு நிபந்தனைகளை அவர் குறிப்பிட்டார்: மனந்திரும்புதல் மற்றும் ஞானஸ்நானம். அவர்கள் பெற்றுக் கொள்ளும்படி பெருவிருப்புடன் கதறிய மன்னிப்பு என்பது அந்தக் கட்டளைகளுக்கு அவர்கள் இணங்கும் பொழுது கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக அளிக்கப்படும். பிறகு, இரட்சிப்புப் பெற்ற மக்கள் என்ற வகையில் அவர்களுக்குப் பரலோகத்தின் பரிசாகப் பரிசுத்த ஆவியானவர் அருளப்படுவார்.*

*"அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்" (அப். 2:41) என்று லூக்கா பதிவு செய்தார். சபையின் அஸ்திபாரம் என்ற வகையில் அப்போஸ்தலர்கள் அதன் பாகமாக சபையில் அமைக்கப்பட்டிருந்தனர் (எபே. 2:20). இந்த மூவாயிரம் பேர் சுவிசேஷத்திற்குத் தங்கள் கீழ்ப்படிதலை நிறைவு செய்திருக்கையில், ஆவிக்குரிய வகையில் அவர்கள் பரிசுத்த ஆவியானவரால் இயேசு கிறிஸ்து மற்றும் அப்போஸ்தலர்கள் என்ற அஸ்திபாரத்தின்மீது ஒன்றுகூட்டி ஒட்டிக் கட்டப்பட்டு அமைந்தனர் (1 கொரி. 3:11). இவ்விதமாக சபை பிறந்தது அல்லது இருத்தலுக்குக் கொண்டு வரப்பட்டது. அந்த நாளில் இருந்து இது வரையிலும், அந்த மூவாயிரம் பேர் கீழ்ப்படிந்திருந்த அதே சுவிசேஷத்திற்கு எந்த வேளையிலும் கீழ்ப்படியும் எவரொருவரையும் அவர் அதே சபையில் சேர்த்துக் கொள்கின்றார், மற்றும் இயேசு, அப்போஸ்தலர்கள் என்ற அஸ்திபாரத்தின் மேல் அமைந்துள்ள சபை என்ற மேல் கட்டிடமானது உயர்ந்து வளருகின்றது.*

*1993 மே மாதத்தில், உக்ரைன் நாட்டில் டோனெட்ஸ்க் என்ற இடத்தில் கிறிஸ்துவுக்கென்று நடைபெற்ற ஒரு முகாமில் இருபத்தைந்து கிறிஸ்தவர் கள் பங்கேற்றனர். அந்த நகரில் கர்த்தருடைய சபையை நிலைநாட்டுவதே எங்கள் நோக்கமாயிருந்தது. நாங்கள் தனிநபர் போதனை, தொலைக் காட்சிப் பிரசங்கம் மற்றும் விரிவுரை அறையொன்றில் இரவு வேளைப் பிரசங்கித்தல் ஆகியவற்றைக் கலந்து செயல்பட்டோம். எங்களது பிரசங்கித்தல் மற்றும் போதித்தல் ஆகியவற்றில் நாங்கள், பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு பிரசங்கித்த அதே சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படியாகவே நாடினோம். பேதுரு செய்த அதே வழிமுறையின்படியே நாங்களும் மக்களை - விசுவாசம், மனந்திரும்புதல் மற்றும் ஞானஸ்நானம் ஆகிய*

வற்றின் மூலம் - கிறிஸ்தவர்களாகும்படி கேட்டுக் கொண்டோம். அந்தப் பத்து நாள் முகாமில், 122 மக்கள் கிறிஸ்தவர்களாவதற்கான தங்களின் விருப்பத்தைத் தெரியப்படுத்தினர். ஒரே இரவில் முப்பத்தி ஐந்து மக்கள் முன் வந்தனர். ஞானஸ்நானம் பெற வந்தவர்கள் அனைவரும் நாமகரணக் கூட்டமொன்றில் பிரவேசிக்கவில்லை என்பதை நாங்கள் வலியுறுத்தினோம்; மாறாக கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு அவர்களுடைய உண்மையான கீழ்ப்படிதலின் மூலம் கர்த்தரால் அவர்கள் பெந்தெகொஸ்தே நாளன்று அவரால் நிலைநாட்டப்பட்ட அவருடைய சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

இந்தப் புதிய கிறிஸ்துவின் சபை ஒரு திரையரங்கத்தின் இரண்டாம் மாடியைக் கூடிவரும் இடமாக வாடகைக்கு பெற்றனர். அவர்களுடன் நாங்கள் இருந்த கடைசி கர்த்தருடைய நாளில், வாடகைக்குப் பெறப்பட்டிருந்த அந்த அறையானது அதன் கொள்ளளவுக்கும் மேலாக ஜனக்கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. நாங்கள் ஒன்றுகூடிக் கர்த்தருடைய பந்தியில் பங்கேற்று, ஒன்றுகூடிப் பாடி, ஒன்றுகூடி ஜெபித்து, எங்கள் வருமானத்திலிருந்து கொடுத்து, சுவிசேஷம் பிரசங்கிக்கப் படுதலைக் கேட்ட பொழுது கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் நமக்குக் கிடைத்த இரட்சிப்பில் அகம் மகிழ்ந்தோம்.

குறுகிய பத்து நாட்களில், சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல் மற்றும் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிதல் ஆகியவற்றின் மூலம் நேர்மையான இருதயங் கொண்ட மனிதர்களைக் கொண்டு வருவதனால் டோனெட்ஸ்கில் சபையானது நிலைநாட்டப்பட்டது. அப். 2ல் பதிவு செய்யப்பட்ட படியான, அன்பான நமது கர்த்தர் பெந்தெகொஸ்தே நாளன்று நிலைநாட்டிய சபையினுள் இந்த 122 பேர்களும் சேர்த்துக் கொள்ளப் பட்டனர்.

ஒருவேளை நாம் இந்த முகாமை இதன் பிரசங்கித்தல், போதித்தல் மற்றும் கூட்டங்களுடன் நடத்தியிருந்து, ஆனால் ஒருவர்கூட சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியவில்லை என்று வைத்துக் கொள்வோம். அப்பொழுது, டோனெட்ஸ்கில் சபையானது நிலைநாட்டப்பட்டிருக்குமா? இல்லை என்பதே பதில் என்பது தெளிவு, அது நிலைநாட்டப்பட்டிருக்காது. நல்ல நோக்கங்கள், விரிவான திட்டங்கள் மற்றும் தனிப்பட்ட அர்ப்பணிப்பு ஆகியவையெல்லாம் இருந்தாலும், மக்கள் புதிய ஏற்பாட்டு சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாத வரையிலும் சபையானது நிலவ முடியாது.

கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு மூவாயிரம் பேர் கீழ்ப்படிந்த போது அவர் (கிறிஸ்து) தம்முடைய சபையை நிலை நாட்டினார். பேதுரு பிரசங்கித்த மற்றும் மக்கள் கீழ்ப்படிந்த அதே சுவிசேஷத்தைப் பிரசங்கித்தலின் மூலமாக இன்றைய நாட்களில் அவருடைய சபையானது இல்லாத இடங்களில் எங்கு வேண்டுமானாலும் நிலைநாட்டப்பட முடியும். தொடக்கத்தில் கிறிஸ்து இவ்வழி முறையிலேயே தமது சபையை நிலைநாட்டினார். இன்றைய நாட்களிலும் இது ஒன்றே சபையை நிலைநாட்டக் கூடிய வழிமுறையாய் உள்ளது.

## சுவிசேஷத்தின்படி வாழ்வதினால்

*தம்முடைய சபையை நிலைநாட்டுவதற்கான இயேசுவின் திட்டத்தில், சுவிசேஷத்தின்படி வாழ்தல் என்பதே மூன்றாவது படியென்று அழைக்கப்பட முடியும். சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்த மக்கள் அதை அன்றாடம் வாழ்ந்தனர்; இவ்விதமாகக் கிறிஸ்துவின் சபையானது ஜீவனுடன் துடித்துக் கொண்டிருந்தது.*

*கிறிஸ்தவர்களாகியிருந்தவர்களைப் பற்றி லூக்கா, ''அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்'' (அப். 2:42) என்று கூறினார். அவர்கள் கிறிஸ்துவின் சபையாராகி யிருந்ததுடன், அந்த நாள் முதற் கொண்டு கிறிஸ்துவின் சபையாராக வாழ்ந்துமிருந்தார்கள்.*

*இந்தத் தொடக்க காலக் கிறிஸ்தவர்களின் வாழ்வானது சுவிசேஷத்தை வாழ்ந்து காட்டுதல் என்பது ஒப்புக் கொடுத்தலைக் கேட்டுக் கொண்டது என்பதை விளக்கப்படுத்துகின்றது. அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசம், அந்நியோந்நியம், அப்பம்பிட்குதல் மற்றும் ஜெபம் பண்ணுதல் ஆகியவற்றிற்குத் தங்களையே ஒப்புக் கொடுத்திருந்தனர். அவர்கள் தொடங்கிய பின்பு விரைவாகப் பயனற்று வெளியேறிவிடாதிருந்தனர்; அவர்கள் தேவனுடைய சத்தியத்திற்குத் தங்களை ஒப்புக் கொடுக்கத் தொடங்கி, பின்பு அதில் உறுதியாய் நிலைத்திருந்தனர். அவர்கள் நிரந்தரமாக தேவனை ஆராதித்தனர்; ஆராதனை என்பது அவர்களுடைய வாழ்வின் வழிமுறையாயிற்று. கிறிஸ்தவராகுதல் என்பது ஒரு புதிய சாலைக்குத் திரும்பிப் பின் தங்கள் வாழ்நாள் முழுவதும் அதில் நடப்பது போல் இருந்தது.*

*சுவிசேஷத்தை வாழ்ந்து காட்டுதல் என்பது பரிவிரக்கத்தை வேண்டிக் கேட்டது. லூக்கா, ''காணியாட்சிகளையும், ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத் தக்கதாக அவைகளில் எல்லாருக் கும் பகிர்ந்து கொடுத்தார்கள்'' (அப். 2:45) என்று கூறினார். அவர்கள் மற்றவர்களிடம் "நீங்கள் எனக்கு உதவி செய்வீர்களா?" என்று கேட்க வில்லை, மாறாக தங்களிடையே இருந்த வறுமைப்பட்டவர்களிடத்தில் அவர்கள், ''நான் உங்களுக்கு உதவலாமா?'' என்று கேட்டார்கள். பரிவிரக்கமுள்ள கிறிஸ்து அவர்களுக்குள் வாழ்ந்தார், மற்றும் அந்தப் பரிவிரக்கமானது அவர்களின் நோக்கங்களிலும் செயல்பாடுகளிலும் வெளிப்படுத்தப்பட்டது.*

*ஆதிக் கிறிஸ்தவர்கள் சுவிசேஷத்தின் ஒருமைப்பாட்டைக் காத்துக் கொண்டதன் மூலமாகவும் அதை வாழ்ந்து காட்டினர். லூக்கா, "விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள்'' (அப். 2:44) என்று எழுதினார். பிற்பாடு அவர், ''விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள் ..." (அப். 4:32) என்றும் கூட எழுதினார். அவர்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்த பொழுது தேவனுடைய*

ஆவியானவரால் ஆவிக்குரிய ஒருமைப்பாட்டில் ஒன்றாகப் பிணைக்கப் பட்டனர், மற்றும் அவர்கள் ஆவியானவரின் செய்தியின்மேல் கொண்ட பற்றுறுதியினாலும், மாயமற்ற சுயநலமின்மையாலும், ஒருவர்மீது ஒருவர் கொண்டிருந்த உண்மையான அக்கறையினாலும் அந்த ஐக்கியத்தைப் பராமரித்துக் காத்தனர்.

கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கவனித்து, அதற்குக் கீழ்ப்படிந்து, அதை வாழக் கூடிய விருப்பமுள்ள மக்கள் இருக்கும் இடங்களிலெல்லாம் கிறிஸ்துவின் சபையானது நிலவ முடியும். பல ஆண்டுகளுக்கு முன்பு நான் ஹார்டிங் கல்லூரியில் படித்த பொழுது, சில வேளைகளில் நான் அர்க்கன்சாஸில் உள்ள ஸ்பிரிங்ஃபீல்டு என்ற இடத்திற்குச் சென்று பிரசங்கித்துள்ளேன். அங்கிருந்த சபையானது சிறியதாய் இருந்தது, ஆனால் அளவில் உள்ள குறைபாட்டை அது ஆவியில் நிறைவு செய்தது. இந்த சபையானது ஏறக்குறைய பன்னிரெண்டு பெண்களைக் கொண்டதாக இருந்தது. சபையில் ஆண்களே இல்லாத நிலையில் பெண்கள் தாங்களாகவே ஊழியத்தைச் செய்ய வேண்டியதாயிருந்தது. என்னுடன் அறையில் தங்கியிருந்த டெர்ரி ஸீமென் என்பவர் என்னுடன் வந்து, நாங்கள் ஆராதனை முழுவதையும் நடத்துவதுண்டு. நான் பிரசங்கிக்க டெர்ரி அவர்கள் பாடலை வழிநடத்தி, ஜெபம் செய்து, கர்த்தருடைய பந்தியை வழங்குவார். டெர்ரி அவர்கள் பிரசங்கிக்கையில் ஆராதனையின் மற்ற செயல்களை நான் ஏற்று நடத்துவேன்.

இந்தப் பெண்கள் சிரமமான சூழ்நிலையில் இருந்தனர். அவர்களுக்கு உதவி செய்ய யாரும் இல்லை, ஆனால் அவர்கள் கிறிஸ்துவின் சபையாக தங்களை உறுதியுடன் தொடர்ந்து ஒப்புக் கொடுத்து நிலைத்திருந்தனர். புதன் கிழமை இரவுகள் போன்ற கூட்டங்களில் அவர்களுக்குப் பிரசங்கியார் இல்லாத வேளையில் அவர்கள் ஒரு கிறிஸ்தவப் பெண் குழுவாயிருந்து பாடல் பாடி, ஜெபம் செய்து, வேதாகமத்தைப் படிப்பார்கள். சூழ்நிலைகள் மிகச் சிறந்தவைகளாக இல்லையென்றாலும் கூட அவர்கள் சுவிசேஷத்தை தொடர்ந்து வாழ்ந்து காட்டினர்.

நீங்கள் எப்பொழுதாவது அர்க்கன்சாசின் ஸ்பிரிங்ஃபீல்டுக்குச் சென்றால், அந்தக் கிறிஸ்துவின் சபையார் இன்னமும் கூடி வருவதையும் ஆராதிப்பதையும் நீங்கள் காண்பீர்கள். அந்த சபையானது பெலமுள்ள தாகவும் செயல்படுவதாகவும் இருப்பதை நீங்கள் காண்பீர்கள். இன்னமும் அது பெரிதாகவில்லை, ஆனால் உண்மையுள்ளதாகவும் உறுதியுள்ள தாகவும் அது உள்ளது. கடினமான சூழ்நிலையிலும் கூட சுவிசேஷத்தை தினமும் வாழ்ந்து காட்டும் அந்தப் பெண்கள் இல்லையென்றால் ஸ்பிரிங்ஃபீல்டில் உள்ள சபையானது அநேகமாக இருந்திருக்காது. சமுதாயத்தில் ஒரு சபையாய் வாழ்ந்திருப்பதால் ஏற்பட்ட கஷ்டங்களை அவர்கள் அறிந்திருந்தார்கள்.

பல மக்கள் ஞானஸ்நானப்படுத்தப்படும் முகாம்களைப் பற்றி நாம் அடிக்கடி கேள்விப்படுகின்றோம். அவர்கள் தேவனுடைய ஆவியானவரால் தேவனுடைய இராஜ்யத்தில் பிறந்தவர்களாகின்றனர், கிறிஸ்துவின் சபையானது கூடி வரத் தொடங்குகின்றது. அந்த இடத்தில் சபை

நிலைநாட்டப்பட்டது போலத் தோன்றுகின்றது. இருப்பினும் முகாம் முடிந்து முகாம் நடத்தியவர்கள் சென்ற பிறகு, புதிய கிறிஸ்தவர்கள் நம்பிக்கையிழந்துவிடுகின்றனர். விரைவிலேயே, ஆராதனைக்கு வருபவர் களின் எண்ணிக்கை படிப்படியாகச் சுருங்குகின்றது, கடைசியில் சபையானது கூடிவருதல் நின்று போகின்றது. ஒவ்வொருவரும் சுவிசேஷத்தை வாழ்ந்து காட்டுவதிலிருந்து வெளியேறி விடுகின்றனர், அந்த இடத்தில் சபை இல்லாமல் போகின்றது. சுவிசேஷம் வாழ்ந்து காட்டப்படாத இடத்தில் கிறிஸ்துவின் சபையானது பிழைத்திருக்க முடியாது.

சுவிசேஷத்தை வாழ்ந்து காட்டும் மக்களைக் கொண்டு கிறிஸ்து தம்முடைய சபையைப் பெந்தெகொஸ்தே நாளன்று நிலைநாட்டினார், இன்றைய நாட்களில் அவருடைய சபையானது அது இல்லாத இடங்களில் இதே வழிமுறையிலேயே நிலைநாட்டப்படுகின்றது. இந்த விதிக்கு எந்த விதிவிலக்கும் இருப்பதில்லை. சபையானது நமது சமுதாயத்தில் வாழ வேண்டுமென்றால், நாம் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து அதை வாழ்ந்து காட்ட வேண்டும்.

## முடிவுரை

அப்படி என்றால், கிறிஸ்து தம்முடைய சபையை எவ்விதம் நிலைநாட்டினார்? சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுதல், அது கீழ்ப்படியப் படுதல் மற்றும் அது வாழப்படுதல் ஆகியவற்றின் மூலமே அதை அவர் செய்தார். நாம் செய்ய வேண்டியதும் நமக்குத் தெளிவாயிருக்கிறது: இன்றைய நாட்களிலும் சபையானது இதே வழிமுறையில் தான் நிலை நாட்டப்படுகின்றது. அதே சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டு, அதே சுவிசேஷம் கீழ்ப்படியப்பட்டு, அதே சுவிசேஷம் வாழப்படுகின்ற இடத்தில் பெந்தெகொஸ்தே நாளன்று நிலை நாட்டப்பட்ட அதே சபை நிலைநாட்டப்பட்டு வாழ்கின்றது.

புதிய ஏற்பாட்டின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து, அதை அன்றாடம் வாழுங்கள், நீங்கள் கிறிஸ்துவின் சபையாய் இருப்பீர்கள்.

திருமணப் பிரசங்கம் செய்த ஒரு பிரசங்கியாரைப் பற்றிய கதை யொன்று கூறப்படுவதுண்டு. அவர் பின்வரும் சிந்தனையை வலியுறுத்திக் கொண்டிருந்தார்: “நீங்கள் தேவனுடைய திட்டத்தை அறிவீர்கள்; ஒரு பெண்ணுக்கு ஒரு ஆண், மற்றும் ஒரு ஆணுக்கு ஒரு பெண் மாத்திரமே. அது அவருடைய திட்டமாய் உள்ளது. அதன் மீது நீங்கள் முன்னேற்றம் எதையும் செய்ய இயலாது.'' ஏறக்குறைய ஒரு மணி நேரம் அளவாக அவர் இக்கருத்தையே மேலும் மேலும் கூறிக் கொண்டிருந்தார். ஆராதனை முடிந்த போது அவர் கதவருகில் நின்று ஒவ்வொருவரையும் வாழ்த்திக் கொண்டிருந்தார், அவர் அப்பொழுது திருமணமாகாத இரு பெண்களைக் கண்டார். இந்தப் பெண்களுக்குத் திருமணமாகும் வாய்ப்பு கடந்து விட்டிருந்தது என்பது தெளிவாய்த் தெரிந்தது. அவர்கள், “பிரசங்கியார் அவர்களே, நாங்கள் அதன் மீது முன்னேற்றம் எதுவும் செய்ய

விரும்பவில்லை, நாங்கள் அதனுள் சென்று சேரவே விரும்புகின்றோம்" என்று கூறினார்கள்.

கிறிஸ்துவின் சபையைப் பற்றிய உங்கள் உணர்வுகள் இது போன்றதாக இல்லையா? நீங்கள் அதை முன்னேற்றப்படுத்த முடியாது. அவர் உங்களைப் பற்றி உங்களை விடச் சிறந்த முறையில் அறிகின்றார். அவர் தம்முடைய சபையை உங்களது தேவைகளுக்காக வடிவமைத்துள்ளார். கிறிஸ்துவின் சபையில் ஏற்படுத்தப்படும் எந்த மாற்றமும் அதன் தெய்வீகத்துவ முழுமைப் பண்பை நீக்கிப் போட்டு, அதற்குப் பதிலாக மனித பலவீனத்தை இடுகின்றது.

கிறிஸ்துவை அவர் இருக்கிற வண்ணமாகவே ஏற்றுக் கொள்ளுங்கள், மற்றும் அவருடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து அதை வாழ்ந்து காட்டுவதின் மூலம் அவர் கட்டிய அதே சபையாராகுங்கள்.

# 1

# "குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும்படிக்கு"

## (தீத்து 1:1-9)

*தொடர்ந்துவரும் பிரசங்கங்களுக்குப் பின்னணிக் கருத்துக்களை கொடுப்பதே இந்தப் பிரசங்கத்தின் நோக்கம். இந்தப் பிரசங்கத்தை நீங்கள் ஆயத்தப்படுத்தும்போது உங்கள் உள்ளூர் சபையின் தேவைகளை சிந்தித்து ஜெபத்திலே வையுங்கள். ஒரு உள்ளூர் சபையில் பிரசங்கிக்கப்பட்ட பிரசங்கம் எல்லா உள்ளூர் சபைகளுக்கும் ஒரேமாதிரி பொருந்தாது. எனவே ஒரு உள்ளூர் சபைக்கு நான் பண்ணின ஒரு பிரசங்க அணுகுமுறை வெறும் மாதிரியாக மட்டுமே இங்கு கொடுக்கப்பட்டுள்ளது.*

நல்லதொரு தலைமைத்துவம் தேவனுடைய ஊழியத்துக்கு எப்போதுமே இன்றியமையாததாக இருந்துள்ளது. பழைய ஏற்பாட்டில் தேவனுடைய மக்களை வழிநடத்த வேண்டியவர்கள் முறையான பாதைகளில் நடத்தாத காரணத்தால்தான் மிகவும் புண்படும் வார்த்தைகளைக் கொண்டு கடிந்து கொள்ளப்பட்டார்கள். புதிய ஏற்பாட்டில் இயேசு மத்தேயு 23ம் அதிகாரத்தில், ஆவிக்குரிய தலைவர்களாயிருந்து வழிநடத்த வேண்டிய வேதபாரகர்களும் பரிசேயர்களும் அப்படிச் செய்யாதபடியால் கர்த்தர் அவர்களை உச்சக்கட்ட கடின வார்த்தைகளைச் சொல்லிக் கடிந்து கொண்டார். தலைமைத்துவம் குறைவுபடும் போதெல்லாம் அல்லது திருப்திகரமாக அமையாத போதெல்லாம் கர்த்தருடைய காரியம் பாதிக்கப்படும்.

தீத்து 1:5ல், பவுல் வாலிப பிரசங்கியாராகிய தீத்துவுக்கு, "நீ குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும்படிக்கும், நான் உனக்கு கட்டளையிட்டபடியே பட்டணங்கள்தோறும் மூப்பர்களை ஏற்படுத்தும்படிக்கும், உன்னை கிரேத்தா தீவிலே விட்டு வந்தேனே"[1] என்று சொன்னார். இந்தப் பாடத்தின் வலியுறுத்தல் இங்கே (*உள்ளூர் சபையின் இருப்பிடப்பெயர்*) "குறைவாயிருக்கிறவைகளை" *மூப்பர்களை ஏற்படுத்துவதன் மூலம்* ஒழுங்கு செய்வதற்காகவே. (தேவையிருப்பதைச் சொல்லி, புதிய அல்லது ஏற்கனவே உள்ள மூப்பர்களுடன் கூடுதலாக மூப்பர்களை ஏற்படுத்தும் நடைமுறையை பின்பற்றுவதையும் குறிப்பிடுங்கள்.) இருப்பினும், மூப்பர்களை ஏற்படுத்துவது (*நடைமுறை விவரிக்கப் பட்டதுபோல*) அவ்வளவு எளிதான காரியம் அல்ல. மூப்பர்களை ஏற்படுத்துவது அவ்வப்பொழுது எதிர்மறை விளைவுகளையே உள்ளூர் சபைகளில் கொண்டு வருகிறது. உணர்வுகள் பாதிக்கப்படலாம். கடின வார்த்தைகள் பயன்படுத்தப்படலாம். நாம் எல்லாரும் கிறிஸ்தவர்களாக நடந்து கொள்ளாத பட்சத்தில், மூப்பர்களை

ஏற்படுத்துவது உள்ளூர் சபைக்கு உதவிகரமாயில்லாமல் பாதிப்பையே ஏற்படுத்தக் கூடும்.

இந்த தொடர் பாடங்கள் மூப்பர்களை தேர்ந்தெடுத்து ஏற்படுத்துவதில் உண்டாகும் பரபரப்பான வேலைக்கு உங்களை ஆயத்தப்படுத்த உதவிபுரியும். இந்தப் பாடங்களில் எந்தவித ஒளிவுமறைவுமில்லை, மனித கற்பனை நுழைக்கப்படவில்லை. தேர்ந்தெடுத்தல் *உங்களாலே, உங்கள் உள்ளூர் சபையாலே* நடைபெறவேண்டும். அதுதான் தேவனுடைய திட்டம்.

இந்தப் படைப்புகள் தலைமைத்துவத்தின் மேய்ப்பனுக்குரிய - இயல்பை வலியுறுத்துகிறது. முதலாவதாக, சில பொதுவான விஷயங்களை ஆராய்வோம். நமது நோக்கத்தை நாம் எப்படி நிறைவேற்றுவது?

## உள்ளூர் சபை செய்ய வேண்டியது என்ன?

**மூப்பர்ஸ்தானம் மதிப்பிற்குரியதாய் நிலைநிறுத்தப்பட வேண்டும்**

''குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்துகிற'' விஷயத்தில் ஒரு முழுமையான உள்ளூர் சபையாக என்ன செய்யக்கூடும் என்பதை சிந்திக்கத் துவங்குவோமாக. முதலாவதாக, மூப்பர் ஸ்தானத்தை மதிப்பிற்குரியதாய் கடைப்பிடிக்கவேண்டும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன் - குறிப்பிட்ட தனிமனிதனையல்ல, பொதுவாக மூப்பர்களின் ஸ்தானத்தை. 1 தீமோத்தேயு 5:17ல் பவுல், "நன்றாய் விசாரணை செய்கிற மூப்பர்களை, விசேஷமாகத் திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை, இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ண வேண்டும்" என்று சொன்னார். "இரட்டிப்பான கனம்'' என்பது மதிப்பு - மரியாதையைச் செலுத்துவதும் முழுநேர ஊழியம் செய்யும் மூப்பராக இருப்பின் அவருக்கு சம்பளம் கொடுப்பதிலும் கனப்படுத்த வேண்டும். பெரும்பாலான மூப்பர்கள் முழுநேர ஊழியப் பணியில் இல்லாத காரணத்தால், அவர்கள் இரண்டாவது "கனத்தைப்" பெறுவதில்லை; ஆனால் எல்லா மூப்பர்களும் முதலாவது ''கனத்தை'': மரியாதையைப் பெறவேண்டும்.

பில் காஸ்பி எனும் நகைச் சுவையாளர் ஒருமுறை குடும்பத் தலைமைத்துவத்தைக் குறித்துக் குறிப்பிடுகையில், "வேலை என்ன என்பதை நான் பார்த்திருக்கிறேன், ஆனால் அது எனக்கு வேண்டாம்'' என்று சொன்னார். வருஷங்களினூடே மூப்பர்களின் கடைமைகளை நிறைவேற்றுகிற நல்ல மனுஷர்களை நான் ''பார்த்திருக்கிறேன்.'' மூப்பர்கள் எடுக்கும் தீர்மானத்துக்கு குற்றச்சாட்டு எழுவதை அவர்கள் பார்த்திருக்கிறார்கள். அதன் விளைவாக அவர்கள் தொடர்ந்து (மூப்பர்) பணியை செய்ய மறுக்கிறார்கள். இப்படிப்பட்ட எண்ணங்களை மாற்ற ஒரேவழி நமது மூப்பர்களை மதிப்பதும், அன்புகூருவதும், அக்கறை காட்டுவதும் அவர்களுக்கு அவசியமானது. எபிரெயர் 13:17 போதிக்கிறது, "உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்க மாட்டாதே." நமது மூப்பர்களைக் குறித்த நல்ல எண்ணம் நமக்கு இருக்குமேயானால் அது அவர்களின் பணியை

*சந்தோஷத்தோடே* நடப்பிக்கும்படி அவர்களை வெகு தொலைவுக்கு கொண்டு செல்லும்.

### தேர்ந்தெடுக்கும் நடைமுறையில் உங்களையும் உட்படுத்திக் கொள்ளுங்கள்

அபூர்வமான சிலாக்கியங்கள் கிறிஸ்தவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டுச் சட்டபடி, தேவனுடைய மக்கள் அவர்களுடைய மூப்பர்களை தேர்ந்தெடுக்கிற விஷயத்தில் அவர்கள் உட்படுத்தப்படுவதில்லை. அப்போஸ்தலர்கள் உள்ளூர் சபையைப் பார்த்து, "ஆதலால் சகோதரரே பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற எழுபேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள், அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம்" என்று சொன்னதை அவர்கள் கேட்டபோது, அநேகமாக அவர்கள் ஆச்சரியப் பட்டிருக்கக் கூடும் (நடபடிகள் 6:3). அப்போஸ்தலர்கள், *அங்கத்தினர்களே* தேர்ந்தெடுக்க வேண்டும் எனக்கேட்டுக் கொண்டார்கள். அதேபோல, நீங்களும் நானும் நம் நடத்துனர்கள் யார் என்பதை தீர்மானிக்க உதவிசெய்ய வேண்டும்.

இது சபையின் பிரயாசமாயிருக்க வேண்டும். இதை நடைமுறைப் படுத்துவதில் சிலர் தங்களை உட்படுத்திக் கொள்வதில்லை என்று எனக்குத் தெரியும். மற்றவர்கள் அதைக் கவனித்து கொள்வார்கள் என்கிற எண்ணத்துடன் அவர்களிடமே அதை விட்டு விட்டார்கள். தயவுசெய்து அப்படியிருக்காதீர்கள். யோசித்து இதற்காக ஜெபம் பண்ணுங்கள். 1 தீமோத்தேயு 3லும் தீத்து 1லும் சொல்லப்பட்ட மூப்பர்களின் தகுதியாம்சங்களை வாசியுங்கள், மறுபடியும் வாசியுங்கள். அந்தத் தகுதியாம்சங்களின் வெளிச்சத்தில் சபையின் ஆண் அங்கத்தினர்களைக் கவனித்துப் பாருங்கள். கோரிக்கை வரும்போது உங்களுடைய பங்களிப்பைக் கொடுக்க தயாராக இருங்கள்.

### பரிபூரணமான மனிதரைத் தேடாதீர்கள்

தகுதிவாய்ந்த மூப்பர்களை நீங்கள் தேடிக்கொண்டிருக்கையில், பரிபூரணமான மனுஷருக்காகத் தேடாதீர்கள். பரிபூரணமாய் வாழ்ந்த ஒரேமனிதர் இயேசு கிறிஸ்து மட்டுமே. மூப்பர்களின் தகுதியாம்சங்களைக் குறித்து நாம் கற்றுக் கொண்டிருக்கையில், இந்தத் தகுதியாம்சங்களை சந்திக்க வேண்டுமானால், மனுஷர்கள் பரிபூரணப் பட்டவர்களாகத்தான் இருக்க வேண்டுமென்ற ஆழ்ந்த மனப்பான்மையைக் கொண்டுவிடுவோமோ என்று நான் அஞ்சுகிறேன்.

தகுதியாம்சங்கள் குறித்து பின்னதாக பாடங்களில் விவாதிப்போம். இவைகளில் சில *முற்றானவை*, வேறு சில *ஒப்பானது*. ஒரு மூப்பர் ஒரே மனைவியையுடைய புருஷராக இருக்க வேண்டும் (தீத்து 1:6). இது ஒரு முற்றான கருத்து, அவர் ஒரே மனைவியையுடைய புருஷனாக இருக்க வேண்டும். அல்லது மூப்பனாக இல்லாமலிருக்க வேண்டும். ஒரு மூப்பர் "உபசரிக்கிறவனாயிருக்க" வேண்டும் (வசனம் 8). அது ஒப்பானதாய் இருக்கிறது. அவர் ஓர் அளவு உபசரிப்பின் தன்மையுடையவனாயிருக்க வேண்டும், அப்படியில்லாதிருந்தால் அவன் மூப்பராக பணியாற்றத் தகுதியில்லாதவன்; ஆனாலும் அவன் எப்படிப்பட்ட உபசரிப்பு உடையவனாயிருக்க வேண்டும் என்று இந்த வசனப்பகுதி திட்டமாய் குறிப்பிடுவதில்லை.

ஒரு மூப்பரின் தகுதியாம்சங்களாக ஆவிக்குரிய பரிபூரணத்தைக் குறித்து விளக்கமளிக்கையில் இரண்டு காரியங்கள் நிகழ்கின்றன. (1) சிலர் தங்களில் உள்ள உற்சாகத்தை இழந்து விடுகின்றனர். அவர்கள் நான் தகுதியுடையவனல்ல, "ஒருபோதும் நான் தகுதியை அடையப் போவதுமில்லை" என்பர். (2) தன்னைத்தானே மூப்பர் நியமனத்திலிருந்து விலக்கிக் கொள்ளாதவர் பொதுவாகவே மற்றவர்களால் விலக்கப்படுவார்.

### மனிதர்களை அவர்கள் இப்போது இருக்கிறபிரகாரமாகவே காணுங்கள்

இந்த உள்ளூர் சபையைப் பொறுத்தமட்டில் நல்ல செய்தியும் எனக்குண்டு, கெட்ட செய்தியும் எனக்குண்டு.[2] உங்களுக்கு எது முதலில் தேவை? ... நல்ல செய்தி என்னவெனில் *நம்மில் அநேகர் பல வருஷங்களாக ஒருவருக்கொருவர் அறிந்திருக்கிறோம்.* நாம் ஒன்றாக சிரித்து மகிழ்ந்திருக்கிறோம். ஒன்றாகச் சேர்ந்து அழுதுமிருக்கிறோம். இது நம்மில் நெருக்கத்தை ஏற்படுத்தக் கூடும். கெட்ட செய்தி என்னவெனில் *நம்மில் அநேகர் பல வருஷங்களாக ஒருவரையொருவர் அறிந்திருக்கிறோம்.* மகிழ்வளிக்காத எத்தனையோ கெட்ட நினைவலைகள் நம்மிடத்தில் உண்டு. மனம் நொந்துபோன உணர்வுகள், பகுத்தறிவில்லாமல் இருந்த அறியாமையின் காலங்கள், நடப்பிக்கப்பட்ட பாவங்கள் ஆகியவைகளை நினைத்துப் பார்க்கிறோம். ஆகையால், உள்ளூர் சபையிலுள்ள மனுஷர்களை நாம் கண்ணுறும்போது, கடந்த காலங்களில் நடப்பிக்கப்பட்ட பாவங்களை நினைவில் கொண்டு வராமலிருப்பது மிகவும் கடினம்.

அப்போஸ்தலனாகிய பேதுரு ஒரு மூப்பராயிருந்தவர். 1 பேதுரு 5:1ல் அவர் "உங்களிலுள்ள மூப்பருக்கு உடன் மூப்பனும், ... யிருக்கிற நான் புத்தி சொல்லுகிறதென்னவென்றால்" என்று சொன்னார். தெய்வீக நியமனத்தால் அவர் அப்போஸ்தலனானார். ஆனால் அவர் நடபடிகள் 6ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்ட நடைமுறையில் மட்டுமே நிச்சயமாக மூப்பராகியிருக்க முடியும். அதாவது, அவர் தாம் அங்கம் வகித்த உள்ளூர் (அநேகமாக எருசலேமாக இருக்கலாம்) சபையால் மூப்பராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கலாம். அவர் பெயர் ஒரு தகுதியான மூப்பர் என்ற வகையில் கொண்டு வந்திருக்கப்பட வேண்டும் என்பதை உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? கடந்த கால வாழ்வின் அடிப்படையில் யாராவது தவிர்க்கப்பட வேண்டும் என்று சொன்னால், பேதுரு (மூப்பராகாதபடி) தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும். அவர் முன்யோசனையின்றி முந்திக்கொண்டு பேசினவர்தானே. அவர்தானே இயேசுவை ஒருமுறையல்ல, மூன்று முறை மறுதலித்தவர். இதையெல்லாம் கடந்து, அவர் மூப்பராக நியமனம் பெற்றார்.

கடந்தகாலத்தில் ஒருவர் தாம் செய்த பாவங்களுக்காக மனந்திரும்பாமலேயே இருப்பதற்கான ஆதாரமிருக்குமேயானால் அவருடைய கடந்தகால வாழ்வை மறந்துவிடும்படி நான் கூறவில்லை. ஆயினும் ஒருவர் தனது கடந்தகால பாவத்துக்காக மனம் வருந்தி, சீர்பொருந்தத்தேவையான அனைத்தையும் சரிசெய்து, 1 தீமோத்தேயு 3ம் அதிகாரத்திலும் தீத்து 1 லும் விவரிக்கப் பட்டுள்ள வாழ்க்கையை இப்பொழுது வாழ்ந்து கொண்டிருப்பாரானால், தேவனுடைய இரக்கத்தையும் கிருபையையும் குறைத்து மதிப்பிடாதீர்கள். அவருடைய பாவங்களை தேவன் மன்னித்து, மறந்துமிருப்பாரானால், அதைத் தொடர்ந்து

நாம் நினைப்பூட்டிக் கொண்டிருப்பது சரிதானா? ஒரு மூப்பராக நியமனம் பெறுபவர் "குற்றஞ் சாட்டப்படாதவராயிருக்க வேண்டும்" (தீத்து 1:7), ஆனால் இது "பாவமற்றவராயிருக்க" வேண்டும் என்று அர்த்தப்படுவதல்ல. மாறாக, தற்சமயம் அவர் சபைக்குப் புறம்பேயும் சபைக்குள்ளாகவும் நற்பெயருடன் வாழ்கிறார் என்று பொருள்.

**மனுஷர்களை ஊழியம் செய்ய ஊக்குவிக்க வேண்டும்**

உங்கள் மனதறிய சில மனிதர்கள் நல்ல ஒரு மூப்பராக விளங்கப்பண்ணக் கூடும், என்று அறியும்போது ஊழியம் செய்ய அவருக்கு ஊக்கமளியுங்கள். அநேகர் இன்றைக்கு பிரசங்கிக்கிறார்கள், ஏனெனில் யாரோ அவரிடத்தில் "நீங்கள் ஒரு நல்ல பிரசங்கியாக வருவீர்கள் என்று நான் நினைக்கிறேன். அந்த சிறப்பான பண்புடைய பணிக்கு உங்களை ஆயத்தப்படுத்தும்படி உங்களுக்கு ஊக்கமளிக்கிறேன்" என்று சொல்லியிருக்க வேண்டும். மூப்பர்களைக் குறித்தும் நிச்சயமாக நாம் இப்படி ஊக்கப்படுத்தலாம்.

ஒருசிறு பையனாக நான் இருந்தபோது, 1 தீமோத்தேயு 3:1ல் உள்ள "desire" (KJV)[3] "விரும்புகிறவன்" எனும் வார்த்தை மிக அதிகமாக வலியுறுத்தப்பட்டது. "கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான், இது உண்மையுள்ள வார்த்தை." "மூப்பராவதற்குரிய முதல் தகுதியாம்சம் அந்த வேலையை விரும்புதல்" என்று சொல்லப்பட்டது. இதோ இந்த மனுஷன் அல்லது அதோ அந்த நபர் "அந்த வேலையை விரும்புவதில்லை" ஆகையால் அவர் மூப்பராகத் தகுதியற்றவர் என்றும் சொல்லப்பட்டது. நான் தொடர்ந்து வசனத்தை கற்றதால், பவுல் இப்படியொரு பொருளில் சொல்ல முயற்சிக்கவில்லை என்று அறிந்து கொண்டேன்.[4]

ஆயினும், ஒரு மனுஷன், இப்படி பணியாற்ற *விரும்புகிறவனாயிருக்க வேண்டும்*. பேதுரு மூப்பர்களிடத்தில் "உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, *மனப்பூர்வமாயும்*, அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும்" என்று சொன்னார் (1 பேதுரு 5:2; வலியுறுத்தல் என்னுடையது). மனுஷர்களை பிரசங்கியாராக விரும்பும்படி ஊக்கமளிப்பது வசனத்தின்படியானதா?அப்படியானால் பிறகு மனுஷர்களை ஊக்கப்படுத்தி *மூப்பர்களாக* விருப்பம் தெரிவிக்கச் செய்வது எந்த வகையில் தவறானது? ஒரு நாளிலே இந்த தகுதியாம்சங்களுடன் ஊழியம் செய்ய சிலருக்கு ஊக்கமளிக்கப்படுதல் அவசியமாகும். மற்றவர்கள் உள்ளூர்சபையால் தேர்ந்தெடுக்கப்படுவார்களானால் ஊழியம்செய்ய ஊக்கமளிக்கப் படவேண்டும்.

**நட்புறவு முறையில் ஊழியம் செய்யுங்கள்**

நீங்கள் தனிப்பட்ட முறையில் பகைமை கொண்டுள்ள ஒருவருடைய பெயர் தெரிவு செய்ய ஆலோசிக்கப் பட்டுள்ளதா? நீங்கள் கிறிஸ்தவராக இருங்கள், *இப்பொழுதே* அந்த நபரிடத்தில் செல்லுங்கள்.

> "ஆகையால், நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையை செலுத்த வந்து, உன்பேரில் உன் சகோதரனுக்கு குறைஉண்டென்று அங்கே நினைவு கூருவாயாகில், அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை

*வைத்துவிட்டுப்போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து" (மத்தேயு 5:23, 24).*

*"உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில்போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக் கொண்டாய்" (மத்தேயு 18:15).*

தகுதியான மூப்பர்களின் பெயர்களை எழுதிக் கொடுக்கும்வரை காத்திருந்து பிறகு குற்றப்படுத்தக் கூடியவர்களாயிராதேயுங்கள். உங்கள் சகோதரரோடே இப்பொழுதே ஒப்புரவாகுங்கள். அடுத்த சில மாதங்கள் உள்ளூர் சபையாருடன் நட்பை வளர்த்துக் கொள்ள ஏதுவாக செலவிடுங்கள், விசேஷமாக கடந்த ஆண்டுகளில் நட்புறவு முறிந்து போகத்தக்க சம்பவங்கள் நடந்திருப்பின் அவைகளை சரி செய்யுங்கள்.

**ஜெபியுங்கள்**

ஒரு உள்ளூர் சபையாக நாம் எல்லாரும் அதன் தேவையான ஜெபத்தில் மூழ்க வேண்டும். மூப்பர்களை தேர்ந்தெடுக்கும் முக்கியமான பணிக்கு இது மிகவும் இன்றியமையாதது. பெயர்களை கொடுக்கும்போது மூப்பர்களை நியமிக்கும் நாள் நெருங்கிக் கொண்டிருப்பதால், "இடைவிடாமல் ஜெபம் பண்ணக்கடவோம்" (1 தெசலோனிக்கேயர் 5:17).

## ஆண் அங்கத்தினர்கள் செய்ய வேண்டியது என்ன

**இப்பொழுதே ஆயத்தமாகுங்கள்**

முழு உள்ளூர் சபையிலிருந்து அதன் ஆண் அங்கத்தினர்களிடம் கவனம் செலுத்தும்படி மாற்றிக் கொள்ளுகிறேன். நீங்கள் ஒரு ஆண் அங்கத்தினராக சபையில் இருப்பின், நீங்கள் ஒரு மூப்பராவதற்கு உங்களை நீங்கள் ஆயத்தப்படுத்தத் துவங்குங்கள். (நான் *ஒவ்வொரு* ஆண் அங்கத்தினரிடமும் - வாலிபர்கள், வயதானவர்கள், இளைஞர்கள், அல்லது ஓய்வு பெற்றவர்கள் ஆகிய அனைவரிடமும்.) பேசுகிறேன். மூப்பர்கள் ஒரு அபூர்வ பிறவிகள் என்றும், பெரும்பாலான கிறிஸ்தவ ஆண்கள் ஒரு மூப்பராவதற்குரிய தகுதியை வளர்த்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை என்றும் சிலர் நினைக்கிறார்கள், இந்தப் பாடத்தொடரில், *மூப்பர்களுக்கு என்று விசேஷமான தகுதியாம்சங்கள்* இல்லை என்றே வலியுறுத்துவேன். பொதுவாக புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவர்களுக்குப் பொருந்தாத தகுதியாம்சங்கள் எதுவும் 1 தீமோத்தேயு 3லும், தீத்து 1லும் கொடுக்கப்படவில்லை. மூப்பர்கள் புதிய மனமாற்றப்பட்டவர்களாயிருக்கக் கூடாது என்பதும் திருமணம் செய்து குழந்தைகளையுடையவராகவும் இருக்க வேண்டும் என்பதும் உண்மைதான். ஆகிலும் இந்தத்தகுதிகளும் கூட பெரும்பாலான கிறிஸ்தவர்களிடம் இருக்கிறது.

1 தீமோத்தேயு 3லும் தீத்து 1லும் காணுகின்ற தகுதிகளெல்லாம் குடும்பத்துடன் இருக்கும் எந்த கிறிஸ்தவனுக்கும் *இருக்க வேண்டியவை* என்பதை ஆலோசனைகளாகக் குறிப்பிடுகிறேன், அவர் மூப்பராக

பணியாற்றினாலும் பணியாற்றாவிட்டாலும் இந்த தகுதியாம்சங்கள் தேவையே. இந்த நடத்தைகளுக்கு நெருங்கி நீங்கள் வளரும்போது, நீங்கள் ஒரு சிறப்பான ஆண்மகனாக, கர்த்தருக்கு இன்னும் வல்லமையான ஊழியம் செய்யக்கூடியவராயிருப்பீர்கள். தகுதியாம்சங்களை வாசியுங்கள், அவை குறித்து யோசியுங்கள், அவைகளைக் குறித்து ஜெபியுங்கள். அந்தத் தகுதியாம்சங்களின் வெளிச்சத்தில் உங்களையே நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள். வளர்ச்சியடைந்த கிறிஸ்தவரைப் பார்த்து நீங்கள் இன்னும் என்ன தகுதியாம்சத்தை வளர்க்க வேண்டியுள்ளது என்று கேளுங்கள். பிறகு பவுல் தீமோத்தேயுவுக்கும் தீத்துவுக்கும் விவரித்த மனுஷனாக வரபிரயாசப்படுங்கள்.

நல்ல மூப்பர்கள் வருஷக்கணக்காய் வளருகிறார்கள். ஒரு உள்ளூர் சபை ஒரு குறிப்பிடத்தக்க காலமாக இயங்கிக்கொண்டிருந்து மூப்பர்களைக் கொண்டிராமல் இருந்தால், அந்த உள்ளூர் சபையின் அங்கத்தினர்கள் விசுவாசத்தில் வளரவில்லை என்றே சுட்டிக்காட்டுகிறது. கர்த்தருடைய சபையில் இன்றைய அத்தியாவசிய தேவை நல்ல, தகுதிபெற்ற மூப்பர்கள்தான்; எதிர்காலத்திலும் நல்ல, தகுதிபெற்ற மூப்பர்கள் அதற்குத்தேவை. மூப்பர்களை ஏற்படுத்துவது மற்றவர்களுடையதைப் போலவே *உங்களின்* பணியுமாகும்.

**நேர்மறைத் தலைமைத்துவத்தை பயிற்றுவிப்பீர்களாக**

நீங்கள் இன்னும் செயல்படாமல் இருந்தால், இப்பொழுதே உங்கள் உள்ளூர் சபையில் நேர்மறை தலைமைத்துவத்தை பயிற்சிவிக்கத் துவங்கும்படி உங்களை நான் ஊக்கப்படுத்தட்டும். பிற அங்கத்தினர்மீது உங்கள் விருப்பத்தை திணிக்கும்படி நான் பேசிக் கொண்டிருக்கவில்லை. மாறாக, பின்வருகிற படிகளை நீங்கள் எடுக்க வேண்டுமென்று நான் பேசிக்கொண்டிருக்கிறேன்:

- சபையின் ஊழியத்தில் சுறுசுறுப்பாக உங்களை உட்படுத்திக் கொள்ளுங்கள்.
- பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளுங்கள்.
- கொடுக்கப்பட்ட அந்தப் பணிகள் செயல்படுத்தப் பட்டுள்ளதா என மனமுவந்து கவனித்துக் கொள்ளுங்கள்.
- மற்றவர்களையும் ஊழியத்தில் உட்படுத்த உற்சாகப்படுத்துங்கள்.
- மற்றவர்களிடம் சபையைக் குறித்தும் சபையின் ஊழியத்தைக் குறித்தும் நேர்மறைக் காரியங்களையே பேசுங்கள்.

நாம் ஆண் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களை தலைமைத்துவத்தை ஏற்கச் *செய்வதில்லை*, மாறாக தலைமைத்துவ திறன் உள்ளவர்களாக *இருப்பவர்களை* அந்தப் பொறுப்புக்குத் தேர்ந்தெடுக்கிறோம். அதாவது, சபையாரில் பெரும்பாலான அங்கத்தினர்களால் கண்காணிக்கப் பட்டவர்களான தலைமைத்துவப் பொறுப்புடையவர்களை நாம் பார்க்கிறோம், அவர்கள் ஏவப்பட்ட தகுதியையும் உடையவர்கள் - *இவர்களை* நாம் அதிகாரப் பூர்வமாக நம்முடைய தலைவர்களாக ஏற்றுக்கொள்கிறோம்.

1 தீமோத்தேயு 3லும் தீத்து 1லும் மூப்பர்களுக்கான தகுதியாம்சங்களைப் பெற்றிருந்தும், ஏதோ சில காரணங்களினால், சுறுசுறுப்பான ஈடுபாடுகளை சபையிலே காட்டுவதிலிருந்து வெளியேறிய சில மனுஷர்களை, நல்ல மனுஷர்களை, நான் அறிவேன். அவர்கள் தங்கள் திறமைகளையும், தங்கள்

ஆலோசனைகளையும், தங்கள் தலைமைத்துவ திறமைகளையும் சபையிலிருந்து கொள்ளையிட்டவர்களாகிறார்கள்; மற்றும் அவர்கள் தங்களையே கொள்ளையிட்டுக் கொள்கிறார்கள். இவர்களோடு பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளோரையும் சேர்த்துக்கொள்கிறேன், அவர்கள் இன்னமும் நல்ல உடல் ஆரோக்கியத்தை அனுபவித்துக் கொண்டுள்ளனர். கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய ஊழியத்திலிருந்து ஓய்வு பெறுவதில்லை.[5] நீங்கள் மரிக்கும் போதுதான் உங்களுக்கு ஆவிக்குரிய ஓய்வு. யோவானை எழுதும்படி சொன்னபோது, "கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள்! அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டு ஓய்ந்திருப்பார்கள், ஆவியானவரும் 'ஆம்' என்று திருவுளம் பற்றுகிறார்" என்றார் (வெளிப்படுத்தின விசேஷம் 14:13).

### மற்றவர்களுடன் ஊழியம் செய்யக் கற்றுக்கொள்ளுங்கள்

மற்றவர்களுடன் ஒரு குழுவாக இணைந்து, ஊழியம் செய்யக் கற்றுக் கொள்ளுங்கள். "தனிமனித ராணுவமாய்" செயல்படும் குறிப்பிடத்தக்க மனுஷர்களை நான் அறிவேன். அவர்கள் நிறைந்த நல்லதை செய்திருக்கிறார்கள். ஆகிலும் மூப்பர்களாகியிருந்திருந்தால் பயங்கரமாயிருந்திருக்கும். ஒரு உள்ளூர் சபையில் ஒன்றுக்கும் மேற்பட்ட (பன்மை) மூப்பர்கள் இருக்க வேண்டும் என்று வேதாகமம் போதிக்கிறது, பல மனிதர்கள் அந்த சபையின் ஊழியத்தை ஒன்றிணைந்து கண்காணிக்க வேண்டும். இந்த மனிதர்கள் ஒற்றுமையுடன் ஊழியம் செய்கிறவர்களாயிருக்க வேண்டும். ஒரு மூப்பர் "சமாதானமுள்ளவரும்," "சுயநலமில்லாத சுய இஷ்டப்படி செய்யாதவருமாயிருக்கவேண்டும்" (1 தீமோத்தேயு 3:3; தீத்து 1:7).

ஆகையால், ஒவ்வொரு சகோதரரையும் மற்றவர்களுடன் இணைந்து ஊழியம் செய்யும்படி உற்சாகப்படுத்துகிறேன். உங்கள் விருப்பங்களுக்கப்பால் உள்ளூர் சபைக்கு எது சிறந்தது என்று பார்க்கக் கற்றுக்கொள்ளுங்கள். விசுவாச விஷயங்களுக்கும் சுய கருத்தின் விஷயங்களுக்கும், அல்லது தீர்ப்பின் விஷயத்துக்கும் உள்ள வித்தியாசத்தைத் தெரிந்துகொள்ளுங்கள். தீர்ப்பின் விஷயம் என்றால், பிறகு மற்றவைகளை வித்தியாசப்படுத்திப் பாருங்கள். நீங்கள் நினைக்கிற வழிதான் சரியானது என்று நினையாதிருங்கள். மற்றவர்களுடன் இணைந்து ஊழியப் பணியாற்றுவது உங்களுக்கு நல்லது, உள்ளூர் சபைக்கு நல்லது, கர்த்தருடைய சபையின் எதிர்காலத்துக்கு அதுவே மிகப்பெரிய ஆதாயப் பங்காக இருக்கும்.

### ஊழியனாயிருக்கக் கற்றுக்கொள்ளுங்கள்

அடுத்ததாக, நீங்கள் ஊழியனாக இருக்கும்படி கற்றுக்கொள்ள வேண்டுகிறேன். கிறிஸ்தவனாயிருப்பதன் அர்த்தமே ஊழியம்தான் - மூப்பராயிருப்பது என்பதும் அதுதான். இயேசு சொன்னார்,

> புறஜாதியாருடைய அதிகாரிகள் அவர்களை, இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், பெரியவர்கள் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரஞ் செலுத்துகிறார்கள் என்றும், நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன்.

> *உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். அப்படியே மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார் (மத்தேயு 20:25-28).*

பவுல், "கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல *வேலையை* விரும்புகிறான்," என்று எழுதினார் (1 தீமோத்தேயு 3:1; வலியுறுத்தல் என்னுடையது). நான் ஒருபோதும் மூப்பராகாமல் இருக்கலாம், அதேபோல நீங்களும் ஒருபோதும் மூப்பராகாமல் போகலாம்; ஆகிலும் அது தொடர்பிலே முக்கியமற்றது. நமக்குள்ள திராணியைப் பொறுத்து ஊழியஞ் செய்யத்தக்கதாக நம்மைத் தகுதிபடுத்திக்கொள்ள வேண்டும் என்பதே முக்கியமானது. நம்மிலே அநேகர் ஊழியராக இருப்பது என்றால் என்ன என்பதைக் கற்றுக் கொள்ளவேயில்லையோ என்று பயப்படுகிறேன்; மற்றவர்களை நம்மிலும் மேலானவர்களாக எண்ணவும், மற்றவர்களின் நன்மைக்காக நம்மையே செலவிடுவதையும் செயல்படுத்த வேண்டும்.

**மேய்ப்பனுக்குரிய இருதயத்தைக் கொண்டுவாருங்கள்**

ஒருவேளை என்னுடைய மிகமுக்கியமான ஆலோசனை இதுதான்; ஒரு மேய்ப்பனின் இருதயத்தைக் கொண்டிருக்க பிரயாசப்படுங்கள். 1 தீமோத்தேயு 3லும் தீத்து 1லும் வரிசைபடுத்தப்பட்டுள்ள தகுதியாம்சங்களை குறைத்து மதிப்பிடக் கூடாது என்கிறபோது, *இருக்க வேண்டிய* மற்றும் *செயல்பட வேண்டிய* மூப்பருக்கான திறவுகோல் நடத்தைகள் இவைகளில் காணுகின்றன. பின்னதாக, மூப்பர்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ள புதிய ஏற்பாட்டுப் பதங்களை விவாதிக்கப் போகிறோம், ஆகிலும் சுருக்கமாக அவைகளை இங்கே ஆராய்வோம்:

- "மூப்பர்" (Elder). இது கிரேக்க வார்த்தையில் *பிரிஸ்பைட்டர்* எனும் சொல்லின் மொழியாக்கம், இதன் பொருள் "முதிய ஒருவர்" என்பதாகும். இது வயதை மட்டும் குறிப்பதல்ல, ஆனால் ஆவிக்குரிய முதிர்ச்சியைக் குறிப்பது. மூப்பர்கள் அடிப்படை முதிர்ச்சியுடையவர்களாயிருக்க வேண்டும். அவர்கள் குழந்தைத்தனமான அற்பக் காரியங்களை வெளியிடுகிறவர்களாயிருக்கக் கூடாது.
- "கண்காணி" (Bishop) (காண்க நடபடிகள் 20:28; KJV). இது எபிஸ்கோபோஸ் எனும் கிரேக்க வார்த்தையின் நுட்பமற்ற (மிகவும் நுட்பமற்ற) வார்த்தை பொருளில் கூறப்பட்டது. இது "கண்காணி" ("overseer") என்று அர்த்தப்படுகிறது (காண்க நடபடிகள் 20:28; NASB). இந்த பதவி உள்ளூர் சபையின் ஊழியத்தை மேற்பார்வையிடும் மூப்பர்கள் எனும் உண்மையைச் சுட்டிக் காட்டுகிறது. மூப்பர்கள் நன்கு விசாரித்து தீர்ப்பு செய்யக் கூடியவர்களாயிருக்க வேண்டும்.
- "மேய்ப்பர்" (Pastor). இது *பாய்மென்* எனும் வார்த்தையின் மொழிபெயர்ப்பு. நடபடிகள் 20:28லும் மற்றும் 1 பேதுரு 5:2லும் வினைச் சொற்களாக மூப்பர்களுக்கு பாய்மென் என்ற வார்த்தை பயன்படுத்தப் பட்டுள்ளது. இதன் பெயர்ச்சொல் எபேசியர் 4:11ல் காணப்படுகிறது.

மேய்ப்பன் எனும் பதம் இலத்தீன் மொழியில் "பாஸ்டர்" என்று பொருள்படும். ஒரு மூப்பர் என்றால் என்ன என்பதையும் அவர் என்ன செய்ய வேண்டும் என்பதையும் வெளிப்படுத்துகிற ஒரு சிறப்பான வார்த்தையாக இதை நான் கருதுகிறேன். தேவனுடைய மக்களை வழி நடத்தும் தலைவனை விவரிக்கும் (சொற்களில்) பொதுவான பதங்களில் ஒன்று "மேய்ப்பன்."

பின்னதாக ஒரு பாடத்தில் மேய்ப்பரைக் குறித்து என்ன சொல்லப்படுகிறது என்பதையும் அது நம்முடைய மேய்ப்பர்களுக்கு (மூப்பர்களுக்கு) என்ன பயன்பாடு உள்ளது, அதேபோல் மந்தைக்கு (உள்ளூர் சபைக்கு) அது எப்படி பயன்பாடுள்ளது என்பதையெல்லாம் விவாதிப்போம். இப்போதைக்கு எல்லாருமே மேய்ப்பனின் இருதயத்தைப் பெறவேண்டும் என வேண்டுகிறேன்.

*நல்ல* ஒரு மேய்ப்பனைப் பற்றியும் அவர் என்ன செய்கிறார் என்பதையும் நீங்கள் அறிய விரும்பினால், இயேசுவைப் பாருங்கள், அவர் நல்ல மேய்ப்பன், அவரே பிரதான மேய்ப்பன் (1 பேதுரு 2:25; 5:4). இழந்துபோனதை தேடவும் இரட்சிக்கவுமே அவர் வந்தார் (லூக்கா 19:10). வழியருகே விழுந்து போனவர்களைத் தேடி அவருடைய இருதயம் செல்கிறது. அவர்களைத்தேடி மீண்டும் திருப்பிக் கொண்டுவர முயற்சிக்கிறார் (யோவான் 10). *மோசமான* ஒரு மேய்ப்பனை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டுமானால், எசேக்கியேல் 34யும் அத்துடன் சம்பந்தப்பட்ட வசனப்பகுதிகளையும் பாருங்கள். எசேக்கியேல் 34:4 சொல்லுகிறது,

> "நீங்கள் பலவீனமானவைகளைப் பலப்படுத்தாமலும், நசல் கொண்டவைகளைக் குணமாக்காமலும், எலும்பு முறிந்தவைகளை காயங்கட்டாமலும், துரத்துண்டவைகளைத் திருப்பிக் கொண்டுவராமலும், காணமற்போனவைகளைத் தேடாமலும் போய், பலாத்காரமும் கடூரமுமாய் அவைகளை ஆண்டீர்கள்."

இஸ்ரவேலின் மேய்ப்பர்கள் ஆவிக்குரிய முறையில் வியாதிப்பட்டவைகளையும், ஆவிக்குரிய முறையில் நசல் கொண்டவைகளைப் பற்றியும், ஆவிக்குரிய முறையில் எலும்பு முறிந்தவைகளைப் பற்றியும் அக்கறை காட்டியிருக்க *வேண்டும்*, - அதாவது சுற்றித்திரிந்து காணமற்போனவர்களைக் குறித்து அக்கறைப் பட்டிருக்க வேண்டும். மேய்ப்பராயிருப்பது என்றால் எல்லாம் இதைப்பற்றியதே.

மேய்ப்பனின் இருதயம் வேண்டும் என நான் வலியுறுத்தக் காரணம் மூப்பர்கள் சில வேளைகளில் தங்களை நிர்வாகக் குழுவாக நினைத்துக் கொள்கிறார்கள். மனிதர்கள் பதவிக்கும் அதிகாரத்துக்கும் கௌரவத்திற்கும் ஆவல் கொண்டவர்களாய் (சிலர், அதற்காகவே காத்திருப்பவர்களாய்) இருக்கும் நிலையை நான் அறிந்திருக்கிறேன். மூப்பர்கள் தீர்மானம் எடுக்க வேண்டியவர்கள்தான், ஆனால் அது மட்டுமே மூப்பர்களின் பணியல்ல. மூப்பர்களாயிருப்பதே ஜனங்களுக்காகத்தான்.

மனிதர்களை மூப்பர்களாக பணிசெய்யும்படி நீங்கள் எதிர்நோக்கும்போது, அவர்கள் ஜனங்களைக் குறித்து அக்கறை காட்டுகிறவர்களாயிருக்கிறார்களா

*இல்லையா என்பதை அறிய வேண்டும். மற்றவர்களுக்கு அவர்கள் உற்சாகமளிக்க முயற்சிக்கிறார்களா? சத்தியத்தைவிட்டு பின் வாங்கிப் போனவர்களை மறுபடியும் கொண்டு வர முயற்சிக்கிறார்களா?*

*மீண்டும், நான் சொல்லுகிறேன், தயவு செய்து மேய்ப்பனின் இருதயத்தைக் கொண்டிருக்க பிரயாசப்படுங்கள்.*

***ஊழியம் செய்ய விருப்பப்படுங்கள்***

*எனது கடைசி வேண்டுகோள் என்னவெனில் நீங்கள் மனவிருப்பம் உள்ளவர்களாய் ஊழியம் செய்வீர்களானால் இராஜ்யத்திலே நீங்கள் மிகப் பெரியக் காரியங்களைச் செய்ய முடியும். 1884ல் ஜெனரல் வில்லியம் ஸெர்மன் என்பவர் அமெரிக்காவின் ஜனாதிபதி தேர்தல் குறித்து சொல்லுகையில், "என்னை வேட்பாளராக அறிவித்தால் நான் ஓட மாட்டேன்; தேர்ந்தெடுக்கப்பட்டால், நான் பணியாற்ற மாட்டேன்" என்றார். தங்களை மூப்பர்களாக நியமிக்கப்பட்ட சில மூப்பர்கள் இப்படித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நான் கண்டேன். மத்தேயு 25 ம் அதிகாரத்தில் தாலந்துகளைக் குறித்த உவமையை ஆராய்ந்து பாருங்கள். ஐந்து தாலந்துகளைப் பெற்ற மனிதன் ஒன்று அல்லது இரண்டு தாலந்துகளை மட்டும் பயன்படுத்தியிருந்தால் என்னவாயிருக்கும்? இப்பொழுது இதையும் யோசியுங்கள்: ஒரு மனுஷன் மூப்பராகும் தகுதியைப் பெற்றிருந்து உள்ளூர் சபையார் பணியாற்றக் கேட்டுக் கொண்டும், பணியாற்றத் தவறினால் என்னவாகும்?*

*உள்ளூர் சபையார் எழுதும் பெயர்களில் எல்லா மனிதர்களின் பெயர்களும் இடம் பெற்றிருக்காது. ஆனாலும் அதைப் பற்றி பரவாயில்லை. எழுதிக் கொடுக்கப்பட்ட எல்லா பெயர்களும் தகுதி பெற்றிருக்க இயலாது, ஆதலால் சிலர் தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள் - அதுவும் சரியே. ஒருவர் மூப்பராவது முக்கியம் அல்ல, இயன்றவரை சிறப்பாகப் பணியாற்றுவதே முக்கியம். நீங்கள் மூப்பராக பணியாற்ற தகுதியானவர் என்று உள்ளூர் சபை பொதுவாக இசைந்து முடிவெடுத்தால் - உங்களுக்குத் தகுதியில்லை என்று நீங்கள் உறுதியாகத் தெரிந்திருந்தால் ஒழிய - நீங்கள் "நான் தகுதி பெற்றிருப்பதாகக் கருதவில்லை; ஆகிலும் தேவனுடைய உதவியால், இந்த பொறுப்பை ஏற்றுக் கொள்கிறேன் என்னால் ஆன மட்டும் சிறப்பாக செயல்படுவேன்" என்று சொல்வீர்கள் என்று நம்புகிறேன்.*

## *முடிவுரை*

*மூப்பர்களை தேர்ந்தெடுக்க ஆயத்தப்படுத்துவது குறித்து வேறு அநேக காரியங்களைச் சொல்லக் கூடும், என்றாலும் நம்மெல்லாருக்கும் முன்பாக ஒரு அறைகூவலை வைத்து நிறைவு செய்ய நான் விரும்புகிறேன்: "குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்கு செய்யும்படிக்கு," என்ன நடந்தாலும் சரி, நாம் கிறிஸ்தவர்களைப் போல் நடந்து கொள்ள வேண்டும்.*

- *நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் தேர்ந்தெடுக்கப்படா விட்டாலும் அதைக் குறித்து நீங்கள் என்ன நினைப்பீர்கள்? <u>கிறிஸ்தவனாக நடந்து கொள்ளுங்கள்</u>. உங்கள் பெருமைகளை விழுங்கி விடுங்கள். நீங்கள் இருக்கிற இடத்திலேயே தொடர்ந்து ஊழியம் செய்யுங்கள்.*

- நீங்கள் ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று நினைத்து, தேர்ந்தெடுக்கப்படாமல் போனால் என்ன நினைப்பீர்கள்? கசப்பான வார்த்தைகளைப் பேசுவதை விட்டுவிட்டு, *கிறிஸ்தவனாக நடந்து கொள்ளுங்கள்.*
- நீங்கள் மூப்பராவதற்கு தகுதியில்லை என்று குறிப்பிட்டு தகாத வார்த்தைகளால் உங்களை சாடினால் நீங்கள் என்ன நினைப்பீர்கள்? அப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொன்னவர்களிடம் போய்ப் பேசுங்கள். ஆகிலும் அவரை வெறுக்கும் மனப்பான்மை வேண்டாம். *கிறிஸ்தவனாக நடந்து கொள்ளுங்கள்.*
- தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருக்கக் கூடாது என்று நீங்கள் நினைத்திருந்தும் அவரும் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டால் என்ன செய்வது? முற்றிலும் தகுதியற்ற ஒருவர் மூப்பராக தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்ட ஒரு அபூர்வமான சூழ்நிலையைப் பற்றி நாம் பேசிக் கொண்டிருந்தால் ஒழிய, அவர் வகிக்கும் ஸ்தானத்துக்காக அந்த தனிப்பட்டவரை மதியுங்கள். *கிறிஸ்தவனாக நடந்து கொள்ளுங்கள்.*

இந்த பிரசங்கம் அழைப்புக் கொடுக்கப்பட்டு ஜெபத்துடன் முடிக்கப்படவேண்டும். அழைப்புக் கொடுக்கும் போது, சபையில் *செயல் துடிப்புடன்* பங்காற்றுவது குறித்து வலியுறுத்தப்பட வேண்டும்.

## தீத்து 1:5 ற்கான பிற்சேர்க்கைக் குறிப்பு

பவுல் தீத்துவுக்கு, "குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும்படிக்கும் ... பட்டணங்கள்தோறும் மூப்பர்களை ஏற்படுத்தும்படிக்கும் நான் உன்னை கிரேத்தா தீவில் விட்டுவந்தேனே" என்று எழுதினார் (தீத்து 1:5). KJVயில் "தேவையாயிருப்பதை ஒழுங்குபடுத்தும்படிக்கு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஒரு உள்ளூர் சபை மூப்பர்களை கொண்டிராவிடில், ஏதோ குறைவுபடுகிறது.

எருசலேமில் சபை முதன் முதலாக ஸ்தாபிக்கப்பட்ட போது, அங்கிருந்த சபையின் காரியங்களை அப்போஸ்தலர்கள் வழிநடத்தினார்கள் (நடபடிகள் 2:42; 6:2). குறிப்பிட்ட காலக்கட்டத்தில் மூப்பர்கள் ஏற்படுத்தப்பட்டார்கள் (காண்க நடபடிகள் 11:30; 15:2). பின்னதாக, பவுல் எருசலேமில் இருந்த தரித்திரருக்கு சேர்த்த தரும பணத்தை எடுத்துக் கொண்டு போனபோது, அங்கிருந்த மூப்பர்கள் மட்டுமே குறிப்பிடப்படுகிறார்கள் (நடபடிகள் 21:18). அப்போஸ்தலர் படிப்படியாக எருசலேமில் தங்கள் பணிகளை, அங்கிருந்த மூப்பர்கள் வசமாய் விட்டு விட்டார்கள் என்பது, தெளிவாய்க் காணப்படுகிறது.

பவுலின் சுவிசேஷ பயணங்களின்போது, குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தி, பட்டணங்கள்தோறும் மூப்பர்களை ஏற்படுத்தினார் (நடபடிகள் 14:23). அவர் பணிபுரிந்த (சபைகளில்) பட்டணங்களில் ஒன்று பிலிப்பி. அங்கிருந்த சபைக்கு அவர் எழுதும்போது, அவர் விசேஷமாக தனது வாழ்த்துக்களை "கண்காணிகளுக்கும் [மூப்பர்களுக்கும்], உதவிக்காரர்களுக்கும்" அவர்களை உட்படுத்தி எழுதினார் (பிலிப்பியர் 1:1; காண்க தீத்து 1:5, 7). அவர்

பிரயாசப்பட்ட மற்றொரு பட்டணம் எபேசு. நடபடிகள் 20:17ல் எபேசு சபை மூப்பர்களைப் பற்றி நாம் வாசிக்கிறோம்.

பவுல் தீமோத்தேயுவுக்கும் தீத்துவுக்கும், தன்னுடைய இரண்டு உதவிசெய்யும் வாலிபர்களுக்கு எழுதியபோது, தீமோத்தேயுவுக்கும் தீத்துவுக்கும், தகுதியுள்ள மூப்பர்களை நியமிக்க வேண்டியதன் அவசியத்தைக் கற்பித்தார். தீமோத்தேயுவுக்கு எழுதின தமது முதலாவது நிரூபத்தில், மூப்பர்களுக்கும் உதவிக்காரர்களுக்கும் இருக்க வேண்டிய தகுதியாம்சங்களைக் கொடுக்கிறார் (1 தீமோத்யே 3:1-13) பிறகு சொன்னார், "தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்" என்று சொன்னார் (வசனங்கள் 14, 15). ஏற்கனவே பார்த்தபடி, தீத்துவிடத்தில் அவர் சொன்னார், "நீ குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும்படிக்கும் ... பட்டணங்கள்தோறும் மூப்பர்களை ஏற்படுத்தும்படிக்கும், உன்னை கிரேத்தாதீவிலே விட்டு வந்தேனே" (தீத்து 1:5).

ஒரு உள்ளூர் சபை மூப்பர்கள் இல்லாமல் நிலைத்திருக்குமா? ஆம். பவுல் தமது முதலாவது சுவிசேஷ பயணத்தின்போது, உள்ளூர் சபைகளை அவர் நிறுவிக் கொண்டு போனார். ஆகிலும் அவர் மறுபடியும் திரும்பி அந்த சபைகளுக்கு வரும்வரை மூப்பர்கள் நியமிக்கப்படவில்லை. அவருடைய முதலாவது பயணத்திற்கும் இரண்டாம் பயணத்திற்கும் இடையே, அந்த உள்ளூர் சபையில் மூப்பர்கள் இல்லாதிருந்தபோது, அவைகள் வசன ரீதியாகவே நிலைத்திருந்தன.

ஒரு உள்ளூர் சபையில் மூப்பர்கள் நியமிக்கப்படும்வரை, அது பல வகையிலும் இயங்கக் கூடும். சில பிராந்திய சபைகளில் மூப்பர்கள் இல்லாமலேயே சபையின் ஆண் அங்கத்தினர்கள் கூட்டம் கூடி மாதாந்திர பொருளாதாரக் காரியங்களைக் கையாளவும் தீர்மானங்களை எடுக்கவும் செய்கின்றன. எப்படியாயினும், நாம் அப்படிப்பட்ட செயல்பாடுகள் தற்காலிகமானது மட்டுமே என்று புரிந்து கொள்ள வேண்டும், அது மூப்பர்கள் நியமிக்கப்படும் வரை அவர்கள் இடத்தை நிரப்புவதற்காக மட்டுமே செய்யப்படுகின்றன. இப்படிப்பட்ட தற்காலிக ஏற்பாடுகளில் நாம் திருப்திபட்டுக் கொள்ளாமல், ஏறத்தாழ நாம் அதை நிரந்தரமாக்கி விடாமல் இருக்க வேண்டும்.[6]

தேவனுடைய மனதை நான் அறியாதபடியால், உள்ளூர் சபைகள் தோறும் மூப்பர்களை நியமிக்க வேண்டியது ஏன் முக்கியமானது என்று என்னால் சொல்ல முடியாது. ஆயினும் சில சிந்தனைக்கான கருத்துக்களை உங்கள் முன் வைக்க விரும்புகிறேன். மூப்பர்கள் நியமிக்கப்படும் வரை, ஒரு உள்ளூர் சபையில் முறையான ஆளுகை அமைப்பு குறைவுபடுகிறது. மூப்பர்கள் நியமிக்கப்படும்வரை, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரம் குறைவுபடுகிறது. மூப்பர்கள் நியமிக்கப்படும் வரை, உள்ளூர் சபையில் கணக்கு ஒப்புவிக்கும் பொறுப்புகள் குறைவுபடுகிறது. ஒரு உள்ளூர் சபை நிலைத்திருக்க மூப்பர்கள் அவசியமில்லை, ஆனால் சிறப்பானதாய் நிலைத்திருக்க மூப்பர்கள் அவசியமே என்று சொல்லப்படுவதுண்டு.

தேவன் சொல்லியிருக்கிறார், ஆகவே நாம் செயல்படுத்துவோமாக: ஒவ்வொரு உள்ளூர் சபைகள் தோறும் மூப்பர்களை நியமிக்க பிரயாசப்படுவோம் - அது முதலில் இங்கு ஆரம்பிக்கட்டும்.

*குறிப்புகள்*

*[1]தீத்து 1:5ன் பின்னணியை நீங்கள் ஒருவேளை விளக்கமளித்து ஒழுங்குபடுத்துதல் என்றால் என்ன என்று சொல்லாம். இந்தப் பாடத்தின் கடைசியில் பிற்சேர்க்கையாக மேற்குறித்த வசனப்பகுதிக்கு குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. [2]இந்த பத்தி அநேக ஆண்டுகளாக நடந்து கொண்டிருக்கும் உள்ளூர் சபைகளுக்கு மட்டுமே பொருந்தும். [3]*NASB*யில்* "aspires" *என்று கூறப்பட்டுள்ளது. [4]"விரும்புகிறவன்"* "desire" *எனும் பதம் பற்றி பின்னதாக வரும் பாடங்களில் விவாதிப்போம். [5]நீங்கள் பேசுவதைக் கேட்பவர்களுக்கு நீங்கள் உபயோகிக்கும் சொற்பதங்கள் நன்கு புரியப்பட்டிருக்குமானால், நீங்கள் "இந்த வாழ்க்கையில் தேவன் உங்களுக்கென ஒய்வு ஊதியத்திட்டம் எதுவும் கொண்டிருக்கவில்லை," எனும் கருத்தையும் சேர்த்துக் கொள்ளக் கூடும். [6]நிலை குலையாத தன்மை இங்கே தேவை. ஒவ்வொரு உள்ளூர் சபையிலும் மூப்பர்கள் தேவைதான், ஆனால் தகுதியற்றவர்களை அவசர அவசரமாக மூப்பர்களாக நியமிக்க வேண்டும் என்பது இதன் பொருள் அல்ல. யாரோ ஒருவர் இப்படியாகச் சொன்னார்: "வசன ரீதியற்ற முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பதைக் காட்டிலும், வசன ரீதியாக ஒழுங்குபடுத்தப்படாமல் இருப்பதே சாலச் சிறந்தது."*

## 2

# உங்களை நீங்களே நீட்டுங்கள்

## (1 தீமோத்தேயு 3:1–7)

*தமது சபையில் ஆண் அங்கத்தினர்கள் தலைமைத்துவப்பொறுப்பை வகிக்க வேண்டும் என்பது தேவனுடைய நிபந்தனை. ஆண்கள் மூப்பர்களாகவும் உதவிக்காரர்களாகவும் இருக்க வேண்டும்; பொதுத்தொழுகைகளில் ஆண்கள் வழிநடத்த வேண்டும். தேவன் ஏன் இப்படி ஒழுங்குமுறைகளை வைத்தார் என்று எனக்கு உறுதியாகத் தெரியாது. பெண்களைக் காட்டிலும் ஆண்கள் புத்திசாலிகள் என்றோ திறமைசாலிகள் என்றோ இப்படி ஒழுங்கு செய்யப்பட்டது என்று நான் நம்பவில்லை. இருப்பினும், காரணம் எதுவாக இருந்தாலும், தேவனுடைய ஆவிக்குரிய ஒழுங்கின்படி, ஆண்களே முன் வழிகாட்டிகளாக இருக்க வேண்டும். கிறிஸ்தவ ஆண்கள் முன் வழிகாட்டுதலுக்கான பணிக்கு ஆயத்தப்படுத்தப்படாவிடில், கர்த்தருடைய சபையின் நிலைமை சிக்கலானதே.*

ஒரு நாள், ஒரு புத்தகக் கடையில், ஜெனி கெட்ல் என்பவர் எழுதிய, *மனிதனின் அளவீடு* என்று தலைப்பிடப்பட்ட புத்தகம் கிறிஸ்தவ ஆண்களுக்குகென்று எழுதப்பட்டது, அதைக் கடக்க நேர்ந்தது.[1] துவக்கத்தில் நான் உணர்ச்சி வசப்பட்டேன். பெண்கள் எப்படி ஒரு நல்ல கிறிஸ்தவ மனைவியாக, தாயாக இருக்க வேண்டும் என்று எழுதப்பட்ட அநேக புத்தகங்கள் உண்டு. ஆகிலும் ஒரு ஆண் எப்படி ஒரு நல்ல கிறிஸ்தவப் புருஷனாக, தகப்பனாக இருக்க வேண்டும் என்று எழுதப்பட்ட நல்ல புத்தகங்களைக் கண்டுபிடிப்பது அரிது. பிறகு, நான் எடுத்த புத்தகத்தின் உட்பொருளை ஆராய்ந்து பார்த்தபோது, நான் ஏமாற்றமடைந்தேன். அந்தப் புத்தகம் 1 தீமோத்தேயு 3:1-7ஐ அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டிருந்தது. "அதன் எழுத்தாளருக்கு இந்த வசனங்கள் *மூப்பர்களுக்குரிய* தகுதியாம்சங்களைக் குறித்து பேசுகிறது என்று தெரியாதா?" என்று நினைத்தேன். ஆகிலும், எவ்வளவு அதிகமாய் அதைக் குறித்து நான் நினைத்துப் பார்த்தேனோ அவ்வளவு அதிகமாய் அந்த வசனப்பகுதி மனிதனுக்கு தேவன் கொடுத்த அளவீடு என்பதைக் *கொடுக்கிறது* என உணர்வடைந்தேன். இந்தப் பாடத்தில் 1 தீமோத்தேயு 3:1-7ல் எழுதப்பட்ட வார்த்தை நடையை கவனித்துப் பார்த்து ஆண் அங்கத்தினர்கள் தங்களுடைய குணாதிசயங்களை இதில் விவரிக்கப்பட்டுள்ளபடி அபிவிருத்திப் பண்ணிக்கொள்ள ஊக்கப்படுத்துகிறேன்.

வசனம் 1ல் உள்ள சொற்பதத்தை மையமாகக் கொண்டு என்னுடைய அறைகூவல் இருக்கும். KJV எனும் மொழிபெயர்ப்பில் அந்த வசனத்தைக் குறித்து சொல்லப்படுவதை நன்கு அறிவோம்: ''கண்காணிப்பை *விரும்புகிறவன்* நல்ல வேலையை *விரும்புகிறான்*, இது உண்மையான வார்த்தை'' (1 தீமோத்தேயு 3:1; வலியுறுத்தல் என்னுடையது). KJV

பயன்படுத்தும் ஆங்கில வார்த்தை "விரும்புகிறவன்" ("desire" or "desireth") (அல்லது "விரும்புகிறவனாகி") எனும் பதம் அந்த வசனத்தில் இருமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் கிரேக்க மொழியில் அந்த வசனப்பகுதியில், இரண்டு வித்தியாசப்பட்ட வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. NASB மொழிபெயர்ப்பில், இது வித்தியாசத்தைப் பிரதிபலிக்கிறது. அந்த வசனப்பகுதியில், "ஒருவன் கண்காணியாக இருக்க *பேராவல் கொள்கிறவனானால்*, அவன் நல்ல வேலையைச் செய்ய *விரும்புகிறான்*" என்றுள்ளது (வலியுறுத்தல் என்னுடையது). NIVயில் "தான் கண்காணியாக இருக்க வேண்டும் என்று ஒருவன் *தன் இருதயத்தை ஒழுங்குபடுத்தினால்*, அவன் ஒரு உயர்ந்த வேலையை *விரும்புகிறான்*" என்று கூறப்பட்டுள்ளது (வலியுறுத்தல் என்னுடையது).

KJVயில் "desire" "விரும்புகிறான்"[2] எனும் இரண்டாவது வார்த்தை வழக்கமான விரும்புகிறான் எனும் வார்த்தையே பயன்படுத்தப்பட்டுள்ளது. இது நல்ல பொருளில் பயன்படுத்தப்படலாம் ("ஆசைப்படுதல்") அல்லது கெட்ட அர்த்தத்திலும் பயன்படுத்தப்படலாம் ("இச்சை"). இங்கே, நல்ல அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. நமது வலியுறுத்தம், முதல் வார்த்தையாக "desire" என்று KJVயிலும், "aspires to" என்று NASBயிலும், மற்றும் "sets his heart on" என்று NIVயிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதின்மேல் இருக்கும். இந்த பதங்கள் அனைத்தும் கிரேக்க மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டவை[3] இதன் பொருள் "விரிவுபடுத்த, விஸ்தரி என்பதாகும்."[4]

நம்மில் பெரும்பாலானோருக்கு ("விரிவுபடுத்த" மற்றும்) "விஸ்தரித்தல்" என்பதன் பொருள் என்னவென்று தெரியும். குடும்பம் முழுவதும் மறுபடியும் ஒன்று சேர்ந்து வீடு உறவினர்களால் நிரப்பப்பட்டுள்ள சூழ்நிலையில் எப்போதாவது இருந்துள்ளீர்களா? உணவு வேளை வரும்போது, உணவருந்தும் மேஜையில் எல்லாரும் கொண்டு வந்த உணவோடு அமர்ந்திருக்கிறீர்கள். அந்த உணவு வேளையின் போது, குறைந்த பட்சம் ஒருவருக்கு பின்வரும் அனுபவம் இருக்கிறது, அவர் அமைதியாகச் சொல்லுகிறார், "அந்த உருளைக் கிழங்கை தயவுசெய்து, இந்த பக்கம் கொடுங்கள்" என்கிறார். ஒன்றும் நடக்கவில்லை. சாப்பிட உட்கார்ந்தவுடனே எல்லாரும் பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டுமிருக்கிறார்கள். "அந்த உருளைக்கிழங்கை தயவுசெய்து கொடுங்கள்!" இன்னமும் ஒன்றும் நடக்கவில்லை. கடைசியாக; அமைதியாக தொடர்ந்து கேட்பதை விட்டுவிட்டு, மேஜையின் அந்தப்பக்கம் கையை நீட்டி, அந்தப் பாத்திரத்தை அடையும்படி நீ-ட்-டு-கி-றா-ர். நாம் கவனம் குவிக்கும் வார்த்தைக்குப் பின்னால் உள்ள கருத்து இதுதான்.

இந்த வார்த்தை கிரேக்க மொழியில் *in the middle voice*ல் இருக்கிறது (நடுவில் தோன்றும் ஒரு குரல்) என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நம்மில் பெரும்பாலானோர் இந்த middle voice என்பதற்குப் பழக்கமானவர்களல்ல. ஆங்கிலத்தில், active voice செய்பொருள் (நீங்கள் *செய்கிற* ஒன்று), மற்றும் passive voice செயப்படு பொருள் (*உங்களுக்குச்* செய்யப்படுகிற ஒன்று), என்பது மட்டுமே உண்டு. ஆனால் கிரேக்க மொழியில் மூன்றாவதாக ஒரு பொருள் அவை இரண்டுக்கும் நடுவாக இருக்கிறது. இந்த மத்திய பொருள் *உங்களுக்கு நீங்களே செய்துகொள்ளும்* ஒரு செயலைக் குறிக்கும், ஆகையால், நமது கருபொருள் வார்த்தையைப் பொறுத்தமட்டில், வார்த்தை அகராதியில் சொல்லப்படுகிற மத்திய பொருளின் அர்த்தம் "ஒன்றைப் பெறுவதற்காக ஒருவர்

*தன்னையே வெளியே நீட்டி, முன்னால் இருப்பதை அடைய பிரயாசப்படுதல்" என்று பொருள்.*[5] *1 தீமோத்தேயு 3:1 ஐ ஒருவேளை இப்படியாகக் குறிப்பிடலாம்: "கண்காணியின் வேலைக்காக ஒருவன் தன்னையே நீட்டுவானாகில் அவன் நல்ல வேலையை விரும்புகிறான்."*

*நம்மைச் சுற்றிலும், தனிப்பட்ட எத்தனையோ பேர் வித்தியாசப்பட்ட எத்தனையோ விளையாட்டுக்களில் வெற்றிபெற தங்களை நீ-ட்-டி அதை அடைய முயற்சிப்பதைக் காணுகிறோம். வியாபார உலகத்தில் வெற்றி பெற ஜனங்கள் வெற்றியடைய நீ-ட்-டி வெற்றிபெறுவதைக் குறித்து நாம் பார்க்கிறோம், ஆவிக்குரிய காரியங்களை அடைய குறைந்தபேர் தங்களை எட்டி நீ-ட்-டு-கி-றார்-கள்! இந்தப் பாடத்தின் அறைகூவல், நீங்கள் கிறிஸ்தவனாக இருக்க ஏதுவான எல்லாவற்றிற்காகவும் நீங்கள் எ-ட்-டி நீ-ட்-ட-க் கூ-டி-ய-வ-ரா-யி-ரு-ங்-க-ள், மற்றும் தேவனுடைய சிறந்த பிள்ளையாக இருக்கவும் தான்.*[6] *என்னுடைய குறிப்புகள் பிரதானமாக கிறிஸ்துவுக்குள்ளான என்னுடைய சகோதரர்களுக்குத்தான், ஆகிலும் கர்த்தருக்குள் சகோதரிகளாகிய நீங்களும் உங்களுக்கு பயன்பாடுள்ள அநேகக் காரியங்களைக் காணலாம்.*

## ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உங்களை நீங்களே நீட்டுங்கள்

*வசனம் 6ல் மூப்பராகும் ஒருவர் "நூதன சீஷனாக" ("புதிதாய் மனமாற்றப்பட்டவனாக") இருக்கக் கூடாது என்று வாசிக்கிறோம். இந்த நூதன சீஷன் என்னும் பதம் நாம் பெறும் "நியோஃபைட்," என்ற வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது. அதன் பொருள் "புதிய செடி."*[7] *நாம் யாருமே புதிய செடிகளாகவே இருந்துவிட விரும்பமாட்டோம்; நாம்* வளர வேண்டும். *எபிரெய எழுத்தாளர் கீழ்வரும் வார்த்தைகளால் தமது வாசகர்களைக் கடிந்து கொள்கிறார்:*

> *காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்கவேண்டிய உங்களுக்குத் தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்கவேண்டியதாயிருக்கிறது; நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள். பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான். பலமான ஆகாரமானது நன்மை தீமை இன்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரயங்களையுடையவர்களாகிய பூரண வயதுயள்ளவர்களுக்கே தகும் (எபிரேயர் 5:12-14).*

*சில கிறிஸ்தவர்கள் மிகக் குறைந்தபட்ச வளர்ச்சியே தங்களுக்கு போதுமென்று திருப்தி பட்டுக்கொள்கிறார்கள். மற்றவர்கள் குறிப்பிட்ட அளவு ஆவிக்குரிய வளர்ச்சியடைந்துவிட்டு அந்த அளவிலேயே நின்று விடுவதில் திருப்திபட்டுக் கொள்கிறார்கள். "மூப்பர்" எனும் பட்டம் "முதிர் வயதுள்ளவர்கள்" என்று பொருள்படும்; ஆகிலும் இந்தக் கருத்து வெறும் சரீரப்பிரகாரமாக வயதாவதைக் குறிப்பிடுவதில்லை. ஆனால் கிறிஸ்துவுக்குள் இன்னும் அதிகமாக பக்குவப்படுவதை வலியுறுத்துகிறது.*

*நாம் எல்லாரும், "தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படி" தீர்மானித்துக் கொள்ளுவோம் (எபேசியர் 4:15).*

## இன்னும் அதிகமான தேவபக்திக்கு உங்களை நீங்களே நீட்டுங்கள்

*தலைமைத்துவம் என்பது தகுதியாம்சங்களைச் சார்ந்தது போலவே நடத்தைகளையும் சார்ந்துள்ளது. இது பொதுப்படையாக தலைமைத்துவத்திற்கே உண்மையாக இருக்கிறது. உதாரணங்களுக்கு, அரசியல் ரீதியான அதிகாரிகளாவதற்கு சில தகுதியுடைய நபர்களைக் குறிப்பிடலாம், ஆனால், அவபக்தியுள்ள வாழ்வை வாழும் போது, அந்த ஸ்தானத்தைப் பெற தகுதியற்றவர்களாகிறார்கள். இந்தக் கருத்து ஆவிக்குரிய வழிநடத்துனர்களுக்கு இன்னும் அதிகமாய் உண்மையானது. சுயமாய் அறிவிப்புக்கொடுத்து தன்னை ஆவிக்குரிய தலைவராக்கிக் கொண்டுள்ள ஒருவருடைய ஒழுக்கமற்ற வாழ்க்கை வெளிப்படுத்தப்படும்போது என்ன ஒரு வெட்கத்துக்குரிய காட்சி!*

*பக்தியுள்ள மனுஷர்களாயிருக்க வேண்டும் எனும் கருத்து நம்முடைய வசனப்பகுதியில் அநேக முறை காணப்படுகிறது. இரண்டாவது வசனத்தில் நாம் வாசிக்கிற வார்த்தைகள்: "குற்றஞ்சாட்டப்படாதவனாய் இருக்க வேண்டும்." "பரிபூரணப்பட்டவர்களாயிருத்தல்" என்பது இதன் பொருள் அல்ல, ஆனால் அந்த நபர் தேவனைப் பிரியப்படுத்தும் வாழ்க்கையை வாழ பிரயாசப்படுகிறார் என்பதை அது பொருள்படுத்துகிறது. இந்த வார்த்தைகள் சபைக்குள் நற்பெயரை வாங்கிக் கொடுப்பதை தொடர்புடையதாக்குகிறது. பிறகு வசனம் 7ல் "சபைக்குப் புறம்பேயிருக்கிறவர்களிடத்திலும் நற்சாட்சி பெறுகிறவராய்," அதாவது சமுதாயத்திலும் நற்பெயர் வாங்குகிறவராயிருக்க வேண்டும் என்று கூறுகிறது.*

*வசனங்கள் 2 லும் 7 லும் நம்முடைய வெளித்தோற்றத்தை அந்தப் பகுதிகள் குறிப்பிடுவதில்லை, ஆனால் உள்ளாக உள்ள தகுதிகள் வெளியே பிரதிபலிக்கிறதைக் குறிப்பிடுகிறது. இதே போன்று தீத்து 1ம் அதிகாரத்தில், பின்வரும் வார்த்தைகளை வசனம் 8ல் நாம் காணுகிறோம்: "நல்லோர்," "நீதிமான்," "பரிசுத்தவான்."*

## சுயக் கட்டுப்பாட்டைக் கற்றுக் கொள்ள உங்களை நீட்டுங்கள்

*நம்மில் யாருமே கற்றுக்கொள்ள மிகவும் கடினமான ஒரு காரியம் சுய - கட்டுப்பாடு. ஞானி எழுதினார், "பலவானைப் பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன், பட்டணத்தைப் பிடிக்கிறவனைப்பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன்" (நீதிமொழிகள் 16:32). அப்போஸ்தலனாகிய பவுலும் இந்தப் போராட்டத்தைக் கொண்டிருந்தார். அவர் "மற்றவர்களுக்கு பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்" என்று சொன்னார் (1 கொரிந்தியர் 9:27).*

*1 தீமோத்தேயு 3:2ல் ஒரு மூப்பர் "ஜாக்கிரதையுள்ளவனாக" இருக்க*

வேண்டும் எனக் குறிப்பிடுகிறது. கிரேக்க நிபுணர் J. W. ராபர்ட்ஸ் "மூல வார்த்தையில் மதுபானம் அருந்தாதவர் என்ற பொருளில் கூறப்படுகிறது. அதாவது சாதாரணமான திராட்சைரசம் போன்ற மிருதுவான பானத்தைக் கூட தொடாமல் விலகியிருப்பவர். இதன் இரண்டாவது பொருள் மனத்தெளிவும் அல்லது ஆரோக்கியமான மனம் உடையவராயிருத்தல்" என்று எழுதினார்.[8] ஒருவர் தனது வாழ்க்கையின் எல்லா காரியங்களிலும் சுயக் கட்டுடையவராக இருக்கக் கற்றுக் கொண்டவர் என்று இந்த வசனம் சுட்டிக்காட்டுகிறது.

அடுத்ததாக, இந்த வசனம் ஒரு மூப்பர் "தெளிந்தபுத்தியுள்ளவராக" இருக்க வேண்டும் என்று சொல்லுகிறது. KJV யில் "தெளிந்த புத்தி" என்றும், NIV மொழிபெயர்ப்பில் "சுயக்கட்டுப்பாடு கொண்டவர்" என்றும் கூறப்படுகிறது. ஒரு மூப்பர் சிரிக்கக் கூடாது, புன்முறுவல் செய்யவோ, அல்லது பொழுது போக்கான மகிழ்ச்சியை பெறக் கூடாது என்பது இதன் பொருள் அல்ல.

பிறகு இந்த வசனம் ஒரு மூப்பர் "யோக்கியதையுள்ளவராக" இருக்க வேண்டும் என்று சொல்லுகிறது (KJV யில் "நல்ல நடத்தையுடையவர்" என்று உள்ளது). இந்த வார்த்தைகளின் பின்னணியிலுள்ள கிரேக்க வார்த்தை ஒரு ஆர்வமிக்க வார்த்தை, *காஸ்மஸ்* எனும் பதத்திலிருந்து வந்தது, இந்த வார்த்தை "உலகம்" அல்லது "அண்ட சராசரம்," என்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது, அதன் அடிப்படை அர்த்தம் "நன்கு - ஒழுங்கு செய்யப்பட்டது"[9] அல்லது "அமைவு" பெற்றது. ஒரு மனிதனின் அடிப்படை வாழ்வின் ஒழுங்கை இது சுட்டிக் காட்டுகிறது - இதற்கு எதிரிடையாக ஒருவர், உதாரணமாக, தான் செலுத்த வேண்டியதை, எப்போதும் செலுத்தத் தவறுபவர்.

நாம் ஜாக்கிரதையுள்ளவர்களாகவும், மனத்தெளிவு உள்ளவர்களாகவும், யோக்கிதையுள்ளவர்களாகவும் இருக்கும்படி கற்றுக் கொள்ள நம்மை நாமே நீ-ட்-டி-க்-கொ-ள்-வோ-மா-க. நாம் சுய கட்டுப்பாட்டைக் கற்றுக் கொள்வோம்!

## ஜனங்களிடம் நல்ல நட்புறவுக்காக உங்களை நீட்டுங்கள்

அடுத்த அறைகூவல் உங்களை நீங்களே ஜனங்களுடன் நட்புறவுக்காக நீட்டுங்கள் என்பதே. சமுதாயத்தில் உள்ள மிகப் பெரிய தேவைகளில் ஒன்று ஜனங்களுடன் ஒத்துப்போவது எப்படி என்பதைக் கற்றுக்கொள்வதுதான். மிகவும் நுட்பமான தொடர்பு சாதனங்கள் தொடர்ந்து வளர்ந்து வந்தாலும், ஜனங்களுக்குள் தொடர்பு கொள்வது மிகவும் மோசமாகிக் கொண்டே போகிறது.

நமது பாடத்திற்கான மைய வசனப்பகுதியின் வசனம் 3ல் மற்றவர்களுடன் ஒத்துப்போவதன் அவசியத்தை சிறப்புக் கூறாகக் குறிப்பிடுகிறது. உதாரணமாக, ஒரு மூப்பர் "சண்டை பண்ணாதவனாயிருக்க" வேண்டும். முழுமையான யூத வேதாகமத்தில் "போராட்டத்தில் ... நுழைகிறவனாயிருக்கக் கூடாது" என்று சொல்லப்படுகிறது. தர்க்கங்களை தங்கள் கையின் முஷ்டியால் (குத்துச் சண்டையால்) சரிசெய்து விட முடியும் என்று சிலர் நினைக்கின்றனர். (சில நபர்கள் தாங்கள் கிறிஸ்தவனாக மாறுவதற்கு முன் எப்படியிருந்திருக்கக் கூடும் என்று இதிலிருந்து தெரிகிறது.) ஒக்லஹோமா செனட்டின் தளத்தில் குத்துச்

சண்டை நடப்பதைப் பார்த்திருக்கிறேன்; திருமண ஒத்திகை நிகழ்ச்சியில் குத்துச் சண்டையைப் பார்த்திருக்கிறேன். ஆனால், ஒரு மூப்பர்கள் கூட்டத்திலோ ஒரு உள்ளூர் சபையின் ஆண் அங்கத்தினர்கள் நடத்தும் மாதாந்திர பொருளாதாரக் கூட்டத்திலோ குத்துச் சண்டையை பார்த்ததில்லை, ஆனால் கட்டுக்கடங்கா கோபாவேசங்களைக் காண்கிறேன். ஒரு மூப்பர் அப்படியிருக்கலாகாது; ஒரு கிறிஸ்தவனும் அப்படியிருக்கலாகாது.

இந்த வசனத்தின் முடிவில், KJV "சண்டை பண்ணாதவனாயிருக்க" வேண்டும் என்று உள்ளது.[10] இந்த வார்த்தையின் பொருள் "போராடுகிறவனாயிருக்கக் கூடாது," முன்கோபியாயிருக்கக் கூடாது (காண்க தீத்து 1:7). நாம் சத்தியத்துக்காகப் போராடத்தான் வேண்டும் (1 தீமோத்தேயு 6:12; 2 தீமோத்தேயு 4:7; யூதா 3; 1 தெசலோனிக்கேயர் 2:2), ஆகிலும் நாம் *வாக்குவாதம் செய்யும்* நபராய் இருக்கக் கூடாது. சில கிறிஸ்தவர்கள் எங்கு சென்றாலும் பிரச்சனைகளை கிளப்புகிறவர்களாயிருப்பார்கள். அவர்கள் சண்டைகளை விதைப்பார்கள்; சந்தேகத்தையும் விதைப்பார்கள். நாம் அவ்வாறு *இருக்கக் கூடாது*.

சண்டைக்காரர்களாகவோ வாக்குவாதம் செய்பவர்களாகவோ இருப்பதற்குப் பதில், நாம் பொறுமையுள்ளவர்களாயிருக்க வேண்டும். "பொறுமை" என்று இங்கு சொல்லப்பட்டிருப்பது மொழிபெயர்ப்பது கடினம். இன்டர்லீனியர் எனும் எனது வேதாகமத்தில், "சகித்துக்கொள்ளுதல்,"[11] என்றுள்ளது, அதாவது, சின்ன குறைகளை மேலோட்டமாய் எடுத்துக் கொள்வது. பிறகு இந்த வசனம் சொல்லுகிறது, நாம் "சமாதானம் பண்ணுகிறவர்களாய்" இருக்க வேண்டும் என்று சொல்லுகிறது, எப்போதும் மற்றவர்களோடு சமாதானத்தை உண்டுபண்ணவும் தேடவும் செய்ய வேண்டும்.

நாம் விவாதித்துக் கொண்டுள்ள குணாதிசயங்கள் எதிர்மறை தகுதிகள் மட்டுமல்ல (நாம் சண்டை *பண்ணக்கூடாது* என்று சொல்வதுபோல), அதேபோல் நேர்மறைத்தகுதிகளையும் குறிப்பிடுகிறது. நாம் மக்களை நேசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். கர்த்தருடைய சபையில் ஒருவர் மற்றவர்களுடன் நேர்மறை உறவுமுறைகளை ஏற்படுத்திக் கொள்ள முடியாவிட்டால் மற்றவர்களை வழிநடத்த இயலாது. வசனம் 2ல் கூறப்படுகிற தகுதியாம்சத்தை கவனியுங்கள்: "உபசரிக்கிறவன்" கிரேக்க வார்த்தையில் "உபசரிப்பு" என்பது "அந்நியர்களை நேசிக்கிறவன்."[12] என்று அர்த்தப்படுகிறது பவுலின் நாட்களில் (சத்திரம்) தங்குமிடங்கள் அதிக விலையுள்ளவைகளும் பெரும்பாலும் அழுக்கானவைகளுமாயிருந்தன. அந்த நாட்களில், ஒரு நாடகத்தில் ஒருவர் மற்றவரைப் பார்த்து கேட்கிறார், "நீங்கள் எங்கே தங்குவீர்கள்?" இரண்டாமவர் சொன்னார், "ஈக்கள் கொஞ்சமாய் இருக்குமிடத்தில்."[13] மேலும் சத்திரங்கள் பெரும்பாலும் பாதுகாப்பில்லாமல் இருக்கும், விசேஷமாக கிறிஸ்தவர்களுக்கு. வழிப்பயணிகளாய்ச் செல்லும் அவர்களுடைய சகோதர சகோதரிகளுக்கு கிறிஸ்தவர்கள் தங்கள் வீட்டின் கதவுகளைத் திறந்துவிட வேண்டியது அவசியமாயிருந்தது.

*அந்நியர்கள்* என்பதை உங்கள் மனதில் குறித்துக் கொள்ளுங்கள். நாம் அறிந்திருக்கிற ஜனங்களோடு மட்டுமே இருக்க விரும்புவதும், நமக்கு அமைதி கிடைக்கும் என்ற உணர்வைக் கொடுக்கும் கூட்டத்தோடு இருப்பதுமே நமது வழக்கம். சபையில் தலைமைத்துவப் பொறுப்பில் இருப்பவர் எல்லாருடனும்

*நட்பாகப் பழக வேண்டும். வெளிப்பார்வையாளர்கள் தங்களை வரவேற்பதை உணரத்தக்க வகையில் ஒரு தலைமைத்துவப் பொறுப்பில் இருப்பவராக காணப்பட வேண்டும், அவர் புதிய அங்கத்தினர்களை ஊக்கமளித்து உற்சாகப்படுத்துவதில் தனிகவனம் செலுத்தும் நபராக இருக்க வேண்டியது அவசியம், சுருங்கச் சொன்னால் தலைமைத்துவத்தில் இருப்பவர் ஜனங்களை நேசிப்பவராக இருப்பது அவசியம். நாமெல்லாருமே நம்மையே நீட்டி ஜனங்களை நேசிக்கவும் அவர்களோடு ஒத்துபோகக் கூடியவர்களாயும் இருக்கக் கற்றுக் கொள்ள வேண்டியது நம் முன் வைக்கப்பட்டுள்ள சவால்.*

## உங்கள் முந்நுரிமையை சரிக்கட்ட ஏதுவாக நீங்கள் உங்களை நீட்டுங்கள்

*நமது அடுத்த சவால் நமது முந்நுரிமைகளை சரி செய்வது தான். ஊடகங்கள் தொடர்ந்து சில காரியங்களை விளம்பரப்படுத்தி, "இவைகள்தான் வாழ்க்கையில் முக்கியமானது"[14] என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டிருப்பர். அந்தக் கண்ணோட்டத்தைக் கடந்து வளர்ந்துள்ள ஆவிக்குரிய வளர்ச்சியடைந்த ஆண்கள் (பெண்களும்) நமக்குத் தேவை.*

*பண ஆசை இல்லாத மனுஷர்கள் தேவை, ஆனால் மாறாக அவர்கள் சபையை நேசிக்கிறவர்களாக இருக்க வேண்டும். ஒரு பக்கம் மூப்பர் "பண ஆசை இல்லாதவராயிருக்க வேண்டும்" (வசனம் 3).[15] அதாவது "போராசை" இல்லாதவராயிருக்க வேண்டும். உலகப் பொருள் அவருக்கு அதிக முக்கியமானதல்ல. மற்றொருபக்கம், சபை அவருக்கு முக்கியமானது. வசனம் 5ல் சொல்லப்படும் வார்த்தைகளைக் கவனியுங்கள்: "தேவனுடைய சபையை விசாரிக்கிறவன்." "சபையை விசாரித்தல்" எனும் சொற்றொடர் நல்ல சமாரியன் காயப்பட்ட மனுஷனைக் கொண்டு போய் சத்திரத்தில் சேர்த்து சத்திரத்தானிடம் சொன்னபோது உபயோகித்த வார்த்தைகள் இவை, "நீ இவனை விசாரித்துக் கொள்; அதிகமாய் ஏதாகிலும் இவனுக்காக செலவழித்தால், நான் திரும்பி வரும்போது அதை உனக்குத் தருவேன்" என்றான் (லூக்கா 10:35). இந்த வார்த்தைகள் என்னவெல்லாம் தேவையோ அவைகளை வழங்குவதைச் சுட்டிக் காட்டுகின்றன. சபையை விசாரித்தல் - அதுக்கு என்ன தேவையோ அவைகளைக் கொடுத்து - விசாரிப்பதே தலைமைத்துவத்துக்கு தேவன் கொண்டுள்ள நோக்கம்.*

*மனப்பூர்வமாய் கர்த்தருக்கு ஊழியஞ்செய்ய ஆயத்தமாயுள்ள ஆண்கள் நமக்குத் தேவை. "நல்ல வேலையை விரும்புகிறான்" என்று பவுல் குறிப்பிட்டார் (வசனம் 1). நல்ல ஒரு பதவியைப் பெற அவன் விரும்புவதில்லை, நல்ல வேலையை (ஊழியத்தை) செய்ய விரும்புகிறான். "வேலை" எனும் வார்த்தை எர்ஜ், என்பதிலிருந்து வந்தது. இதிலிருந்துதான் ஆங்கிலத்தில் "energy" ("சக்தி") என்னும் வார்த்தையைப் பெறுகிறோம். தேவனுடைய ஊழியத்தில் தங்களுடைய "சக்தியை" செலவிடும் தனிநபர்கள் நமக்குத் தேவை.*

*நாம் சபையில் அன்பு கொண்டுள்ளோம் என்பதையும் கர்த்தருக்கு ஊழியஞ்செய்ய மனவிருப்பமுள்ளவர்களாயிருக்கிறோம் என்பதையும் வெளிக்காட்ட ஒரு முக்கியமான வழி நாம் முன்வந்து போதிப்பதுதான். பவுல் "போதக சமர்த்தனாக" ஒரு மூப்பர் இருக்க வேண்டும் என்று*

சொன்னார். இது அடிப்படைத் தேவையான போதிக்கும் திராணியை மட்டும் குறிப்பிடவில்லை, மாறாக போதிக்க விருப்பமுள்ளவராகவும், போதிப்பது எப்படி என்று கற்றுக் கொள்ள மனவிருப்பம் உள்ளவராகவும் இருக்க வேண்டும். எபிரேயர் 5:12 சொல்லுகிறது நாம் எல்லாருமே போதகராயிருக்க வேண்டியவர்கள்: "காலத்தைப் பார்த்தால் [எவ்வளவு காலம் நீங்கள் கிறிஸ்தவர்களாக இருக்கிறீர்கள் என்பதை ஆராய்ந்து பார்த்து] போதகர்களாயிருக்க வேண்டியவர்கள்." ஆகிலும், *பகிரங்கமாக* போதிக்கிற பணியை "போதக சமர்த்தனாய்" இருக்க வேண்டும் எனும் பதம் குறிப்பதில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும். ஒவ்வொரு தகப்பனும் தனது பிள்ளைகளுக்கு போதிப்பது அவசியம், நாம் எல்லோருமே எதாவது ஒரு வகையில் நமது விசுவாசத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டியது அவசியம். நீங்கள் சபையில் ஒரு ஆண் அங்கத்தினராக இருப்பின், நீங்கள் போதிக்க ஏதுவாகக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக உங்களையே நீங்கள் நீ-ட்-டு-ங்-க-ள், இப்படியாக நீங்கள் "போத சமர்த்தனாயிருக்க" இயலும்.

## நீங்கள் ஒரு சிறந்த குடும்பஸ்தனாக இருக்க உங்களை நீங்களே நீட்டுங்கள்

பின்னணிப் பாடத்தில் மூப்பர்களுக்கென பிரத்தியேகமாய்ச் சொல்லப்பட்ட தகுதியாம்சங்களில் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் தேவை என்று கோரப்படாதவைகள் (1) நூதன சீஷனாயிருக்கக் கூடாது, மற்றும் (2) மணமாகி விசுவாசமுள்ள பிள்ளைகளையுடைவர்களாயிருக்க வேண்டும் என்பதைக் கண்ணுற்றேன். உங்களில் அநேகர் அநேக ஆண்டுகளாக கிறிஸ்தவர்களாக இருக்கிறீர்கள், உங்களில் அநேகர் திருமணமாகியிருக்கிறீர்கள் அல்லது ஒரு நாளில் ஆகப் போகிறீர்கள், ஆகையால், என்னுடைய கடைசி அறிவுரைகள் பெரும்பாலானோருக்கு, எல்லாருக்கும் இல்லாவிட்டாலும், நம் ஆண் அங்கத்தினர்களுக்கு பொருந்தும்: நீங்கள் ஒரு சிறந்த குடும்ப மனிதராக மாற உங்களை நீங்களே நீட்டுங்கள். நமது முன்னுரிமைகளை சரிக்கட்டுவதைக்குறித்து சற்று நேரத்துக்கு முன் பேசினோம். ஒரு மணமான கிறிஸ்தவனுக்கு, நல்ல புருஷனாக தகப்பனாக இருப்பதைக் காட்டிலும் அதிக முக்கியமான முன்னுரிமைகள் வெகு சிலவே.

சபையை விவரித்துக்காட்ட எண்ணற்ற உருவகங்கள் அவை - ராஜ்யமாக, ஒரு சரீரமாக, ஒரு திராட்சைத் தோட்டமாக, ஒரு மந்தையாக, மற்றும் தேவனுடைய சேனையாக புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆயினும், "குடும்பம்" எனும் பதத்தைக் காட்டிலும் அதிக அர்த்தமுடைய வேறு எந்தப் பதமும் பயன்படுத்தப்பட வில்லை. பவுல் தீமோத்தேயுவினிடத்தில் மூப்பர்களுக்கான தகுதியாம்சங்களை கொடுப்பதினால் "தேவனுடைய *வீட்டிலே* நடக்க வேண்டிய வகையை" அவன் அறிந்து கொள்வான் என்று சொன்னார் (1 தீமோத்தேயு 3:15; வலியுறுத்தல் என்னுடையது; கலாத்தியர் 6:10யும் காண்க). இந்த வசனப்பகுதியில், "வீடு" என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தை குடும்பத்தைக் குறிக்கும் (ஒப்பீடுக வசனம் 4). மூப்பர்களைக்குறித்து பவுல், ஒருவன் தேவனுடைய குடும்பத்தை வழிநடத்த வேண்டுமாயின் தன்

சொந்தக் குடும்பத்தில் வழி நடத்த முதலில் கற்றுக் கொள்ள வேண்டும் என குறிப்பிட்டார்.[16]

இந்த வசனப்பகுதி நாம் புருஷர்களாக, தகப்பன்மார்களாக இருக்க அநேகப் பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம் என்பதை வலியுறுத்துகிறது. உதாரணமாக, நமது குடும்பத்தின் *பொறுப்பை* நாம் கற்றுக் கொள்வது அவசியம். இந்தப் பொறுப்பு மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தையான "நடத்துகிறவனாக" (அல்லது "நடத்தக் கூடியவனாக") இருக்க வேண்டும் என்று வசனம் 4 மற்றும் 5ல் சொல்லப்படுகிறது:[17] "தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் *நடத்துகிறவனுமாயிருக்க* வேண்டும் ... (ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை *நடத்த* அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?)" (வலியுறுத்தல் என்னுடையது). "நடத்துதல்" எனும் வார்த்தை கிரேக்க மொழியில் ஒரு தொகுப்பு வார்த்தை, அதன் பொருள் "முன் நிற்குதல்."[18] ஒரு குடும்பத்துக்கு முன் அதன் நடத்துபவனாக நிறுத்தும் நபர் யார்? தேவன் (எபேசியர் 5:23; 6:4). கேள்வி இதுதான், தேவன் நம்மேல் சுமத்தியுள்ள பொறுப்பை நாம் *ஏற்றுக் கொண்டுள்ளோமா?*

நமது *மனைவிகளுக்கான* பொறுப்புக்களை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோமா? வசனம் 2, மூப்பர் "ஒரே மனைவியை உடைய புருஷனாக இருக்கவேண்டும்" என்று சொல்கிறது. இதன் கோரிக்கை, ஒரு மூப்பர் மனைவியை உடையவராக மற்றும் ஒரே ஒரு மனைவியை உடையவராக இருக்க வேண்டும் என்பதே. இந்த வார்த்தைகள் இன்னும் மேலான பொருளையுடையது என்று நான் நம்புகிறேன். NEB யில் "நம்மை நடத்துபவர் ... தனது ஒரே மனைவிக்கு உண்மையுள்ளவராக ... இருக்க வேண்டும்" என்றுள்ளது. எபேசியர் 5, ஒரு மனைவியையுடைய புருஷனாயிருப்பது என்பது எவற்றை உள்ளடக்குகிறது என்று கூறுகிறது: "புருஷர்களே, உங்கள் மனைவிகளில் *அன்புகூருங்கள்*, அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து, தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்" (வசனங்கள் 25, 27; வலியுறுத்தம் என்னுடையது).

நமது *பிள்ளைகளுக்கான* பொறுப்புக்களை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோமா? எபேசியர் 6:4ல் தகப்பன்மார்களுக்கு கொடுக்கப்பட்ட அறைகூவலுக்கு நாம் நம்மில் அநேகர் பழக்கப்பட்டிருக்கிறோம்; "பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக." அது பெரிய ஒரு அறைகூவல், ஆனாலும் நமது பாடக்கருத்து வசனம் அதிலும் பெரியது: "தன் பிள்ளைகளை சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப்பண்ணுகிறவனுமாயிருக்கவேண்டும்" (1 தீமோத்தேயு 3:4ஆ). RSV, "அவன் தன் பிள்ளைகளை கீழ்ப்படிதலும் எல்லாவகையிலும் மரியாதையுள்ளவர்களுமாய்வைத்திருக்க வேண்டும்" என்று சொல்லுகிறது. மற்றமொழிபெயர்ப்புகளிலும் பொழிப்புரைகளிலும் பிள்ளைகள் கட்டுப்பாட்டிலும் நல் - நடத்தையிலும் வளர்க்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்துகிற பதங்களை பயன்படுத்துகின்றன (காண்க CEV; Phillips; LB) எப்படிப்பட்ட அறைகூவல் இது! பிதாக்களே உங்கள் பிள்ளைகளுக்காக நேரத்தை ஒதுக்குங்கள். எப்படி ஒரு நல்ல தகப்பனாக இருக்க முடியும் என்று அறிந்து கொள்ள நேரத்தை எடுத்துக் கொள்ளுங்கள்.

*புருஷர்களாக மற்றும் தகப்பன்மார்களாக கற்றுக் கொள்ள வேண்டிய மற்றொரு பாடம் என்னவென்றால், தேவன் கொடுத்த நமது அதிகாரத்தை குடும்பங்களிலே பயன்படுத்துவது சரியான வழியாக இருக்கிறது. வசனங்கள் 4, 5, ல்* KJV ("rule") *"ஆளுகிறவன்" என்றும் மற்றும்* NASB ("manages"), *"நிர்வாகம் பண்ணுகிறவன்" என்றும் மொழிபெயர்க்கப்பட்டிருப்பவை உறவுமுறை சம்பந்தத்தில் பேசுகிறது. நாம் யாராக இருக்கிறோம் என்பதைப் பொறுத்து மற்றவர்கள் நம்முடைய தலைமைத்துவத்தைப் பின்பற்றுவார்கள் - ஏனெனில் நாம் அவர்களோடு நல்ல நட்புறவைக் கொண்டுள்ளோம்.*[19]

*நம்மில் தகப்பன்மார்களாக, புருஷர்களாக இருக்கிற எல்லாருமே ஒவ்வொரு நாளும் புருஷர்களாக தகப்பன்மார்களாக இருக்க ஏதுவான முறையில் நம்மை நாமே நீ-ட்-டு-வோ-மா-க. பவுல் சொன்னபடி, நமது வீட்டாரில் நாம் கவனம் செலுத்த முடியாமல்போனால், தேவனுடைய குடும்பத்தை நாம் எப்படி கவனமாக விசாரிக்க உதவி செய்யக் கூடும்?*

## முடிவுரை

*நம்முடைய பாடத்தின் சாராம்ஸம் பின்வருமாறு குறிப்பிடப்படலாம்: ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவைப் போலிருக்க உங்களை நீங்களே நீட்டுங்கள். கிறிஸ்தவ ஒழுக்கங்கள் அனைத்தும் இயேசுவுக்குள் அடங்கியிருக்கிறது, "ஒரே மனைவியையுடைய புருஷன்" எனும் தகுதியாம்சம் கூட. கிறிஸ்து சபையாகிய, ஒரே மணவாட்டிக்கு மணவாளன் - மற்றும் அவர் ஒரு புருஷன் எப்படியிருக்க வேண்டுமென்று நமக்குக் காட்டுகிறார். முடிவில், ஆவிக்குரிய வளர்ச்சி என்பது இயேசுவைப் போலாவது. எபேசியர் 4:15ல் சொல்லப்பட்ட அறைகூவலை உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன்: "தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் வளருகிறவர்களாயிருப்போம்."*

*ஜெபிப்போமாக:*

> *பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே, இங்கு கூடியிருக்கிற ஆண்கள் மற்றும் பையன்களின் சார்பில் உம்மிடத்தில் வருகிறேன். உம்முடைய ஆவிக்குரிய ராஜ்யத்தில் ஆண்கள்தான் தலைமைத்துவப் பொறுப்பை வகிக்கும்படி ஏன் கூறினீர் என்று எங்களுக்குத் தெரியாது, ஆகிலும் நாங்கள் அந்த அறைகூவலையும் பொறுப்பையும் ஏற்றுக் கொள்கிறோம். உம்முடைய உதவியில்லாமல் நாங்கள் அந்த சவாலை சந்திக்கவோ இந்த கொடுக்கப்பட்ட பொறுப்புக்களை நிறைவேற்றவோ முடியாது என்று நாங்கள் அறிந்திருக்கிறோம். எங்கள் குறைவுகளையும் குற்றங்களையும் நாங்கள் அறிந்திருக்கிறோம், எனவே கர்த்தாவே எங்களுக்கு உதவும். நாங்கள் எப்படியிருக்க வேண்டும் என்பதை அறிந்துகொள்ள உதவும்படி எங்களுக்கு 1 தீமோத்தேயு 3 மற்றும் வேறு வசனப்பகுதிகளைக் கொடுத்திருப்பதற்காக உமக்கு நன்றி. இப்பொழுது நாங்கள் வளர உதவி செய்யும்; நாங்கள் முழுமையடைய உதவும். எங்களை வழிநடத்தும், பெலப்படுத்தும், ஊக்கப்படுத்தும். நாங்கள் இருக்க வேண்டிய முறைப்படி இருக்க உதவிசெய்யும், அதினால் நாங்கள் முறைப்படி உமக்கு ஊழியஞ்செய்யக் கூடும். எங்களுடைய கடந்த கால பாவங்களை மன்னித்தருளும், எதிர்வரும் நாட்களில் எங்களுடன் இருந்தருளும். இயேசுவின் நாமத்தில், ஆமேன்.*

# குறிப்புகள்

*நீங்கள் இந்தப் பிரசங்கத்தை கிறிஸ்துவினிடத்தில் வரும்படி அழைப்புக் கொடுத்து முடிப்பீர்களானால், ஒரு ஆணோ பெண்ணோ தேவனுடைய பிள்ளையாகிற வரைக்கும் சபை அந்த நபரை பயன்படுத்த முடியாது என்பதை கவனிக்கவும். அவர்கள் ஆவியினாலும் ஜலத்தினாலும் பிறக்க வேண்டும் (யோவான் 3:5), மனங்குத்தப்பட்ட ஒரு விசுவாசியாய் ஞானஸ்நானம் பண்ணப்பட வேண்டும் (நடபடிகள் 2:38) என்பதைக் கவனியுங்கள். கர்த்தருக்கு விசுவாசமாயிராதவர்களை அவர் தாம் விரும்புகிற பணிக்கு பயன்படுத்த இயலாது என்பதையும் கவனிக்கவும். அப்படிப்பட்டவர்கள் மீட்கப்பட ஊக்கமளியுங்கள் (கலாத்தியர் 6:1; நடபடிகள் 8:22; யாக்கோபு 5:16).*

---

குறிப்புகள்

[1]Gene A. Getz, *The Measure of a Man* (Ventura, Calif.: Regal Books, 1974). [2]KJV *பழைய ஆங்கிலத்தில்* "desireth" *என்று பயன்படுத்தப் பட்டுள்ளது.* [3]*ஓர்கோ, எனும் வார்த்தை, பவுலின் நாட்களில் பொதுவாக பயன்படுத்தப் பட்டது, புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ள சில தடவைகளில் இதுவும் ஒன்று.* [4]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, Ltd., 1971), 291. [5]Ibid. [6]*ஒரு கிறிஸ்தவ மனிதன் தன்னால் ஆனமட்டும் தனது குணாதிசயங்களை வளர்த்துக் கொள்கிறான், ஆனாலும் அவன் மூப்பராகும் தகுதியைப் பெற்றுவிட்டான் என்று உறுதியளிக்கப்படுவதில்லை; ஆகிலும் கர்த்தருடைய காரியத்துக்காக மிகப்பெரிய உதவியை செலுத்தத்தக்க பொறுப்புமிக்கவனாயிருப்பான்.* [7]*Neophyte என்பது neo ("புதிய") மற்றும் phuo (வளரும் செடியைக்குறிக்கும்).* (*The Analytical Greek Lexicon,* 276, 431.) [8]J. W. Roberts*, Letters to Timothy,* The Living Word series (Austin, Tex.: R. B. Sweet Co., 1964), 28. [9]*The Analytical Greek Lexicon,* 238. [10]KJV *பயன்படுத்திய கிரேக்க வசனப்பகுதி "சண்டை பண்ணாதவன்" எனும் கூடுதல் வார்த்தை மொழிபெயர்ப்பாளர்களால் இங்கே பயன்படுத்தப் பட்டது.*

[11]Alfred Marshall, *The Interlinear Greek-English New Testament,* 2d ed. (London: Samuel Bagster & Sons, Ltd., 1958), 824. [12]*Philoxenia என்பது phileo என்பதன் தொகுப்பு வார்த்தை ["அன்பு"] மற்றும் xenos ["அந்நியர்"].* (Vine, 312.) [13]Aristophanes *The Frogs.* [14]*உங்கள் சமுதாயத்தில், "இது சிறப்பானது" அல்லது "அதில் இன்னும் அதிகமாய்" போன்ற நெருக்கடியான சூழலுக்கு மூல காரணம் என்ன? அது ஒருவேளை குடும்ப உறுப்பினர்கள் அல்லது அடுத்த வீட்டு அயலகத்தாரிடமிருந்து வந்திருக்கலாம்.* [15]KJV *மொழிபெயர்ப்பாளர்கள் இரண்டு கூடுதல் வார்த்தைகளைக் கொண்டுள்ளனர், அதன் பொருள் "கீழ்த்தரமான ஆதாய ஆசையில்லாதவன்"* [*நேர்மையற்ற வழியில் பெறுவது*]. KJV *மொழிபெயர்ப்பாளர்கள் "இழிவான ஆதாயத்தை இச்சிக்காதவன்" என்பதைத்தான் கொண்டுள்ளனர்.* [16]*இது ஒருவன் கொஞ்சத்தில் உண்மையுள்ளவனாயிருந்தால், அநேகத்தின்மேல் அதிகாரியாக வைக்கப்படுவான் என்பதுடன் தொடர்புடையது (காண்க மத்தேயு 25:21, 23).* [17]KJV *யில் "ஆளுகிறவன்"* (ruleth) *மற்றும் "ஆளுதல்"* (rule) *என்றிருக்கிறது.* "Rule" *எனும் வார்த்தை "எஜமானனாக ஒன்றின்மேல் அதிகாரஞ் செலுத்துதலை" பொருள்படுத்தும், ஆகிலும் இந்த வார்த்தைக்கான கிரேக்கப் பதம் இப்படிப் பொருளில் பேசுவதில்லை.* [18]*Proistemi தொகுப்பாக pros ("முன்பாக") மற்றும் histemi ("நிற்கும்படி").* (Vine, 540.) [19]*இந்த புருஷர்களின் தலைமைத்துவமும் அவர்களுடைய*

*மனைவி மற்றும் பிள்ளைகளோடும் கொண்டுள்ள உறவுமுறையும் சமுதாயத்துக்கு சமுதாயம் சில வேளைகளில் வேறுபடும். தகப்பனார்களாகவோ மூப்பர்களாகவோ, நினைத்துப்பாராத கீழ்ப்படிதலை தங்களின் தலைமைத்துவத்துக்கு கீழ் உள்ளவர்களிடம் எதிர்பார்ப்பதும் அவர்களுடைய ஆசைகளைக் குறித்து அக்கறையின்றி இருக்கிறதுமான சர்வாதிகாரப்போக்கு இருக்கலாகாது (காண்க 1 பேதுரு 5:3). இந்தப் பத்தியை நீங்கள் விஸ்தாரமாக்கி நீங்கள் வாழுகிற சூழலுக்கு ஏற்றவாறு பயன்படுத்துங்கள்.*

4

# உலகிலேயே மிகப் பெரிய பணி[1]

## (1 தீமோத்தேயு 3:1–7; தீத்து 1:5–9)

*இந்தப் பிரசங்கம் உள்ளூர் சபையின் அங்கத்தினர்களிடம் திறமையுள்ள மூப்பர்களை நியமிக்க ஏதுவான மனுஷர்களின் பெயர்களை எழுதிக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்ட ஞாயிற்றுக்கிழமை பிரசங்கிக்கப்பட்டது. சிறப்புப் பக்கங்கள் பெயர்களை எழுதிக் கொடுக்கும்படி பிரசங்கத்திற்குமுன் விநியோகிக்கப்பட்டன.*

இந்த உள்ளூர் சபையின் குறிப்பிடத்தக்க வரலாற்று மைல்கல்லை எட்டியிருக்கிறோம், நாம் அநேக மாதங்களாக இந்த நாளைத்தான் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தோம். இந்த நாளில் உள்ளூர் சபையில் மூப்பராக பணியாற்ற ஏதுவாக தகுதி பெற்ற ஆண்களின் பெயர்களை எழுதிக் கொடுக்கும்படிக் கேட்டுக் கொள்கிறோம். இந்த நேரத்தின் ஈர்ப்பு விசையை நான் உணருகிறேன். நாம் இப்பொழுது செயல்படுத்துகிற காரியம் இந்த உள்ளூர் சபையில் வருடக் கணக்காக, பத்தாண்டுகள் கணக்காக கூட தாக்கத்தைக் கொண்டிருக்கும். எனவே, ஜெபத்தோடு நாம் இப்பொழுது துவங்காவிட்டால், அது ஒரு நடைமுறைக்கு அப்பாற்பட்ட காரியமாகி விடும்.

> பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே, ஒரு சபையாகக் கூடிவந்திருக்கிற எங்களோடு நீர் இருப்பீராக. மூப்பர்களை தெரிவுசெய்யும் பொருட்டு அதன் நடைமுறையைத் துவங்குகிற இந்த நேரத்தில், எங்களுக்கு உதவியாயிரும். தகுதியாம்சங்களை நாங்கள் பரிசோதித்துப் பார்க்கிற இந்த நேரத்தில், எங்களுக்கு உதவி செய்வீராக, இவை நீர் கொடுத்த தகுதியாம்சங்கள். இந்தத் தகுதியாம்சங்களைப் புரிந்து கொள்ளவும் தகுதியுள்ள நபர்களைக் கண்டு பிடிக்கவும் உதவியருளும். இந்த ஆண்களை ஏற்படுத்திய பின், அவர்களுக்கு நாங்கள் உதவியாயிருக்கவும், அவர்கள் செய்ய வேண்டிய தங்களின் கடமை களை செயல்படுத்த நாங்கள் அவர்களுக்கு ஊக்கமளிக்கவும் அதினால் நாங்களும் ஒரு உள்ளூர் சபை இருக்க வேண்டிய முறைப்படி இருக்க உதவியருளும். இந்தத் தொடர்பாடத்தை நிறைவு செய்யும் பொருட்டு என்னோடேகூட இருந்தருளும். நான் என்ன சொல்ல வேண்டுமோ அவைகளைச் சொல்லவும் எவ்வகையில் சொல்லவேண்டுமோ அவ்வகையில் சொல்லவும் உதவி செய்யும். எங்கள் எல்லாருக்கும் உதவிசெய்யும், வழிநடத்தும், இயேசுவின் நாமத்தில், ஆமென்.

புதிய ஏற்பாடு வெளிப்படுத்தும் சபையின் ஆளுகை அமைப்பைக் குறித்து ஒரு மேலோட்டமான கண்ணோட்டத்தில் நான் துவங்க விரும்புகிறேன்.[2] கிறிஸ்து தான் சபையின் ஒரே தலைவர் (எபேசியர் 1:22, 23; காண்க மத்தேயு 28:18). மாநில அமைப்போ, தேசீய அமைப்போ, அகில உலக அமைப்போ

கிடையாது. அவை சுதந்திரமாக செயல்படும் உள்ளூர் சபைகளைக் கொண்டது[3] (சுய ஆளுகை அமைப்பை).

ஒரே மாதிரி அமைப்பைக் கொண்ட உள்ளூர்சபைகளை[4] பிலிப்பியர் 1:1ல் வாசிப்பதன் மூலம் காணலாம். பிலிப்பு பட்டணத்தில் இருந்த சபையாருக்கு பவுல் பின்வரும் வார்த்தைகளைக் கொண்டு நிருபத்தை துவங்கி எழுதுகிறார், "இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரராகிய பவுலும் தீமோத்தேயும், பிலிப்பிபட்டணத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவருக்கும் கண்காணிகளுக்கும், உதவிக்காரருக்கும் எழுதுகிறதாவது." இந்த வசனத்தில் நான்கு வித்தியாசப்பட்ட கூட்ட (குழு) மக்களைக் காண்கிறோம்.[5] பவுலும் தீமோத்தேயும் *பிரசங்கியார்கள்*. "பரிசுத்தவான்கள்" என்பது *பொதுவான அங்கத்தினர்களைக்* குறிக்கிறது. அடுத்து இரண்டு குழுக்கள் இருக்கின்றன. முதலாவது "கண்காணிகள்" என்று அழைக்கப்பட்டது. இது சபையின் *மூப்பர்களுக்கு* கொடுக்கப்பட்ட பெயர்களில் ஒன்று. இறுதியாக, *உதவிக்காரர்கள்* இருக்கின்றனர்.

உள்ளூர் சபையின் ஆளுகை அமைப்பில் இருதயம் போல் மையம் வகிப்பவர்கள் மூப்பர்கள். "கண்காணிகள்" என்ற வார்த்தை சுட்டிக் காட்டுவது போல இந்த மனுஷர்கள் உள்ளூர் சபையின் காரியங்களை மேற்பார்வை செய்து கண்காணிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டவர்கள். அவர்கள் "தொடர்ந்து [நமது] ஆத்துமாக்களைக் கண்காணிப்பவர்கள்" (எபிரேயர் 13:17). இந்த மூப்பர்களுக்குக் கீழ், மூப்பர்களோடு, ஊழியம் செய்பவர்கள் உதவிக்காரர்கள். அவர்களுக்கு அடுத்து இருக்கும் அங்கத்தினர்களுடன், பிரசங்கியார்கள் இருக்கின்றனர். கர்த்தருடைய சபையில் உள்ளூர் சபையைக் காட்டிலும் பெரிதான அமைப்பு வேறெதுவும் இல்லாதபடியாலும், ... உள்ளூர் சபைக்குரிய தலையாயப் பொறுப்புகள் அனைத்தும் மூப்பர்களைச் சார்ந்திருப்பதாலும், மனித ஆத்துமாக்களுக்கான பொறுப்புகளைக் காட்டிலும் பெரிதான பொறுப்புகள் வேறெதுவும் இல்லாத படியினாலும், மூப்பர்களாக இருப்பதுதான் *உலகிலேயே மிகப்பெரிய பணி*[6] என்று நான் குறிப்பிடுகிறேன்.

உலகிலேயே மிகப்பெரிய பணி மூப்பர் பணியெனில், பிறகு உலகிலேயே மூப்பர்களை நியமிப்பதுதான் மிக முக்கியமானதும் கடினமானதுமான வேலையாகும்.[7] நாம் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில், மூப்பர்களைக் குறித்து அநேக சத்தியங்களை நான் வலியுறுத்த விரும்புகிறேன். மூப்பராயிருப்பது உலகிலேயே மிகப்பெரிய பணி என்பதற்கு குறைந்த பட்சம் மூன்று காரணங்கள் உண்டு[8]. இந்தப்பணி மிகவும் சரியான தகுதிகோரிக்கைகளை, மிகப்பெரிய பொறுப்புகளை மற்றும் மிக அருமையான பிரதிபலன்களை கொண்டுள்ளது.

## மிகவும் சரியான தகுதிகோரிக்கைகள்

வழக்கமாக ஒரு பணியில் அமருவதற்கு குறிப்பிட்டதகுதியாம்சங்கள் கோரப்படும், அல்லது முன் நிபந்தனைகள் தேவைப்படும். சட்டப்படி, பணி எவ்வளவு முக்கியத்துவமானதோ அந்த அளவுக்குச் சரியான தகுதி நிபந்தனைகளும் தேவைப்படும். கோரப்படும் தகுதிகள் பொதுவாக செய்யப்போகிற வேலையுடன் தொடர்புடையதாயிருக்கும். உதாரணமாக, மூப்பர்கள் ஆவிக்குரிய பொறுப்புக்களையுடையவர்களானதால், ஆவிக்குரிய தகுதி நிபந்தனைகளும் கோரப்படுகிறது.

உலகிலே உள்ள எந்த வேலைக்கும் மூப்பர்கள்தான் மிகவும் சரியான தகுதி நிபந்தனைக் கோரப்படுகின்றனர் என்று நான் நம்புகிறேன். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஒருவர் ஜனாதிபதியாக வரவேண்டுமானால், அவர் முப்பத்தைந்து வயது நிறைந்தவரும் அமெரிக்காவில் குறைந்த பட்சம் பதினான்கு ஆண்டுகளாவது தங்கியிருந்த குடியுரிமை பெற்றவராகவும் இருக்க வேண்டும்.[9] அமெரிக்காவில் இலட்சக்கணக்கோர் இந்தத் தகுதிகளையுடையவர்களாயிருக்கின்றனர். மூப்பர்களுக்கான தகுதி நிபந்தனை கோரிக்கை இன்னும் மிக அதிகமானதாக இருக்கிறது. எல்லாருமே மூப்பராகிவிட முடியாது.

1 தீமோத்தேயு 3 லும் தீத்து 1 லும் வரிசைபடுத்தப்பட்ட தகுதியாம்சங்களை நான் தொகுத்து தரட்டும்.[10] இரண்டையும் கலந்து கொடுக்கப்படுகிற இந்தப் பட்டியலின் ஊடே நான் செல்லும்போது, அந்த இரண்டு வசனப் பகுதிகளிலும் காணப்படுகிற தகுதியாம்சங்களை நீங்கள் ஒப்பிட்டுப் பார்க்கலாம்; அவைகள் உங்கள் வேதாகமத்தில் ஒரு சில பக்கங்களுக்கு அப்பால் மாத்திரமே பிரிக்கப்பட்டுள்ளன.[11]

(1) *குற்றஞ்சாட்டப்படாதவன்.* 1 தீமோத்தேயு 3ல் "கண்காணியானவன் குற்றஞ்சாட்டப்படாதவனும்" (வசனம் 2) என்று நாம் வாசிக்கிறோம். தீத்துவுக்கு எழுதப்பட்ட நிருபத்திலும் மூப்பரானவன் "குற்றஞ்சாட்டப்படாதவனாக" இருக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது (வசனம் 6). தொடர்ந்து, "கண்காணியானவன் தேவனுடைய உக்கிராணக்காரனுக்கேற்ற விதமாய், குற்றஞ்சாட்டப்படாதவனுமாயிருக்க வேண்டும் என்கிறது" (வசனம் 7). முன்பே நாம் கண்டபடி, "குற்றஞ்சாட்டப்படாதவன்" என்பது "பாவமற்றவன்" என்றோ "பரிபூரணப்பட்டவர்கள்" என்றோ பொருளல்ல. கடந்த காலத்தில் செய்யப்பட்டக் குற்றங்கள் சரிசெய்யப்பட்டு விட்டது என்பது இதன் பொருள், அந்த மனுஷன் மனந்திரும்பி விசுவாசமுள்ள கிறிஸ்தவனாக அவசியத்தின்பேரில் ஊழியக்காரனாகக் கூட மீட்கப் பட்டிருக்கலாம். இதன் விளைவாக, இப்பொழுது அவனுக்கு எதிராக எந்தக் குற்றமும் கொண்டுவரப்பட முடியாது.

(2) *ஒரே மனைவியை உடைய புருஷன்.* பலதார மணம் புரிவது பொதுவான வழக்கமாக இருந்த காலத்தில் இது எழுதப்பட்டது. புதியதாக மனமாற்றப்பட்டவர்கள் சிலர் அநேகமாக இந்தப் பிரச்சனையால் போராடிக் கொண்டிருந்திருக்கலாம். இந்தத் தகுதியாம்சம் பலதார மணம் முடித்தவர்களையும் பிரம்மச்சாரிகளையும் தவிர்க்கிறது.[12] ஒரு மூப்பர் ஒரே மனைவியையுடைய புருஷனாக, ஒரே ஒரு மனைவியையுடையவனாக இருக்க வேண்டும்.

(3) *ஜாக்கிரதையுள்ளவன்.* இந்த தகுதியாம்சம் 1 தீமோத்தேயு 3:2ல் காணப்படுகிறது. புதிய ஏற்பாட்டில், கிரேக்க மொழியிலிருந்து "ஜாக்கிரதையுள்ளவன்" என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தையின் பொருள் மறைபொருளில் (உருவக மொழியில்) "எச்சரிக்கையாயிருத்தல், கண்காணிப்பாயிருத்தல்"[13] (கவனமுடன் இருத்தல்) ஆகிய பொருள்களையுடையது. இந்தக் தகுதியாம்சத்தைப் பற்றி சொல்லும் போது தீமைகளுக்கு விலகி நிற்கவும் நன்மைகளுக்கு தன்னடக்கம் உள்ளவராயிருக்கவும் அறிந்திருத்தல் என்று சொல்லப்பட்டது.[14]

(4) *தெளிந்த புத்தியுள்ளவன்.* 1 தீமோத்தேயுவில் "தெளிந்தபுத்தி" என்று குறிப்பிடப்பட்டதை (3:2), தீத்துவில் "அறிவுத்திறன்" என்று (1:8)

கூறப்பட்டுள்ளது; ஆனால் இந்த இரண்டு வார்த்தைகளுமே ஒரே கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது (தமிழிலும் ஒரே வார்த்தையான "தெளிந்த புத்தி" தான் இரண்டு இடங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது). ஒரு மூப்பர் நகைச்சுவை உணர்வுள்ளவராகவே இருக்கக் கூடாது என்பது இதன் பொருள் அல்ல, ஆகிலும் எப்பொழுது நகைப்பது, எப்பொழுது வினயமாக இருப்பது போன்ற காரியங்களை சரியாக அறிந்து செயல்படுவதை அர்த்தப்படுத்துகிறது. இன்னொரு வார்த்தையில் சொன்னால் அவர் பொது அறிவுடையவராயிருக்கிறார்.

*(5) இச்சையடக்கமுள்ளவன்.* NASB வேதத்தில் 1 தீமோத்தேயுவில் இந்தக் தகுதி "மரியாதையுள்ளவன்" என்று குறிப்பிடப் பட்டுள்ளது (3:2). இவ்வார்த்தை "நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட"[15] அல்லது "முறையான" என்று பொருள்படும் வார்த்தையிலிருந்து வந்தது. தீத்துவில் இதேபோன்ற தகுதியை வரிசைபடுத்தியுள்ளார்: (தன்னடக்கமுள்ளவன்) "இச்சையடக்கமுள்ளவன்" (1:8). இவை இரண்டையும் "சுய ஒழுங்குபடுத்தப்பட்ட என்ற தலைப்பில் வைக்கிறேன்." ஒரு மூப்பர் ஒழுங்குபடுத்தப்பட்ட, முறையான வாழ்க்கையை வாழ வேண்டும்.

*(6) உபசரிக்கிறவன்.* இந்த தகுதியாம்சம் 1 தீமோத்தேயுவிலும் (3:2) தீத்துவிலும் (1:8) காணப்படுகிறது. ஒரு மூப்பர் தனது இருதயத்தையும் வீட்டையும் மற்றவர்களுக்காகத் திறந்து வைத்திருக்கிறார், ஏற்கனவே குறிப்பிட்டபடி, "உபசரிக்கிறவன்" என்பது கிரேக்க மொழியிலிருந்து "அந்நியர்களை நேசிக்கிறவன்" என்று பொருள்படத்தக்கதாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஒரு மூப்பர் தனது வாழ்நாள் முழுவதும் ஏதோ கொஞ்சம் நெருங்கிய சபை நண்பர்களுடன் காலத்தைக் கழித்துவிட்டு போவதல்ல. மாறாக அவர் எல்லா அங்கத்தினர்களோடும் பழக ஆர்வம் காட்ட வேண்டும். மூப்பருடைய பெரும்பாலான தகுதியாம்சங்கள் தனது குடும்பத்துடன் சம்பந்தப்பட்டுள்ளது. இது ஒரு உதாரணம். ஒருவரது மனைவி உபசரிப்புக் குணமற்றவராக இருப்பின் அவர் உபசரிக்கிறவராயிருக்க இயலாது.

*(7) போதக சமர்த்தன்.* 1 தீமோத்தேயுவில் "போதக சமர்த்தன்" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது (3:2). இந்த கருத்து தீத்துவில் "ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்திசொல்லவும், எதிர் பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ணவும் வல்லவனுமாயிருக்க வேண்டும்" என்று விரிவுபடுத்தி சொல்லப்படுகிறது (1:9). ஒரு முப்பர் எல்லாவற்றையும் அறிந்து வைத்திருக்க முடியாது, ஆகிலும் வேதாகமத்தின் அடிப்படைகளை அவர் பற்றிக் கொண்டிருப்பது அவசியம். அவர் பிரசங்கிக்கவோ, ஒரு வகுப்பை நடத்தவோ கூடிய திராணியுள்ளவராயிருக்க வேண்டும் என்ற அவசியமில்லை,[16] ஆகிலும் ஏதோ ஒரு வகையில் மற்றவர்களோடு சத்தியத்தை பகிர்ந்து கொள்ளுகிற திறமையுடையவராயிருப்பது அவருக்கு அவசியம்.

*(8) உண்மையான வசனத்தைப் பற்றிக் கொண்டிருப்பவன்.* இதற்கு முன் பேசப்பட்டதற்கு ஏறத்தாழ தொடர்புடையவை, "ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்திசொல்லவும், எதிர் பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ணவும் வல்லவனுமாயிருக்கும்படி ... உண்மையான வசனத்தை நன்றாய் பற்றிக்கொள்ளுகிறவனுமாயிருக்க வேண்டும்" (தீத்து 1:9). ஒரு மூப்பர் சத்தியத்தில் ஆழமாய் வேரூன்றி இருக்க வேண்டியது அவசியம், ஏனெனில்

“பலவித போதகமாகிய காற்றினாலே அடிபட்டு அலைகிறவர்களாயிருக்கக் கூடாது” (எபேசியர் 4:14). தேவனுடைய வெளிப்பாட்டை ஒருபோதும் கைவிடுவதில்லை என்கிற தீர்மானத்தையுடையவர் அவர்.

(9) *மதுபானப் பிரியனாயிருக்கக் கூடாது.* இந்த தகுதி 1 தீமோத்தேயுவிலும் (3:3) தீத்துவிலும் (1:7) காணப்படுகிறது. மூப்பராயிருக்கிற ஒருவர் ஒயின், மதுபானங்கள், மற்றும் “இவ்வுலகம்” சார்ந்த வேலைகளில், அல்லது இவ்வுலகம் சார்ந்த வேறு எந்தக் காரியத்தினாலாகிலும் அடிமைப்பட்டவராயிருக்கக் கூடாது. அவர் ஆண்டவருக்கு மட்டுமே “அடிமை”ப்பட்டிருக்க வேண்டும்.

(10) *சண்டை பண்ணாதவன்.* (1 தீமோத்தேயு 3:3; தீத்து 1:7), ஆகிய இரண்டு பட்டியலிலும் இந்த தகுதியாம்சம் குறிப்பிடப்பட்டுள்ளது, அதன் பொருள் ஒரு மூப்பர் “வன்முறையில் ஈடுபடுகிறவனாக” இருக்கக் கூடாது (NIV). சில மனிதர்கள் நன்றாக சண்டை போடுவதைக் காட்டிலும் வேறெதையும் விரும்புவதில்லை - தங்கள் முஷ்டியால் (குத்துச்) சண்டை போடாவிட்டாலும், தங்கள் வாயால் சண்டையிடுகிறவர்களாயிருப்பார்கள். ஒரு மூப்பர் ஒத்துப்போகாதவர் என்கிற குணாதிசயத்தை பெற்றிருக்க கூடாது.

(11) *முற்கோபமில்லாதவன்.* தீத்து கூடுதலாக, ‘‘முற்கோபமில் லாதவனாயிருக்க’’ வேண்டும் என்று சொல்லுகிறார் (1:7). ஒரு மூப்பர் தனது கோபத்தைக் கட்டுப்படுத்தக் கற்றுக்கொண்டிருக்கிறார். தனது வார்த்தை மற்றவர்களை எந்தவகையிலாவது பாதித்துவிடக் கூடாது என்பதில் விழிப்புணர்வுள்ளவனாயிருக்கிறான்; ஆகையால், தனது வார்த்தைகளை ஜாக்கிரதையாய் தெரிவு செய்து பேசுகிறான்.

(12) *பொறுமையும் சமாதானமும் உடையவன்.* ஒன்று தீமோத்தேயுவில் இந்த நேர்மறைக் குறிப்பை மூப்பர்களின் நடத்தையாகக் குறிப்பிடுகிறார். “சண்டை பண்ணாதவனும், பொறுமையுள்ளவனும். சமாதானமுள்ளவனுமாயிருக்கிறான்” (3:3). ‘‘கனவான் [பொறுமையான மனிதன் - ஜென்டில்மேன்]’’ எனும் வார்த்தை பழக்கத்தில் இல்லாத ஒரு வார்த்தையாகி விட்டது, ஆனால் ஒரு மூப்பர் அப்படியிருப்பது அவசியம். அவர் தனது உணர்ச்சி வசப்படும் தன்மையை கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார், அவர் எவ்வளவாய் உணர்ச்சி வசப்பட்டாலும் மற்றவர்களிடத்தில் பொறுமையோடும் சமாதானத்தோடும் நடந்து கொள்ளுகிறார். அவரே சமாதானம் பண்ணுகிறவராயிருக்கிறார் (மத்தேயு 5:9).

(13) *தன் இஷ்டப்படி செய்யாதவன்.* இந்த தகுதி எதிர்பார்ப்பு தீத்து 1:7ல் சொல்லப்பட்டுள்ளது. ஒரு மூப்பர் எழுப்பப்படுகிற ஒரு தர்க்கத்தின் இருபுறமும் பார்க்க வேண்டும். தனது வழிதான் பின்பற்றப்பட வேண்டும் என்று எப்பொழுதும் குறிப்பிடக் கூடாது. விசுவாசக்காரியம் உட்படாத காரியங்களில், அவன் இரக்கத்துடன் ஒப்புக் கொள்ளலாம்.

(14) *பண ஆசையில்லாதவன்.* 1 தீமோத்தேயுவில் “பண ஆசையில்லாதவன்” என்று சொல்லுகிறது (3:3). ஒரு மூப்பர் முழுநேரப்பணியாற்றி சம்பளமும் அளிக்கப்பட வேண்டியது அவசியமேயானாலும் (காண்க 1 தீமோத்தேயு 5:17, 18),[17] இதன் பொருள், “நீங்கள் ஆதாயம் பெறுவதற்காக மூப்பர்களாகாதிருங்கள்” (காண்க 1 பேதுரு 5:2). அநேகமாக, இந்த வாக்கியம் ஒரு மூப்பர் தனது முன்னுரிமைகளை சரியான முறையில் காத்துக் கொள்வது அவசியம் என்று குறிப்பிடலாம். தனது வாழ்க்கையில் அவர் எதைச் செய்தாலும். பணம் அவரது

பிரதானமான அக்கறையாயிருக்கக் கூடாது. அவருடைய வீடானாலும், சபையானாலும், சமுதாயமானாலும், அவர் ஜனங்களைக் குறித்தே அதிக அக்கறை காட்ட வேண்டும். தீத்துவில் சற்றே வித்தியாசமான கோணத்தில் சொல்லப்படுகிறது: "இழிவான ஆதாயத்தை இச்சியாதவன்"[18] (1:7). சிலருக்கு பணம் மிகவும் முக்கியம், எப்படியாகிலும் அதைச் சம்பாதித்தே ஆகவேண்டும், நேர்மையற்றமுறையைக் கையாண்டாகிலும் சம்பாதிப்பார்கள். ஒரு மூப்பர் மனச்சாட்சிக்கு விரோதமின்றி நேர்மையாயிருக்க வேண்டும்.

(15) *நல்லோர் மேல் பிரியமுள்ளவர்கள்.* ஒரு மூப்பர் பணத்தில் பிரியப் படக் கூடாது, ஆனால் "நல்லவைகளில் அவர்கள் பிரியப்பட வேண்டும்" (தீத்து 1:8). "நல்லோர்மேல் [நல்ல மனுஷர்கள் மேல்] பிரியம் உள்ளவர்கள்" என்று கூறப்பட்டுள்ள "மனுஷர்" என்பது மொழிபெயர்ப்பாளர்களால் புகுத்தப்பட்ட வார்த்தை. ஆனால் இதின் பொருள் அதைக்காட்டிலும் விரிவான விளக்கமுடையது. ஒரு மூப்பர் நல்லவைகளாய் காணப்படுகிற *எதையும் எல்லாவற்றையும்* பிரியப்பட வேண்டியவர். அவர் நல்லவைகளில் தயவு காட்டி அதற்கு ஆதரவளிக்கிறவர்.

(16) *தன் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவன்.* 1 தீமோத்தேயுவிலும் தீத்துவிலும் பயன்படுத்தப்பட்டுள்ள பலமான வலியுறுத்தல் ஒரு மூப்பர் குடும்பஸ்தனாக இருக்க வேண்டும் என்பதுதான். 1 தீமோத்தேயு 3:4, 5ல், நாம் வாசிக்கிறோம். "தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளை சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப் பண்ணுகிறவனுமாயிருக்க வேண்டும் (ஒருவன்தன் சொந்தக்குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?)." "நடத்துதல்" எனும் வார்த்தை ஒரு தொகுப்பு வார்த்தை அதன் பொருள் மற்றவர்கள்மேல் "அமர்த்தப்படுவது." தேவன் குடும்பத்தின் அங்கத்தினர்களுக்கு மேலாக தகப்பன்மார்களை ஏற்படுத்தி குடும்பத்திற்கு பொறுப்பேற்கச் செய்திருக்கிறார். இது மிகவும் பரவசமிக்க ஒரு பொறுப்பு. மனுஷர்களை நமக்கு மூப்பர்களாக இருக்க எதிர்பார்க்கிறோம், நாம் கேட்க விரும்புகிற ஒரு கேள்வி, "அவர்கள் எப்படி தங்கள் குடும்பத்தின் பொறுப்புகளை நிறைவேற்றுகிறார்கள்?"

(17) *விசுவாசமுள்ள பிள்ளைகள்.* இந்தத் தகுதி இதற்கு முந்திய தகுதியுடன் நெருங்கிய தொடர்பு உடையது. 1 தீமோத்தேயு 3:4ல் நாம் வாசிக்கிறோம், "தன் பிள்ளைகளை சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப் பண்ணுகிறவனுமாயிருக்க வேண்டும்." தீத்து 1:6ல் ஒரு மூப்பர் துன்மார்க்கரென்றும் அடங்காதவர்களென்றும் பேரொடுக்காத "விசுவாசமுள்ள பிள்ளைகளை உடையவனுமாகிய ஒருவன் என்று நமக்குச் சொல்லப்படுகிறது." இது பிள்ளைகள் எத்தனை வயதுள்ளவர்களாயிருக்க வேண்டும் என்று சொல்ல வில்லை, ஆனால் மூப்பர்களுக்கு பிள்ளைகள் இருக்க வேண்டும் என்பதையும் - தனது போதனையாலும் வாழ்வாலும் - போதனையை அவர்களுக்கு முன் வைக்கிறார், அதினால் அவர்கள் விசுவாசிக்கிறார்கள் (ரோமர் 10:17)[19] என்றும் சொல்கிறது.

"மூப்பர்" என்றால் "முதியவர்" என்று பொருள்படுவதால், குழந்தைகளில் சிலராவது தங்கள் பாவங்களுக்காக கணக்கொப்புவிக்கும் பிராயத்தை அடைந்திருக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கலாம். இப்படியிருக்கிறபடியால், "விசுவாசமுள்ள பிள்ளைகள்" என்பது கணக்கொப்புவிக்கும் பிராயமுள்ளவர்கள்

தங்கள் விசுவாசத்தை கீழ்ப்படிதலில் வெளிப்படுத்துகிறவர்கள் (யாக்கோபு 2:17) கிறிஸ்தவர்களாக மாறினவர்கள். இப்பொழுது அவர்கள் கிறிஸ்தவர்கள் வாழவேண்டிய முறைப்படி வாழ்கிறவர்கள். தேவன் அவர்களிடத்தில் என்னத்தை எதிர்பார்க்கிறார் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளுகிறார்கள், மற்றும் அவர்கள் தங்கள் தகப்பனுக்குக் கீழ்ப்படிகிறார்கள். NIV மொழிபெயர்ப்பில் அவர்கள் "வெளிப்படையான குற்றச் சாட்டுக்களுக்கு உட்படாமல் கொடியவர்கள் என்றோ கீழ்ப்படியாதவர்கள் என்றோ பேரெடுக்காதவர்களுமான பிள்ளைகள்" என்றுள்ளது. அவர்கள் தங்கள் தகப்பனுக்கு மூப்பரின் வேலையில் மனவேதனையைக் கொடுக்காமலும் அவர்பெயருக்கு இழுக்கைக் கொண்டுவராதவர்களுமானவர்கள்.

(18) *நூதன சீஷனாயிருக்கக் கூடாது.* ஒரு மூப்பர் நூதன சீஷனாயிருக்கக் கூடாது, ஏனெனில் அவர் இறுமாப்படைந்து பிசாசு அடைந்த ஆக்கினையில் விழாமலிருக்க வேண்டும் (1 தீமோத்தேயு 3:6). ஒரு மனிதன் மூப்பனாவதற்கு முன் எவ்வளவு காலம் கிறிஸ்தவனாக இருக்க வேண்டும் என்று இதிலே சொல்லப்படவில்லை,[20] ஆனால் அவர் புதியதாக மனமாற்றப்பட்டவராக இருக்கக் கூடாது என்பதைச் சொல்லுகிறது. அவருக்கு சில ஆவிக்குரிய வளர்ச்சி தேவை அதினால் அவர் இறுமாப்படைந்து தன்னை மூப்பராக்கியதால் தற்பெருமை கொள்ளமாட்டார்.

(19) *நற்சாட்சி.* 1 தீமோத்தேயு 3-ம் அதிகாரத்தின் பட்டியல் வருகிற வார்த்தைகளுடன் நிறைவுருகிறது. "அவன் நிந்தனையிலும், பிசாசின் கண்ணியிலும் விழாதபடிக்கு, புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனாயுமிருக்க வேண்டும்" (வசனம் 7). ஒரு மூப்பர் சமுதாயத்தில் நல்ல மரியாதை பெற்றவராயிருக்க வேண்டும். அவருக்கு நற்பெயர் இல்லாதிருக்குமேயாகில், கர்த்தருடைய சபை துன்புறும்.

(20) *நீதிமானும், பரிசுத்தவானும்.* தீத்து 1ல் இன்னும் இரண்டு பதங்களை நாம் கவனிக்க வேண்டும்: "நீதி" மற்றும் "பரிசுத்தம்" (வசனம் 8). ஒரு மூப்பர் நீதியுள்ள மனுஷனாக இருப்பதும், தன்னுடைய செயல்கள் எல்லாவற்றிலும் நியாயமாய் நடப்பவருமாயிருக்க வேண்டும். அவர் பக்தியுள்ளவராய் இருக்க வேண்டும், தமது விசுவாசத்தில் உண்மையுள்ளவராய் நடந்து கொள்ள வேண்டும். இவர் ஒரு *நல்ல* மனிதன், உங்களின் வாழ்க்கையுடனும் உங்கள் ஆத்துமாவுடனும் நீங்கள் நம்பிக்கை வைக்க ஏதுவானவர்.

இந்த தகுதியாம்ஸங்களை மறுபடியும் ஒருமுறை பார்க்க நேரம் எடுங்கள். முந்தைய பாடத்தில் பார்த்தது போல, இவையாவும் ஒவ்வொரு கிறிஸ்தவனிடத்திலும் அதிகமாய் எதிர்பார்க்கப்படுகிறது மற்றும் ஒரு கிறிஸ்தவ கணவன் மற்றும் ஒரு தகப்பன் *நடக்கவேண்டிய முறையையும்* விளக்குகிறது. இருந்த போதிலும், அது ஒருமன நெகிழ்வடையச் செய்யும் பட்டியல், ஒரு அறைகூவல் விடுக்கும் பட்டியல். இந்த சரியான எதிர்பார்ப்புகள் உலகிலேயே மிகப்பெரிய பணியான மூப்பராக இருப்பதற்குத் தேவையான பகுதிகளாகும்.

## மிகப்பெரிய பொறுப்புக்கள்

மூப்பர் பணிக்கு எதிர்பார்க்கப்படும் சரியான தகுதி தேவைகள் மட்டுமல்ல, அது தன்னகத்தே கொண்டுள்ள மிகப் பெரிய பொறுப்புக்களும் கூட உலகிலேயே இந்த மூப்பர் பணியை மிகப் பெரிய பணியாக்குகிறது. இந்த இம்மைக்குரிய

உலகில், ஒரு வேலைக்கு அதற்கு அளிக்கப்படும் பொறுப்புக்களின் அளவைக் கொண்டே அதன் முக்கியத்துவம் நிர்ணயிக்கப்படுகிறது. ஒரு கம்பெனியின் தலைவரைக் காட்டிலும் சாக்கடை தோண்டுபவரின் பணியில் அதிக பலத்தை (சக்தியை) பிரயோகிக்க வேண்டியதாயிருக்கிறது, ஆனால் அந்தக் கம்பெனியின் தலைவர் அதிக சம்பளம் அளிக்கப்படுகிறார், ஏனெனில் அவருடைய பதவி அதிகப் பொறுப்புக்களைக் கொண்டுள்ளது. மூப்பர்களைக் காட்டிலும் ஒரு தனிப்பட்ட நபருக்கு பெரிய பொறுப்புக்கள் எதுவுமில்லை. ஒரு மூப்பர் "தேவனுடைய உக்கிராணக்காரன்" என்று பவுல் சொன்னார் (தீத்து 1:7). ஒரு மூப்பர் எதற்கான உக்கிராணத்துவம் உள்ளவராயிருக்கிறார்? மூப்பர்கள் *ஆத்துமாக்களுக்கு* உக்கிராணத்துவமுள்ளவர்கள்: "உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்திரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்கள்" (எபிரெயர் 13:17).[21] மருத்துவர்கள் நம்முடைய சரீரங்களுக்காக பெரிதான அக்கறை காட்டுவதால் அவர்களுக்குள்ள பொறுப்பு மிகப் பலமிக்கது. ஆத்துமாவுக்காக அக்கறை காட்டுவதில் இன்னும் எவ்வளவு அதிகமாக பலமுள்ள பொறுப்பு இருக்க வேண்டும்!

மூப்பர்களின் பொறுப்புக்களை வலியுறுத்த இந்தப் பதவியுடன் சம்பந்தப்பட்ட பதங்களை மறுபடியும் திருப்பிப் பார்ப்பதும் ஒரு வழியாகும்.[22] மூன்று கிரேக்க வார்த்தைகள் மாறிமாறி பயன்படுத்தப்பட்டுள்ளது: *presbuteros, episkopos*, மற்றும் *poimen*. இந்த மூன்று பதங்களும் நடபடிகள் 20ல் காணப்படுகிறது. பவுல் எபேசு சபையின் மூப்பர்களை (*presbuteros* என்பதன் பன்மை) வரவழைத்தார் (வசனம் 17). அவர் இந்த மூப்பர்களிடம் பரிசுத்த ஆவி "அவர்களை கண்காணிகளாக" வைத்த (*episkopos* என்பதன் பன்மை) மந்தையை அவர்கள் மேய்க்க வேண்டும், அதாவது சபையை மேய்க்க வேண்டும், (*poimen* என்பதன் வினைச் சொல்) என்று சொன்னார் (வசனம் 28). தீத்து 1ல் இரண்டு பதங்கள் மாறிமாறி பயன்படுத்தப்படுகிறது. பவுல் தீத்துவிடம் "பட்டணங்கள்தோறும் *மூப்பர்களை* ஏற்படுத்தும்படி" சொன்னார் (வசனம் 5; வலியுறுத்தல் என்னுடையது). பிறகு அந்த அப்போஸ்தலன் "*கண்காணியானவன்* தேவனுடைய உக்கிராணக்காரனுக்கேற்ற விதமாய், குற்றஞ்சாட்டப்படாதவனாயிருக்க வேண்டும்" என்று சொன்னார் (வசனம் 7; வலியுறுத்தல் என்னுடையது). மறுபடியும், 1 பேதுரு 5ல் இரண்டு பதங்கள் மாறி மாறி பயன்படுத்தப்படுகிறது. பேதுரு அறிவுறுத்தி "மூப்பர்கள்" (வசனம் 1) மந்தையில் "மேய்ப்பர்களாயிருக்கும்படி" [*poimen* எனும் கிரேக்க வினைச்சொல்] அவர்களிடம் சொன்னார் (வசனம் 2).

*Presbuteros,* எனும் வார்த்தை "மூப்பர்" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது, இதன் பொருள் "முதிர் வயதுள்ளவர்." இந்த வார்த்தை (ஆங்கிலத்தில்) "பிரிஸ்பைட்டர்" என்று மொழிபெயர்க்கப்படலாம்.[23] இந்த வார்த்தை புதிய ஏற்பாட்டில் பொதுவாக வயதில் முதிர்ச்சியுள்ள யாருக்கும் பயன்படுத்தப்பட்டது,[24] ஆனால் சபையின் தலைமைத்துவப் பொறுப்பேற்கும் நபர்களுக்கு சிறப்பாக பயன்படுத்தப்பட்டது (காண்க நடபடிகள் 2:17; 14:23).[25] சபையின் மூப்பர்களுக்கு இந்தப் பதம் பயன்படுத்தும்போது, அது அனுபவ வளர்ச்சியையும் வயதையும் சுட்டிக்காட்டுகிறது.

*எபிஸ்கோபஸ்* (*episkopos*) என்பது ஒரு கிரேக்க தொகுப்பு வார்த்தை: *epi* ("மேல்") *skopos* ("பார்வை பார்ப்பவர்").[26] நேரடியாக மொழிபெயர்த்தால்

*"கண்காணி." நெடு நாட்களுக்குமுன், episkopos எனும் வார்த்தையை "பிஷப்" என்று மறு உருவம் கொடுத்தனர் (காண்க 1 தீமோத்தேயு 3:1, 2; தீத்து 1:7;* KJV*). மார்க்க உலகில், "பிஷப்" எனும் பதவி "மூப்பரைக்" காட்டிலும் மிக முக்கியமானது என்று கருதுகின்றனர், ஆனால் இரு பதங்களுமே வேதாகமத்தில் மாறி மாறி பயன்படுத்தப்படும் ஒரே பதவிதான். "கண்காணி" எனும் பதத்தை நாம் அநேக வசனப்பகுதிகளில் பிலிப்பியர் 1:1 மற்றும் 20:28 உட்பட, பார்த்தோம்.*[27]

*Poimen என்பது "மேய்ப்பன்" என்பதற்கான கிரேக்க பெயர்ச்சொல். நடபடிகள் 20:28 லும் 1 பேதுரு 5:2 லும் இந்த வார்த்தையின் வினைச்சொல்லைப் பார்த்தோம். எபேசியர் 4ல், பவுல் தற்காலிக மற்றும் நிரந்தப் பணிகளான சபையில் பதவி வகிப்பதை பட்டியிலிடுவதில் பெயர்ச்சொல்லில் இந்த வார்த்தையைப் பார்த்தோம். ஏதோ காரணத்திற்காக "மேய்ப்பன்" என்பதற்கு இலத்தீன பதமாகிய* (pastor) *"பாஸ்டர்" என்று மொழிபெயர்ப்பாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்: "அவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்க தரிசிகளாகவும் சிலரை சுவிசேஷகராகவும், சிலரை* மேய்ப்பராகவும் [*pastors*] *போதகராகவும் ஏற்படுத்தினார்" (வசனம் 11; வலியுறுத்தல் என்னுடையது).* AB*யில் ''பாஸ்டர்கள் (அவரது மந்தையின் மேய்ப்பர்கள்)'' என்று சொல்லப்படுகிறது (மேலும் காண்க முழுமையான யூத வேதாகமம் -* CJB) *மார்க்க உலகில், ''பாஸ்டர்'' எனும் பதத்தை பிரசங்கியார்களுக்குப் பயன்படுத்துகின்றனர், ஆனால் புதிய ஏற்பாட்டில் பிரசங்கியார்கள் இப்படிப்பட்ட பட்டம் கொடுத்து அழைக்கப்படவில்லை. இந்தப் பதம், சபை கண்காணிகளுக்காக வைக்கப்பட்ட வார்த்தை*[28].

*Presbuteros எனும் வார்த்தை ஒரு மூப்பரின் குணாதிசயங்களைக் குறிப்பிடும் சொல். அவர் பூரணப்பட்ட கிறிஸ்தவர். Episkopos அவரது பொறுப்புக்களின் காட்சியை விவரிக்கிறது: ஒரு மூப்பராக, சபையின் பொதுவான பணியை கண்காணிக்கிறார், குறிப்பாக அங்கத்தினர்களின் ஆத்துமாக்களை பாதுகாக்கிறார். மூன்றாவது பதமான, poimen, மூப்பரின் "பணி விபரத்தைக் கொடுக்கிறது": மூப்பர்கள் தேவனுடைய மந்தையை பாதுகாத்து மேய்க்க வேண்டியவர்கள்!*

- *அவர்கள் மந்தையை நடத்திச் செல்ல வேண்டியவர்கள் (காண்க 1 பேதுரு 5:1-3). புதிய ஏற்பாட்டின் துவக்ககாலத்தில், ஒரு மேய்ப்பன் ஆடுகளை பின்னாக நின்று துரத்திக் கொண்டு போகமாட்டான்; மாறாக முன் நின்று வழி நடத்திக் கொண்டு போவான்.*
- *அவர்கள் ஆடுகளை போஷிக்க வேண்டியவர்கள். ஆடுகள் ஆரோக்கியமான போஷாக்காகிய தேவனுடைய வசனத்தை பெறுகின்றனவா என்று பார்த்துக் கொள்வது மூப்பர்களின் பொறுப்பு.*
- *அவர்கள் ஆடுகளை பாதுகாக்க வேண்டியவர்கள் (காண்க நடபடிகள் 20:28-31). ''கொடிதான ஓநாய்கள்'' இன்றும் சுற்றித்திரிகின்றன. மேய்ப்பர்கள் விழிப்புடன் இராவிட்டால் அவைகள் மந்தையை அழித்து விடும்.*

*வேறு அநேக கிரேக்க வார்த்தைகளும் கூட மூப்பர்களின் பணி எவ்வளவு பரபரப்புடையது என்று குறிப்பிடுகின்றன. மூப்பர்கள் ''தேவனுடைய சபையை விசாரித்துக் கொள்ள வேண்டியவர்கள்'' (1 தீமோத்தேயு 3:5).*

''விசாரிக்க வேண்டும்'' என்பது *epimeleomai* என்பதிலிருந்து வந்தது, அது ''அக்கறை எடுத்துக்கொள்வதை அடையாளப்படுத்துகிறது; இது முன்யோசனை மற்றும் முன் ஏற்பாடுகளை உட்படுத்தியது.''[29] மூப்பர்கள் ''நடத்த'' (ஆளுகை செய்வதும்) (1 தீமோத்தேயு 5:17) ''கர்த்தருக்குள் விசாரணை செய்கிறவர்களாயுமிருக்கிறார்கள்'' (1 தெசலோனிக்கேயர் 5:12).[30] ''நடத்துதல்'' மற்றும் ''விசாரித்தல்'' ஆகிய வார்த்தைகள் கிரேக்க மொழியில் *proistemi* இதன் நேரடிப் பொருள் '' 'முன் நிற்குதல்,' 'ஆதலால் நடத்துதல், கவனமாகக் கேட்டல்' (ஆகியவை கவனமுடன் விழித்திருத்தலைக் குறிக்கிறது).''[31] இறுதியாக எபிரேயர் 13ல், மூப்பர்களைப் பற்றி ''உங்களை நடத்தினவர்கள்'' என்று சொல்லப்படுகின்றன (வசனம் 7) மற்றும் தலைமை தாங்கி ''நடத்துபவர்களை'' இது குறிக்கிறது (வசனங்கள் 17, 24). இந்த அனைத்து விளக்கங்களும் *hegeomai* என்பதிலிருந்து வந்தது, அதன் பொருள் ''நடத்தும்படி''[32] என்பதாகும்.

இப்போது, மூப்பர்களின் பொறுப்புக்கள் எல்லாம் கடினமானவை என்று தெளிவாகியிருக்கும். அவர்களின் நீதியுள்ள கடினபணியைக் குறித்த எந்த ஒரு சுருக்கமான பட்டியலும் உதவாது, ஆனால் அவர்களின் சில பொறுப்புக்களையாகிலும் சாராம்சமாக இங்கே கொடுக்கட்டும்.[33] அவர்கள் ...

- முழுச்சபையையும் (உள்ளூர்சபையை) கண்காணிப்புச் செய்ய வேண்டும், சபையின் முன் நின்று வழிநடத்த வேண்டும். அவர்களாகவே எல்லா வேலைகளையும் செய்ய வேண்டும். என்பது இதன் பொருள் அல்ல (அப்படிச் செய்யவும் கூடாது), ஆனால் அந்த வேலைகள் செய்து முடிக்கப்படுவதை பொருப்புடன் கவனிக்க வேண்டும்.
- அங்கத்தினர்களில் ஒவ்வொருவருடைய வேலைகளிலும் கவனம் செலுத்தவேண்டும். முழு உள்ளூர் சபைகளின் காரியங்களில் கவனம் செலுத்திக் கொண்டு தனிப்பட்ட அங்கத்தினரின் தேவையை மூப்பர்கள் கண்டு கொள்ளாமல் விட்டு விடக் கூடாது. அவர்களின் ''பணி விவரம்'' மேய்ப்பர்களாயிருப்பது தான் என்பதை நினைவில் வையுங்கள். வலியுள்ளவர்களையும், பலவீனமானவர்களையும், மனமுடைந்தவர்களையும், சிதறுண்டவர்களையும், மனமுடைந்தவர்களையும், சிதறுண்டவர்களுமாகிய அனைவரையும் கவனம் செலுத்தி - ஒரு மேய்ப்பன் தன் ஆடுகளுக்காக கவனம் செலுத்துவதுபோல பராமரிக்க வேண்டும். ஏதோ ஒரு நாளில் அந்த உக்கிராணத்துவத்திற்கு அவர்கள் கணக்கொப்புவிக்க வேண்டும் (எபிரேயர் 13:17).
- அங்கத்தினர்களை கள்ள உபதேசத்திலிருந்தும். உலகப்பிரகாரமான காரியத்திலிருந்தும், மோசமான முன் உதாரணத்திலிருந்தும் பாதுகாக்க வேண்டும்.
- வாழ்விலும், வேலையிலும், போதனையிலும் முன்மாதிரியாயிருக்க வேண்டும் (காண்க 1 பேதுரு 5:3). மூப்பர்களின் முதன்மைப் பொறுப்பு ''[தங்களைக் குறித்தும்] எச்சரிக்கையாயிருக்க வேண்டும்'' *பிறகு* ''முழுமந்தையைக் குறித்தும் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்'' (நடபடிகள் 20:28). மந்தையை *வழி நடத்த*, அவர்கள் கிறிஸ்தவ ஜீவியம்

என்பதெல்லாம் இதுதான் என்று ஆடுகளுக்கு முன் *வழிகாட்டுதல்* வேண்டும்.

மறுபடியும், நான் சொல்லிக் கொள்கிறேன், ஒரு மூப்பரின் பணிதான் உலகிலேயே மிகப்பெரிய பணி, ஏனெனில் அதற்கு மிகப்பெரிய பொறுப்புக்கள் அவருக்கு இருக்கின்றன.

## மிக அருமையான பிரதிபலன்கள்

இறுதியாக, மூப்பர் பணி உலகிலேலேயே மிகப் பெரிய பணி ஏனெனில் அதற்கு அருமையான பிரதிபலன்கள் உண்டு.[34] உண்மையில், இயேசுவுக்கு ஊழியஞ் செய்வதே அதன் சுய பிரதிபலனாகிறது. அநேகர் மூப்பர்பணியை ஏற்றுக் கொள்வதற்குக் காரணம் அவர்கள் கர்த்தருக்கும் மற்றவர்களுக்கும் ஊழியம் செய்ய விரும்புவதால்தான். இது அவர்களுடைய வாழ்க்கையில் கூடுதல் அர்த்தத்தையும் நோக்கத்தையும் கொடுக்கிறது.

இரண்டாவது பிரதிபலன் நம்மிடத்திலிருந்து அங்கத்தினர்களிடத்திலிருந்து கனமும் மதிப்பும் அவர்களுக்கு உண்டாகிறது. பவுல் தீமோத்தேயுவுக்கு சொன்னது, "நன்றாய் விசாரணை செய்கிற மூப்பர்களை ... இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ண வேண்டும்'' (1 தீமோத்தேயு 5:17). ''இரண்டாவது கனம்'' அவர்கள் ''திருவசனத்திலும், உபதேசத்திலும் பிரயாசப்பட்டால்'' அவர்களுக்கான பொருள் உதவியும் செய்ய வேண்டும் (வசனம் 17ஆ; காண்க வசனம் 18). "முதல் கனம்" சபையின் அங்கத்தினர்கள் அவர்களுக்குக் கொடுக்கிற கனமும் மரியாதையும். நான் இதைச் சுருங்கச் சொல்லட்டும், சில வழிகளில் நமது மூப்பர்களுக்கு நாம் முறையான மரியாதையைக் காட்ட வேண்டும்:

- *அவர்களைப் பாராட்டுங்கள்.* ''அன்றியும் சகோதரரே, உங்களுக்குள்ளே பிரயாசப்பட்டு, கர்த்தருக்குள் உங்களை விசாரணை செய்கிறவர்களாயிருந்து, உங்களுக்குள்ளே புத்திசொல்லுகிறவர்களை நீங்கள் *மதித்து*'' (1 தெசலோனிக்கேயர் 5:12; வலியுறுத்தல் என்னுடையது). மூப்பர்களைப் பாராட்டுங்கள், உங்கள் பாராட்டுக்களை *வெளிப்படுத்துங்கள்.*
- *மிகவும் அன்பாய் எண்ணிக் கொள்ளுங்கள்.* ''அவர்களுடைய கிரியையினிமித்தம் அவர்களை *மிகவும் அன்பாய் எண்ணிக் கொள்ளுங்கள்''* (வசனம் 13; வலியுறுத்தல் என்னுடையது). அவர்கள் யார் என்பதற்கேற்ற எண்ணத்தை உங்கள் கிரியைகளின் நிமித்தமாகிலும் அவர்களை உயர்வாய் எண்ணிக் கொள்ளுங்கள்.
- *கடிந்து கொள்ளாமல், நடத்துங்கள்.* முதல் தீமோத்தேயு 5:1ல் பொதுவாக முதிர் வயதுடையவர்களைப் பற்றிப் பேசுகிறது, ஆனால் இந்த அறிவுரை நிச்சயமாக மூப்பர்களிடம் நாம் நடந்து கொள்ள வேண்டிய முறையையும் உள்ளடக்கியுள்ளது: "முதிர் வயதுள்ளவனைக் கடிந்து கொள்ளாமல், அவனைத் தகப்பனைப் போல் ... பாவியுங்கள்."
- *சிறந்ததையே நம்புங்கள்.* அன்பு மற்றவர்களின் நல்லதையே நம்பும், இது மூப்பர்களையும் உட்படுத்தியே சொல்லுகிறது. தீமோத்தேயுவினிடத்தில் பவுல் சொன்னார், "மூப்பனானவனுக்கு விரோதமாய் ஒருவன் சொல்லும்

பிராதை இரண்டு மூன்று சாட்சிகள் இல்லாமல் நீ ஏற்றுக் கொள்ளக் கூடாது" (1 தீமோத்தேயு 5:19). ஒரு மூப்பரைப் பற்றிச் சொல்லப்படுகிற புறங்கூறுதலை செவி சாய்க்காமல் புறந்தள்ள வேண்டும்.

- *நினைத்துக் கொள்ளுங்கள்.* "தேவ வசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நினைத்துக் கொள்ளுங்கள்" (எபிரேயர் 13:7அ). எழுத்தாளர் தமது வாசகர்களிடம் இந்த மனுஷர்கள் அவர்களுக்கு என்ன செய்தார்கள் என்று நினைத்துப் பார்க்கும்படி கட்டளையிட்டார்,[35] ஆனால் நாமும் கூட நமது தலைவர்களை நமது ஜெபங்களில் "நினைவுபடுத்தி" உற்சாகமளிக்கும் வார்த்தைகளை அவர்களிடம் பேசி சோதிக்கப்படும்பொழுது அவர்களுடைய போதனைகளை "நினைத்துக் கொள்வது" செய்யக் கூடாத காரியமல்ல.
- *அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்.* "அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்" (எபிரேயர் 13:7ஆ).
- *அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்.* "உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்திரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி அவர்களுக்குக் *கீழ்ப்படிந்து அடங்குங்கள்.* அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்க மாட்டாதே" (எபிரேயர் 13:17; வலியுறுத்தல் என்னுடையது). நாம் மூப்பர்களுடன் ஒத்துழைப்பைக் கொடுத்து, வாழ வேண்டிய முறைப்படி வாழ்வோமானால், அவர்களின் உழைப்பு மகிழ்ச்சியுள்ளதாயிருக்கும். நாம் அப்படிச் செய்யத் தவறும் போது, அது நம்முடைய ஆத்துமாக்களுக்கு மட்டும் ஆபத்தானதல்ல, அது நமது மூப்பர்களின் இருதயங்களையும் உடைத்துப்போட ஏதுவாக்கும்.

வருஷங்களினூடே, தேவன் சொல்லியிருக்கிறபடி மூப்பர்களுக்கு செலுத்த வேண்டிய கனத்தைச் செலுத்தாமல் சிலர் தவறு செய்துள்ளனர். இந்த உள்ளூர் சபையில் அது ஒருபோதும் உண்மையாகி விடக் கூடாது என்று நான் ஜெபிக்கிறேன். கர்த்தர் தாமே நமது மூப்பர்களுக்கு நாம் காட்ட வேண்டிய அன்பையும் மரியாதையையும் செலுத்தும்படி உதவி செய்வாராக.

உண்மையில், மூப்பர்களுக்குரிய மிகப்பெரிய பிரதிபலன் இவ்வாழ்க்கையில் வராது, ஆனால் வரப்போகும் வாழ்க்கையில் கிடைக்கும். பேதுரு மூப்பர்களுக்கு எழுதி அவர்களுக்கு கட்டளை கொடுத்த போது அவர்கள் "தேவனுடைய மந்தையை மேய்த்து" (1 பேதுரு 5:1-3), என்று சொன்னவர், "பிரதான மேய்ப்பன் வரும்பொழுது, மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்" என்றார் (வசனம் 4). இதைக் காட்டிலும் மிகப்பெரிய பிரதிபலன் வேறெதுவும் இருக்காது!

## முடிவுரை

மூப்பருடைய பணி உலகிலேயே மிகப் பெரிய பணி ஏனெனில் அதற்கு மிகவும் சரியான தகுதிகோரிக்கைகள் தேவைப்படுகிறது, மிகப்பெரிய பொறுப்புகள் கொடுக்கப்பட்டுள்ளது. மிக அருமையான பிரதிபலன்கள்

*வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பாடத்தின் நோக்கம் யாரையும் சோர்வடையச் செய்வதற்காக அல்ல, ஆனால் மூப்பராவதிலுள்ள அறைகூவலை எடுத்துக் காட்டியுள்ளது என்று நான் நம்புகிறேன். மேலும் நம்மில் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டுள்ள பணியை நெகிழ்ச்சியுடன் ஈர்த்துக் காட்டும் என்று நம்புகிறேன்: அது இந்த உள்ளூர் சபைக்கு மூப்பர்களை தெரிவுசெய்து ஏற்படுத்துவதுதான். தேவன் தாமே நம்மெல்லாரோடும் இருப்பாராக.*

## குறிப்புகள்

*நான் இந்தப் பாடங்களை பின்பக்கத்திரையில் எனது தலைக்குமேல் படமாக காட்டி இப்பாடத்திற்கு ஒத்த கருத்துக்களை முன் வைத்தேன். இந்த வரைபடங்கள் ஒரு செயல் திறனை உண்டாக்கும் மின்சக்திக் கருவிகள் மூலம் இருக்கலாம், அல்லது ஒரு பெரிய காகிதத்தில் போடப்பட்டோ அல்லது அட்டையின் மீதோ வரையப்பட்டு சமர்ப்பிக்கலாம். இந்தப் பாடங்கள் ஒரு கற்றலுக்கான புறக்குறிப்பாக ஆயத்தப்படுத்தி கூடிவருகிற யாவருக்கும் கொடுக்கலாம்.*

*மூப்பர்களின் தகுதியாம்சங்களை சுருக்கமாக விவாதிக்கப்பட்ட இரண்டாவது பாடம் இது. இந்தக் தகுதியாம்சங்களை அணுகுவதற்கான மற்றோருமுறை அவைகளை தலைப்பு வாரியாக கருத்துக்களை வரிசைப்படுத்தி கற்கலாம் (காண்க "மூப்பர் தேர்வு செய்ய வழிகாட்டி" இந்த புத்தகத்தின் பின்பகுதியில் உள்ளது). மேலும் ஒரு அணுகுமுறை வித்தியாசப்பட்ட மொழிபெயர்ப்புக்கள் சொல்லும் பதங்களின் ஒப்பீடு மூலம் கற்றல் (1 தீமோத்தேயு 3:1-7; மற்றும் தீத்து 1:5-9).*

---

## மூப்பர்களின் தகுதியாம்சங்கள் குறித்த துணைக் குறிப்புக்கள்

*மூப்பர்களின் தகுதியாம்சங்களைக் குறித்து கடந்த இரண்டு பாடங்களிலும் நான் கொடுத்துள்ள விளக்கங்கள் இந்தப் பாடத்திற்கான இறுதிக் கருத்துக்கள் அல்ல. பிரசங்கத்தைக் கேட்டவர்கள் வினயமாக இந்த தேவன் - கொடுத்த தகுதியாம்சங்களை சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்பது என்னுடைய நோக்கம்.*

*வருடங்களினூடே, கவனிக்கத்தக்க முரண்பாடுகள் சில தகுதியாம்சங்களின் சரியான அர்த்தம் கொடுப்பதில் ஏற்பட்டது. சிலர் பதங்களின் மொழியாக்கம் தங்களின் விளக்கப்படியே சரியான மொழிபெயர்ப்பாக இருக்கிறது என்று குறிப்பால் சுட்டிக் காட்டியதும் உண்டு. தவறுதலாக புரிந்துகொள்ளுகிற புரிந்து கொள்ளும் ஆபத்துக்குட்படாதபடி, இங்கே ஒரு கருத்தை நான் சேர்க்கட்டும்: ஒரு குறிப்பிட்ட உள்ளூர் சபையில் மனுஷர்களை நியமனம் செய்து மூப்பர்களாக பணியாற்றச் செய்ய முன்வரும்போது, அந்த உள்ளூர் சபையின் அங்கத்தினர்கள் குறிப்பிடப்பட்ட தகுதியாம்சங்களின் பொருளை தாங்கள் வாசிக்கும் வசனப் பகுதியிலிருந்து புரிந்து கொள்ள வேண்டியவர்கள்.*

*நான் ஒரு உதாரணம் கொடுக்கட்டும். நடபடிகள் 6ல், "பன்னிருவரும் சீஷர் கூட்டத்தை வரவழைத்து: நாங்கள் தேவ வசனத்தைப் போதியாமல்,*

பந்தி விசாரணை செய்வது தகுதியல்ல. ஆதலால் சகோதரரே; பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம்" (வசனங்கள் 2, 3), வசனம் 5 சொல்லுகிறது, "இந்த யோசனை சபையாரெல்லாருக்கும் பிரியமாயிருந்தது; அப்பொழுது ... தெரிந்து கொண்டு" அப்போஸ்தலர்கள் மூன்று தகுதியாம்சங்களைக் குறிப்பிட்டார்கள் மற்றும் சபையார் தெரிந்து கொள்தலைச் செய்தனர். "பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்தது, நற்சாட்சி பெற்றிருக்கிற" என்பது எதை *அர்த்தப்படுத்துகிறது*? அவைகளின் பொருள் என்ன என்று எனக்குத் தெரியும் என்று நம்புகிறேன், ஆனால் எருசலேமில் இருந்த சபையாருக்கு என்ன பொருளைக் கொடுக்கிறது என்பதுதான் அதிக முக்கியமானது. சொல்லப்பட்டுள்ள பதங்கள் அனைத்தையும் அவர்கள் விவாதித்தார்களா? எனக்குத் தெரியாது. எனக்குத் தெரிந்ததெல்லாம், உள்ளூர் சபை அங்கத்தினர்கள் எப்படியோ பொதுவான இசைவுடன், அவர்களுடைய மனதில் நம்பிக்கை கொண்ட ஏழு பேரை தகுதியுடையவர்களென தெரிவு செய்தனர்.

மூப்பர்களை தெரிவு செய்கிற விஷயத்தில் ஒரு பிரசங்கியாராக நான் எனது பணியை புரிந்து கொண்டிருப்பேனேயாகில், ஏவப்பட்ட தகுதியாம்சங்களை உள்ளூர் சபையார்களுக்கு அறிவிப்பதும், அந்த தகுதியாம்சங்களைக் குறித்து சிந்திக்கவும் ஜெபிக்கவும் அவர்களை ஊக்கப்படுத்தி, தகுதியுள்ள ஆண்களை தெரிந்தெடுக்கும்படி அறைகூவல் விடுவதும் எனது கடமை. அங்கத்தினர்கள் பொதுவாக சில மனிதர் "ஆரோக்கியமான உபதேசம் செய்கிறவனாகவும் முரண்பாடான உபதேசம் பண்ணுகிறவர்களை கடிந்து கொள்ளுகிற நபரைத் தகுதியுள்ளவராக நினைத்தால், ஆனால் நான் அதை ஒப்புக் கொள்ளவில்லை" என்றால் என்ன? தேவன் யாருக்கு இந்தக் தகுதியோ அந்தத் தகுதியோ இருக்கிறது என்று தீர்மானிக்கும்படி பிரசங்கியாரிடத்தில் சொல்லவில்லை என்பதை நான் மனதில் வைக்க வேண்டும்; அந்தப் பொறுப்பை முழு சபையாருக்கும் தேவன் கொடுத்திருக்கிறார். சில தகுதியாம்சங்கள் *முழுமையானவை* ("ஒரே மனைவியையுடைய புருஷன்" போன்றதெல்லாம்), ஆனால் அநேகம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டிய தகுதியாம்சங்கள் ("உபசரிக்கிறவனாயிருத்தல்" போன்றவை) என்பதை நினைவில் வையுங்கள். ஒரு மனிதன் தகுதிபெற்றவனாக முழுசபையும் நினைக்குமாகில், பிறகு - முழுமையான தகுதியை அவன் பெறாமலிருந்தாலோ (அதாவது விசுவாசமுள்ள பிள்ளைகள் இல்லாமலும் அல்லது திருமணமாகாதவராகவும் அல்லது புதிதாய் மனமாற்றப்பட்ட நூதன சீஷனாகவோ இருந்தால்) - நான் மிகவும் அவர்களுடைய முடிவை ஊக்குவிப்பதில் தயக்கம் காட்டுவேன். மூப்பர்களைத் தேர்ந்தெடுக்கிற காரியத்தில் உள்ளூர் சபைகள் எப்பொழுதாவது தவறு செய்கின்றவா! ஆம், அவர்களும் மனுஷர்கள்தானே, மனுஷர்கள் தவறுசெய்யத்தான் செய்வார்கள். இருந்தபோதிலும், உள்ளூர் சபைதான் அவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தமானால் நாம் அதை மதிக்க வேண்டும்.

**கேள்விகளுக்கு பதில் அளித்தல்**

இவற்றைச் சொன்ன பிறகு, சில அங்கத்தினர்கள் *பிரசங்கியாராகிய*

*நீங்கள்* குறிப்பிட்ட தகுதியாம்சத்தின் அர்த்தம் என்ன என்று, என்ன நினைக்கிறீர்கள் என்று அறிந்து கொள்ள விரும்பலாம். அப்படி நடக்கும் போது, தகுதியாம்சத்துடன் ஒரு குறிப்பிட்ட கருத்து சேர்க்கப்பட வேண்டும் என்று நினைத்தால், உங்கள் கருத்தை பகிர்ந்து கொள்ள உங்களுக்கு உரிமையுண்டு. எப்படியிருப்பினும், அப்படி நீங்கள் செய்யும்போது, நான் மூன்று ஆலோசனைகளை வைக்கிறேன். முதலாவதாக, நீங்கள் உங்கள் *கருத்தைத்தான்* பகிர்ந்து கொள்கிறீர்கள் என்பதை தெளிவுபடுத்துங்கள். மற்றவர்கள் உங்களுடைய வார்த்தையை தங்கள் கேள்விக்குப் பதிலாக எடுத்துக் கொள்ளாமல், அவர்களாகவே இதைக்குறித்து கவனமாகப் படிக்க வேண்டும். இரண்டாவதாக, கிளப்பப்படாத பிரச்சனைகளை கையாளாதீர்கள். மற்ற இடங்களில் எழுப்பப்படும் கேள்விகளையும், பிரச்சனைகளையும் நீங்கள் அறிந்திருப்பீர்கள், ஆனால் அது உங்கள் உள்ளூர் சபையை பாதிக்க வேண்டிய அவசியமில்லை. மூன்றாவதாக, நீங்கள் உங்கள் கருத்தை சொல்லும்போது இயன்ற வரை யாருக்கும் பாதிப்பில்லாத வகையில் திறமையாகப் பேசுங்கள், ஏற்றுக் கொள்ளாதவருக்கு மதிப்பைக் கொடுங்கள்.

அமெரிக்க ஐக்கியநாடுகளில் நடந்த ஒரு சம்பவம் இங்கு உதாரணமாக கொடுக்கப்படுவது உதவியாயிருக்கலாம். அமெரிக்க ஐக்கிய நாடுகளில், ஒரு கேள்வி அடிக்கடி கேட்கப்படுவதுண்டு, அது ஒரு மூப்பரின் விசுவாசமுள்ள பிள்ளைகள் ஒருவராயிருக்கலாமா பலராக இருக்கலாமா என்பது தான். இந்த கேள்வி கடந்த காலங்களில் மூப்பர்களை ஏற்படுத்தும் போதே கேட்கப்பட்டதாக தெரிந்திருந்தால் மூப்பர்களைத் தேர்ந்தெடுத்த அந்த நேரத்தில், இன்னும் சில குறிப்புகளை தகுதியாம்சங்களோடு சேர்த்திருப்பேன். அதில் அடங்கியுள்ள அநேக உண்மைகளை (குறிப்பிட்ட உள்ளூர் சபையில் அந்தக் கேள்வி எவ்வளவு அறிவார்த்தமானது என்பதையும் சேர்த்து), பதிலளித்திருக்கலாம், ஆனாலும் நான் அணுகக்கூடிய வேண்டிய ஒரு வழியை கீழே கொடுக்கப்பட்டிருப்பது காட்டுகிறது.

> ஜனங்கள் சிலவேளைகளில் ஒரு மூப்பர் பல விசுவாசமுள்ள பிள்ளைகளையுடைவராகத்தான் இருக்க வேண்டுமா, வேண்டியதில்லையா என்று கேட்கின்றனர். "பிள்ளைகள்" என்று சொன்னால் உண்மையான "பிள்ளைகளைக்" குறிக்கிறதா, இதன் மூல வசனப்பகுதி சொல்லுகிறது என்ன என்று அறிய விரும்புகின்றனர். கிரேக்க மொழியில் பிள்ளைகள் என்பது பன்மையில் சொல்லுகிறது, ஆங்கிலத்தில் சொல்லப்படுவது போன்றேதான். எப்படியிருப்பினும், ஒரே ஒரு விசுவாசமுள்ள பிள்ளையை உடையவரும் இந்தத் தகுதியைப் பெறுகிறார் என்பது என்னுடைய கருத்து. நீங்கள் நான் சொல்லுவதை ஏற்றுக் கொள்ள இயலாவிடில், பரவாயில்லை, ஆனாலும் நான் எப்படி இப்படியொரு முடிவுக்கு வந்தேன் என்பதையும் சொல்லுகிறேன்.
>
> இப்பொழுது எனக்குள்ள உறுதியான நம்பிக்கை முன்பெல்லாம் இருந்ததில்லை, ஆகிலும் வருடங்களினூடே இந்த விஷயத்தை தொடர்ந்து படித்தேன். நான் கேட்டுக் கொண்ட கேள்விகளில் ஒன்று "முதல் நூற்றாண்டில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு இந்த தகுதியாம்சம் என்ன அர்த்தத்தைக் கொடுத்திருக்கக் கூடும்?" "பிள்ளைகளையுடையவர்கள்"

*கைகளை உயர்த்துங்கள் என்று நான் கேட்டிருக்கக் கூடுமானால், ஒரு குழந்தையையுடையவர்களில் சிலராகிலும் கைகளை உயர்த்தியிருப்பார்கள் என்று நம்புகிறேன். யாராவது ஒருவர் பதில் அளித்து, "பிள்ளைகளைக்" கொண்டிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக் கொடுக்கப்படும்போது, இன்று நாங்கள் இப்படித்தான் நினைக்கிறோம் என்று சொல்லியிருப்பார், "ஆனால் வேதாகம காலங்களில் இந்தக் காரியம் எப்படி நோக்கிப் பார்க்கப்பட்டது?" புதிய ஏற்பாட்டில், நிபந்தனைப்பட்டியலில் "பிள்ளைகள்" என்று சொல்லப்பட்டிருப்பது, பொதுவாகவே "ஒன்று அல்லது மேற்பட்ட பிள்ளைகளைக்குறிக்கலாம்." "என் நாமத்தி னிமித்தம் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது,* பிள்ளைகளையாவது, *நிலங்களையாவது, விட்டவன் எவனோ, அவன் நூறந்தனையாய் அடைந்து, நித்திய ஜீவனையும், சுதந்தரித்துக் கொள்வான்" (மத்தேயு 19:29; வலியுத்தல் என்னுடையது), என்று இயேசு சொன்னதை உதாரணமாகக் கொள்வோம் (வலியுறுத்தல் என்னுடையது). 1 தீமோத்தேயு (மூப்பர்கள் "பிள்ளைகளை"யுடையவர்களாயிருக்க வேண்டும் என்று குறிப்பிடுகிற வசனப் பகுதி [3:4]) ஒரு விதவையானவளைக் குறித்து பவுல் நிபந்தனைகளைக் குறிப்பிடுகிற போது, உள்ளூர் சபையால் அவள் உதவி பெறவேண்டுமானால், இந்த வார்த்தைகளையும் அவர் சேர்த்துக் குறிப்பிடுகிறார், "அவள்* பிள்ளைகளை *வளர்த்திருக்க வேண்டும்" (5:10; வலியுறுத்தல் என்னுடையது). அதிகமானோர் மத்தேயு 19 லும் 1 தீமோத்தேயு 5 லும் குறிப்பிடப்படுகிற பிள்ளைகள் எனும் பதம் "ஒன்று அல்லது மேற்பட்ட பிள்ளைகளைக்" குறிப்பதாகவே ஏற்றுக் கொள்கின்றனர்.*

*நான் இதை ஆலோசனையாகச் சொல்லட்டும், முதல் நூற்றாண்டில் கிறிஸ்தவர்கள் "ஒரு மூப்பர்" தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், "தன் பிள்ளைகளை சகல நல்லொழுக்கமுள்ளவர்களாய்க் கீழ்ப்படியப் பண்ணுகிறவனுமாயிருக்க வேண்டும்" (1 தீமோத்தேயு 3:4) என்று கேட்கும்போது, அவர்களுடைய அக்கறையெல்லாம் ஒரு மனுஷனுக்கு எத்தனை பிள்ளைகள் இருக்கிறார்கள் என்பதில் அல்ல, ஆனால் (ஒன்றோ பலரோ). அவர்கள் "சகல நல்லொழுக்கமுள்ளவர்களாய் கீழ்ப்படிந்திருந்தார்களா" என்பதுதான். மறுபடியும், நீங்கள் என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாவிட்டால், பரவாயில்லை, நான் சொன்னதை யோசித்துப்பாருங்கள் என்று சொல்லுகிறேன்.*

*சூழ்நிலைக் கேற்ப, இந்தக் கேள்வி மேலும் எழுப்பப்படலாம், ஆகிலும் நான் எந்த ஒரு கோட்பாட்டையும் பற்றிக் கொண்டோ, ஐக்கியமற்ற முறையிலே சொல்ல முயற்சிக்காமல் குறிப்பிட்ட இந்த ஆலோசனைகள் போதுமானது. மூப்பர்களுக்கு தேவன் கொடுத்த தகுதியாம்சங்களைக் குறித்த கேள்விகளுக்கு தேவன் தாமே பதிலளிக்கும் ஞானத்தை உங்களுக்குக் கொடுப்பாராக (காண்க யாக்கோபு 1:5).*

## சமர்ப்பிக்கப்படும் படிவங்கள்

*உள்ளூர் சபை தகுதியான தலைவர்களுக்கான பெயர்களை எழுதிக் கொடுக்கும்படியான படிவங்களை பல வடிவங்களில் கொடுக்கலாம். பெயர்களை சமர்ப்பிப்பது வாய்மொழியாக, தாங்கள் தகுதியுடையவர்களாய் கருதுகின்ற நபர் (நபர்களின்) பெயர்களை சரியாகக் குறிப்பிட்டுச் சொல்லலாம். பெயர்களை ஒரு வெள்ளைத்தாளில் எழுதி ஏற்கனவே உள்ள மூப்பர்களிடமோ அல்லது அதற்கென செயல்படும் கமிட்டி உறுப்பினர்களிடமோ கொடுக்கலாம். அநேக உள்ளூர் சபைகளில் எளிமையான ஒரு படிவம் கொடுத்து அதை பூர்த்தி செய்து கையெழுத்திட்டு கொடுக்கச் சொல்லுகின்றனர். இப்படிப்பட்ட படிவங்களைக் கொடுப்பதற்கான ஒரு காரணம், இந்தப் பணிக்குத் தேவையான தகுதியாம்சங்களை மறுவலியுறுத்தலின் நிமித்தம் வசனரீதியாகக் காட்டப்படுகிறது. பின்வரும் பக்கங்களில் இரண்டு விதமான சாத்தியமுள்ள கருத்துக்களுடன் உள்ள படிவங்கள் கொடுக்கப்பட்டுள்ளன, எதை வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம். தகுதியுள்ள உதவிக்காரர்களை நியமிப்பதற்கு இந்த 2 படிவங்களில் ஒன்றை பயன்படுத்திக் கொள்ளலாம்.*

---

*குறிப்புகள்*

*[1]வரைபடம் 1 பிரசங்கத்தின் துவக்கம். [2]வரைபடம் 2 காட்டுங்கள். [3]இவைகள் சிறிய பெட்டிகளாக வரையப்பட்டுள்ள படங்களால் வரைபடம் 2ன் உள் மூலையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. [4]வரைபடத்தின் நடுவில் உள்ள பெரிய பெட்டியை குறிப்பிடவும். [5]வரைபடத்தின் பெரிய பெட்டியிலுள்ள வார்த்தைகளை குறிப்பிடவும். [6]வரைபடம் 3 காட்டவும் (இது வரைபடம் 1 திருப்புதல்). [7]விநியோகிக்கப்பட்ட பக்கங்களைப் படிக்க, நிறுத்தவும். முறையை விளக்கப்படுத்துங்கள், எல்லாரையும் பங்குபெறச் செய்யுங்கள். [8]வரைபடம் 4 காட்டுங்கள். [9]ஒருவர் தேர்ந்தெடுக்கப்படவும் வேண்டும். [10]வரைபடம் 5 காட்டவும். தகுதியாம்சம் தெளிவாக 1 தீமோத்தேயு மற்றும் தீத்து புத்தகங்களில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அடிக்கோடிடப்பட்ட வார்த்தைகள் 1 தீமோத்தேயுவிலும் வலது புறம் சாய்மானமாய் எழுதப்பட்ட வார்த்தைகள் தீத்துவிலும் மட்டும் காணப்படுகின்றன. இந்த வரைபடத்தை நீங்கள் தயாரிப்பீர்களானால், இரண்டு வித்தியாசப்பட்ட வண்ணங்களில் தயாரிக்கலாம். இதிலுள்ள வார்த்தைகள் புதிய அமெரிக்கன் ஸ்டாண்டர்ட் பைபிளிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டவை, வேறு மொழிபெயர்ப்புக்களை நீங்கள் பயன்படுத்தினால், வார்த்தைகள் இசைவாக்கப்பட வேண்டும்.*

*[11]இந்த பட்டியலில் வருகிற வார்த்தைகளின் விமர்சனங்கள் 1 தீமோத்தேயு 3:1-7ல் வருகிற வியாக்கியானங்களுடன் ஒப்பிடக்கூடும், "உங்களை நீங்களே நீட்டுங்கள்" என்ற பாடத்தில் இவைகள் வருகின்றன. [12]"ஒரே மனைவியையுடைய புருஷன்" எனும் பதம் பெண்களையும் விலக்குகிறது. [13]The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, Ltd., 1971), 277. *[14]"நன்மைகளுக்கு தன்னடக்கம் உள்ளவராயிருக்கவும் அறிந்திருத்தல்" என்பது நல்ல உணவையும் நல்ல பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளையும் குறிக்கிறது. நல்லதைச் செய்வது என்பது குறித்து, நாம் வைராக்கியத்தில் நிறைந்திருக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது (காண்க 2 கொரிந்தியர் 9:2; வெளிப்படுத்தின விசேஷம் 3:15, 16). [15]The Analytical Greek Lexicon*, 238. *[16]சில மூப்பர்கள் வெளிப்படையான கூட்டங்களில் கூட பிரசங்கிக்கவும் போதிக்கவும் கூடியவர்களாயிருக்கின்றனர் (காண்க*

*1 தீமோத்தேயு 5:17), ஆனால் எல்லோருக்கும் இந்தத் திறமை இருக்க வேண்டும் என்று பொருளல்ல. [17]வருஷங்களினூடே, உதவிபெறும் சில முழுநேர மூப்பர்களுடன் ஊழியம் செய்திருக்கிறேன். சிலர் "உலகப்பிரகாரமான" பணியிலிருந்து ஓய்வு பெற்று "ஓய்வூதியம்" பெற்றுக் கொண்டிருந்தனர். அவர்கள் குறைந்த உதவியை சபையிலிருந்து பெற்று தங்கள் மூப்பர் பணிக்குரிய செலவுகளைச் செய்து கொண்டனர். [18]*KJV*யில் "இழிவான ஆதாயத்தை இச்சிக்காதவன்" என்று 1 தீமோத்தேயு 3:3 லும் தீத்து 1:7 லும் சொல்லப்பட்டுள்ளது. [19]சிலர் "விசுவாசிப்பவர்கள்" என்பதை தேவனிடத்திலும் அவரது வசனத்திலும் விசுவாசமாயிருப்பதற்கு மாறாக தங்களுடைய "தகப்பனிடத்தில் விசுவாசமாயிருப்பதைக் குறிக்கிறது" என்று சொல்லுகின்றனர். [20]"மூப்பர்" என்பது "முதியவர்" என்று குறிப்பிடுகிறது, ஆனால் "முதியவர்" என்பது ஒப்பீட்டுப் பதம்.*

*[21]இந்தப் பாடத்தில் எபிரேயர் 13:17 பிரதானமாக மூப்பர்களையே குறிப்பிடுகிறதாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. [22]வரைபடம் 6 காட்டுங்கள். [23]சிலர் presbuteros எனும் பதத்தை ஆங்கில வார்த்தையான "பிரீஸ்ட்" (ஆசாரியன்) என்று மாற்றியுள்ளனர், ஆனால் "ஆசாரியன்" என்பதற்கு கிரேக்க மொழியில் வேறு வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. [24]இந்த வார்த்தை ஜெப ஆலயத்தில் ஒரு உத்தியோகத்தையும் குறிப்பிட பயன்படுத்தப் படுகிறது (காண்க மத்தேயு 15:2). [25]நான் எண்ணிப்பார்த்தவகையில் Presbuteros என்னும் பன்மை வார்த்தை சபையின் மூப்பர்களைக் குறிக்கக் கூடியதாக பதினைந்து முறை புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது.* [26]"Scope" *எனும் வார்த்தை* "telescope" *(தூரத்தில் உள்ளவைகளைப் பார்க்க),* "microscope" *(அருகில் உள்ளவைகளைப் பார்க்க) பயன்படுத்தப்படும் கருவி. [27]எபிஸ்கோபஸ் எனும் (பெயர்ச்சொல் மற்றும் வினைச் சொல்லில்) சபையின் மூப்பர்களைக் குறிக்கத்தக்கதாக ஆறுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது. [28]Poimen (பெயர்ச்சொல் மற்றும் வினைச்சொல் வடிவங்களில்) சபையின் மூப்பர்களைக் குறிக்கும்படி மூன்று முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டின்படி, ஒரு உள்ளூர் சபையின்மேல் பன்மை மூப்பர்கள், அதாவது பன்மையான பாஸ்டர்கள் இருக்க வேண்டும். இன்றைக்குள்ள மார்க்க உலகில் இருப்பது போல ஒரு மனிதன் மேய்ப்பன் (பாஸ்டர்) என்பதற்கான ஆதாரம் புதிய ஏற்பாட்டுக்குத் தெரியாது.* [29]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 89. *[30]இது 1 தெசலோனிக்கேயர் 5:12 பிரதானமாக மூப்பர்களையே பேசுகிறது என்று எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதே கிரேக்க வார்த்தையின் வினைச்சொல் (proistemi) 1 தீமோத்தேயு 5:17ல் குறிப்பிடப்படும் மூப்பர்களுக்கு பயன்படுத்தப் பட்டுள்ளது.*

[31]Vine, 540. [32]Ibid. *[33]வரைபடம் 7 காட்டுங்கள். [34]வரைபடம் 8 காட்டுங்கள். [35]எபிரேய எழுத்தாளர் இறந்த காலத்தை பயன்படுத்துகிறார், ஏனெனில் அவர் குறிப்பிட்டு எழுதிய நபர்களெல்லாம் உள்ளூர் சபையை விட்டு பின் வாங்கிப்போனார்கள் என்று தெரிகிறது (எபிரேயர் 10:25 காண்க). இனியும் அவர்கள் மூப்பர்களுக்கு கீழ்ப்படிந்திருக்கவில்லை.*


**உலகிலேயே**

**மிகப்**

**பெரிய**

**பணி**

*வரைபடம் 1*


ஆளுகை அமைப்பிற்கான புதிய ஏற்பாட்டின் மாதிரி
இயேசு
மூப்பர்கள்
உதவியாளர்கள்
பிரசங்கியார்(கள்)
அங்கத்தினர்கள்

**வரைபடம் 2**

**உலகிலேயே**

**மிகப்**

**பெரிய**

**பணி**

*வரைபடம் 3*

1. சரியான தகுதி கோரிக்கைகள்
2. மிகப் பெரிய பொறுப்புகள்
3. மிக அருமையான பிரதி பலன்கள்

வரைபடம் 4

## மூப்பர்களின் தகுதியாம்சங்கள்

1. குற்றஞ்சாட்டப்படாதவன்
2. ஒரே மனைவியையுடையவன்
3. ஜாக்கிரதையுள்ளவன்
4. தெளிந்த புத்தியுள்ளவன்
5. இச்சையடக்கமுள்ளவன்
6. உபசரிக்கிறவன்
7. போதக சமர்த்தன்
8. *வசனத்தை பற்றிக் கொண்டிருப்பவன்*
9. மதுபானம் பண்ணாதவன்
10. சண்டை பண்ணாதவன்
11. *முற்கோபமில்லாதவன்*
12. பொறுமை, சமாதானம் உடையவன்
13. *சுயமாய் செய்யாதவன்*
14. பண ஆசையில்லாதவன்
15. *நல்லதை நேசிப்பவன்*
16. குடும்பத்தை நன்றாய் நடத்துபவன்
17. *விசுவாசமுள்ள பிள்ளைகளையுடையவன்*
18. நூதன சீஷனாயில்லாமை
19. நற்சாட்சி பெற்றவன்
20. *நீதியும், பரிசுத்தமும் உள்ளவன்*

**வரைபடம் 5**

## மூப்பர்களின் பட்டங்கள்

*Presbuteros* — பிரிஸ்பைட்டர் - மூப்பர்
*(நடபடிகள் 20:17; 14:23)*

*Episkopos* — கண்காணி, பிஷப்
*(பிலிப்பியர் 1:1; நடபடிகள் 20:28)*

*Poimen* — மேய்ப்பர், பாஸ்டர்
*(நடபடிகள் 20:28; 1 பேதுரு 5:2; எபேசியர் 4:11)*

* * * * * * *

*Epimeleomai* — "விசாரித்தல்"
*(1 தீமோத்தேயு 3:5)*

*Proistemi* — "நடத்துபவன்," "விசாரணை செய்கிறவர்கள்"
*(1 தீமோத்தேயு 5:17; 1 தெசலோனிக்கேயர் 5:12)*

*Hegeomai* — "நடத்த"
*(எபிரெயர் 13:7, 17, 24)*

**வரைபடம் 6**

## மூப்பர்களின் பொறுப்புகள்

1. உள்ளூர் சபையைக் கண்காணித்தல் - சபையின் வளர்ச்சிக்கு முன் நின்று வழிநடத்துதல்.
2. சபையின் தனிப்பட்டோரின் தேவையை கவனித்தல்.
3. அங்கத்தினர்களை பாதுகாத்தல் - கள்ள உபதேசத்திலிருந்து, உலகக்காரியத்திலிருந்து, கெட்ட முன் மாதிரியிலிருந்தும்.
4. முன் மாதிரியாயிருத்தல் - வாழ்விலும், ஊழியத்திலும், போதனையிலும்.

**வரைபடம் 7**

## மூப்பர்களின் பிரதிபலன்கள்

1. இயேசுவுக்கு ஊழியம் செய்வதே பிரதிபலன்.
2. அங்கத்தினர்களிடம் கிடைக்கும் கனம் (1 தீமோத்தேயு 5:17, 18)
   - பாராட்டு (1 தெசலோனிக்கேயர் 5:12).
   - மேலானவர்களாய் நினைத்தல் (1 தெசலோனிக்கேயர் 5:13).
   - கடிந்து கொள்ளாமல் நடத்துதல் (1 தீமோத்தேயு 5:1).
   - நல்லதை நம்புதல் (1 தீமோத்தேயு 5:19).
   - அவர்களை நினைத்துக் கொள்ளுங்கள் (எபிரெயர் 13:7).
   - அவர்களுடைய விசுவாசத்தை பின்பற்றுங்கள் (எபிரெயர் 13:7).
   - அவர்களுக்கு கீழ்ப்படிந்து அடங்குங்கள் (எபிரெயர் 13:17).
3. எல்லாவற்றுக்கும் மேலான பலன் (1 பேதுரு 5:1-4)

**வரைபடம் 8**

## 5

# மூப்பர் நியமன ஆராதனை

இங்கே இந்தப் புறக்குறிப்பில் கொடுத்துள்ள ஆராதனை முறையைத்தான் நான் அநேக உள்ளூர் சபைகளில் பயன்படுத்தியிருக்கிறேன்.[1]

**ஆராதனைக்கு முன்**

மூப்பர்களாக ஏற்படுத்தப்படப் போகிற மனுஷர்களும் அவருடைய மனைவிகளும் மேடைக்கு அருகில் முன்வரிசையில் அமரப்பண்ணப்பட வேண்டும்.

**துவக்கப் பாடல் மற்றும் ஜெபம்**

**கர்த்தருடைய பந்திப் பாடல்**

**கர்த்தருடைய பந்தி**

**காணிக்கை**

**துவக்கக் குறிப்புகளும் ஜெபமும்**

இந்த ஆராதனையின் நோக்கம் பற்றிய குறிப்புரையும் அப்படிப்பட்ட ஆராதனையை நடத்துவதற்கான வேதாகமம் சார்ந்த பின்னணியும் பிரசங்கியாரால் கொடுக்கப்பட்டது. துவக்கத்திற்கு சாத்தியமான குறிப்புரை: "இன்று நாம் இங்கே தேவனைத் தொழுது கொள்ளும்படி ஒன்றாகக் கூடி வந்திருக்கிறோம் மற்றும் ஆவிக்குரிய ஐக்கியத்தை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளவும் வந்திருக்கிறோம். இந்த ஐக்கியத்தை வெளிப்படுத்த ஏதுவாக அநேகமுறை கூடித் தரித்திருந்துள்ளோம்: ஒன்றாகப்பாடி, ஒன்றாக ஜெபித்து, விசேஷமாக கர்த்தருடைய பந்தியிலே ஒன்றாக பங்கு பெற்றுள்ளோம். இப்பொழுது நாம் இந்த ஐக்கியத்தின் இன்னொரு வெளிப்படுத்துதலில் பங்கு பெறப்போகிறோம்: இந்த உள்ளூர் சபையிலே மூப்பர்களை ஏற்படுத்துவதில் நம்முடைய பொதுவான பங்களிப்பு இடம் பெறப்போகிறது."

தேவன் ஆராதனையை ஆசீர்வதிக்கும்படி ஜெபித்து அதைத் தொடர்ந்து (மேற்குறித்த) இந்தக் காரியம் நடைபெற்றது. (உள்ளூர் சபையில் ஏற்கனவே சிலர் மூப்பர்களாக பணியாற்றிக் கொண்டிருந்தால், அவர்களில் ஒருவரால் நடப்பிக்கப்பட வேண்டும்.)

**பாடல்**

**மூப்பர்களின் கடமைகளைக் குறித்த குறிப்புரைகள்**

மூப்பர்களின் பணியைக்குறித்து பிரசங்கியார் பொதுவான குறிப்புரையை

வழங்கக்கூடும்.

மூப்பர்கள்/மேய்ப்பர்கள் ஆகியோரின் பணி குறித்து பேசும் வசனப்குதி களை பல மனிதர்கள் வாசிக்க வேண்டும். இந்த வசனப்பகுதிகள் கீழ்வரும் வசனங்களையும் உட்படுத்தியிருக்க வேண்டும்.

*நடபடிகள் 20:17, 28; 1 பேதுரு 5:1-4; 1 தீமோத்தேயு 3:1-7*
*தீத்து 1:5-9; எபிரேயர் 13:7, 17*
*எசேக்கியேல் 34:1-10; யோவான் 10:11-18*

**பாடல்**

**மூப்பர்களை ஏற்படுத்துதல்**

(ஏற்கனவே சில ஆண்கள் மூப்பர்களாக பணியாற்றிக் கொண்டிருந்தால், முதலாவதாக அவர்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.)

மூப்பர்களாக நியமனம் பெறும் நபர்களையும் அவர்களுடைய மனைவிகளையும் அறிமுகப்படுத்துதல். அவர்களை அறிமுகப்படுத்தும்போது, முன்பதாக நிற்க செய்து, கூட்டத்தாரைப் பார்த்து நிற்கச் சொல்ல வேண்டும். அறிமுகப்படுத்துதல் நிறைவு பெற்றபின், அவர்களுடைய மனைவிகளை அவர்களுடைய இருக்கைகளுக்கு அனுப்பிவிடலாம்.

கூட்டத்தார்களை எழுந்து நிற்கச் சொல்ல வேண்டும்.

கீழ்வரும் காரியங்களை புதிய மூப்பர்கள் பொறுப்பேற்று, உறுதிமொழி அளிக்க வேண்டும்:

> *"உங்கள் மீது உறுதியான நம்பிக்கை வைத்து இந்த உள்ளூர் சபை உங்களை மூப்பர்களாக தேர்ந்தெடுத்திருக்கிறார்கள், தேவ ஒத்தாசையாலும் உங்களுடைய திறமையினாலும், சிறப்பான செயலைச் செய்து உங்களின் நம்பிக்கைக்குரிய இடத்தை நிறைவு செய்வீர்களா? உங்களின் கடமைகளைப் பற்றிய நிறைவான அறிவைப் பெற்று, உள்ளூர் சபையின் கண்காணிப்பாளர்களில் ஒருவராக பொறுப்பேற்க சம்மதிக்கிறீர்களா?"*[2]

சபையின் அங்கத்தினர்களும் புதிய மூப்பர்களை ஏற்படுத்துகிற விஷயத்தில் அவர்களுடைய அர்ப்பணம் குறித்த வாக்குறுதி அளிக்க வேண்டும். அவர்கள் தங்களுடைய எளிய கை அசைவால் தங்கள் உறுதியை தெரியப்படுத்தினால் போதும். பிறகு அவர்களிடம் கேட்கப்படுவதாவது,

> *"நீங்கள் உங்களுடைய சிறப்பான திறமையால் இந்த மனுஷர்களுடைய கரங்களை உயர்த்தி பிடித்து, அவர்களுடைய பணிகளை எளிதாக்கி, கடினப்படுத்தாமல், தேவனுடைய வார்த்தையின்படியான வேண்டுகோள்களை அவர்கள் வைக்கிறவரை நீங்கள் உண்மையாகவே உங்கள் தலைவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குவீர்களா?"*

**புதிய மூப்பர்களுக்கும் உள்ளூர் சபைக்கும் ஜெபம்**

**பாடல்**

கூட்டத்தார் நின்று கொண்டிருக்கும் போது, அவர்கள் ஒருவருக்கொருவர்

*கைகளை கோர்த்துக்கொண்டு "இணைக்கும் பந்தங்கள் ஆசீர்வதிக்கப்படுவதாக" என்ற பாடலைப் பாட வேண்டும்.*

***புதிய மூப்பர்களின் மாறுத்தரம்***

*கூட்டத்தார்களை அமரச் சொல்லிவிடவேண்டும். (ஏற்கனவே மூப்பர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தால், அவர்கள் புதிய மூப்பர்களை வரவேற்று பேசுவார்கள்.)*

*புதிய மூப்பர்கள் ஒவ்வொருவரும் சில வார்த்தைகள் பேசலாம்.*

***முடிவுரைக் குறிப்புகள்***

*(அந்த உள்ளூர் சபையில் ஏற்கனவே மூப்பர்கள் இருந்தால், அவர்களில் ஒருவர் சில குறிப்புகளை இவ்வேளையில் கொடுக்கலாம்.)*

*நிறைவுக் குறிப்புரையை பிரசங்கியார் கொடுக்க வேண்டும். சபையார் எப்படி "கைகளை புதிய மூப்பர்கள் மேல்" வைத்து ஜெபிக்க வேண்டும் என்று பிரசங்கியார் சில ஆலோசனைகளைக் கொடுக்கலாம்: "அற்புதவரங்களைக் கொடுக்கும்படி இனியும் கைகளை மேலே வைப்பதில்லை, ஆனால் அவர்களுக்கு உறுதியும், நம்பிக்கையும் கொடுக்கும்படி இந்த மனுஷர் மேல் 'கைகளை வைத்து' தோளைத் தட்டிக் கொடுத்தோ கை குலுக்கியோ அல்லது கட்டித்தழுவியோ நமது உணர்வுகளை, 'நாங்கள் உங்களை நேசிக்கிறோம், உங்களுக்குப் பின் பலமாக இருக்கிறோம்' என்று சொல்ல வேண்டும்."*

***சுருக்கமான அழைப்பு***

***அழைப்புப் பாடல்***

***முடிவுப் பாடலும் ஜெபமும்***

## *பரிசீலிக்க கூடுதல் நடைமுறை*

*என்னுடைய மனைவியும் நானும் அர்கென்ஸாஸிலுள்ள ஜட்சனில் குடியிருந்தபோது, அங்கிருந்த பிரசங்கியார், கிளென் பேஸ், மனதைத்தொடும் அநேக மூப்பர் நியமன ஆராதனையை நடத்தியிருக்கிறார். ஆராதனை துவங்குவதற்கு முன் மேடையின் மேல் அநேக நாற்காலிகளைப் போடுவார், நியமனம் பெறும் ஒவ்வொரு மூப்பருக்கும் ஒரு நாற்காலியைப் போடுவார். ஆராதனை நடந்து கொண்டிருக்கும்போது, அந்த மனுஷர்களை அறிமுகப்படுத்தி, நாற்காலியில் அமரச் சொல்லுவார். பிறகு மற்ற மனிதர்களை நாற்காலிகளுக்கு பின்புறமாக நின்று நியமனம் பெறுவோரின் தோள்கள் மேல் கைகளை வைக்கச் சொல்லுவார். (அப்படிச் செய்ய நியமனம் பெறுவோருக்கு நெருக்கமாக பந்தமுள்ளவர்களாயிருப்பதை தேர்ந்தெடுத்து தெளிவாக அப்படிச் செய்வதில் சிந்தித்து செயல்படுவார்.) அப்படி நிற்பவர்கள், ஒவ்வொருவராக அமர்ந்திருப்பவர்களுக்காக ஜெபிப்பார்கள்.*

*நான் மூப்பராக நியமனம் பண்ணப்பட்ட போது அந்த உள்ளூர் சபையில்,*

*என்னுடைய தந்தை (முன்பதாக மூப்பர் பணியை அநேக உள்ளூர் சபைகளில் செய்தவர்) எனக்குப் பின்னால் நின்று என் தோளின் மேல் கைகளை வைத்து எனக்காக ஜெபம் பண்ணினார், நான் மிகவும் ஆழமாக நெகிழ்ச்சி அடைந்தேன். பின்னர், உதவிக்காரர்கள் நியமன ஆராதனையின்போது, நான் மிகவும் மெச்சிய கிறிஸ்தவ மனிதனுக்கு அப்படிச் செய்தேன். சகோதரர் பேஸ் அவர்களின் நடைமுறையை மிக உயர்வாக சிபாரிசு செய்கிறேன்.*

---

*குறிப்புகள்*

*[1]நியமன ஆராதனை ஒழுங்கு முறையில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் ஒவ்வொரு நகல் கொடுக்கலாம். ஆராதனை அறிவிப்புகள் இந்த ஆராதனை முறையில் அடங்கியிருக்கவில்லை. அறிவிப்பு கொடுப்பதாக இருந்தால் வழக்கமான நேரத்தில் கொடுக்கலாம். [2]புதிய மூப்பர்கள் உறுதிமொழி எடுக்க வேண்டியதை முன் கூட்டியே அவர்களுக்குத் தெரியப்படுத்துங்கள், அதினால் எப்பொழுது உறுதிமொழி கொடுக்க வேண்டும் என்று அறிவார்கள். ஆம் என்று எளிமையாகச் சொன்னாலே சரியான உறுதி மொழி.*

*6*

# பின்பற்றுவோருக்கு மூன்று சட்டங்கள்

## (எபிரேயர் 13:7, 17, 24அ)

*மூப்பர் நியமன ஆராதனையில் நியமனத்துக்கு முன் ஒரு பிரசங்கம் செய்ய ஏதுவான நேரம் இல்லை, ஆகிலும் நான் நடத்திய நியமன ஆராதனை ஒரு குறுகிய நேர பிரசங்கத்திற்கு நேரம் ஒதுக்குவதுண்டு. புதிய மூப்பர்களை நியமனம் செய்வதோடு சம்பந்தப்பட்ட ஒரு பிரசங்கம் நான் பயன்படுத்தியது இதோ.*

அநேக மாதங்களாக, நாம் மூப்பர்களின் கடமைகளைப் பற்றி கற்றுக் கொண்டுள்ளோம். இன்று ஒவ்வொரு சபை அங்கத்தினரும் மூப்பர்களுக்கு ஆற்றும் கடமையைக் குறித்து சில வார்த்தைகளைக் காண்போம். மூப்பர்களுக்கும் அங்கத்தினர்களுக்கும் இடையேயான *உறவுமுறை* குறித்து கவனம் செலுத்த விரும்புகிறேன். தங்களை நடத்துபவர்களைப் பின்பற்ற விரும்பாத பட்சத்தில் *தலைமைத்துவம்* இருக்க இயலாது. இந்தப் பாடத்தை நான் "பின்பற்றுவோருக்கு மூன்று சட்டங்கள்" என்று அழைக்கிறேன்.

என்னுடைய கருத்து விளக்க வசனப்பகுதி எபிரேயர் 13. எபிரெயர் புத்தகம் அநேகமாக உள்ளூர் சபையிலேயே இருந்த ஒரு கூட்ட மக்களுக்கு எழுதப்பட்டிருக்கலாம். இந்த கூட்ட மக்கள் ஒரு காலத்தில் விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களாக இருந்து பிறகு விழுந்து போனவர்கள். இனியும் அவர்கள் ஆராதனைகளில் வருகை தரவில்லை (காண்க எபிரேயர் 10:24, 25), அவர்கள் தேவனுடைய நியமனம் பெற்ற வழி நடத்துனர்களுக்கு மிகக் குறைவான மரியாதையையே கொண்டிருந்தனர். அதன் விளைவாக, மூப்பர்களுக்கு அவர்கள் செலுத்த வேண்டிய மரியாதையை மூன்று விசேஷித்த அறிவுரைகளை இந்த கடைசி அதிகாரம் தனக்குள் கொண்டுள்ளது. மூன்று அறிவுரைகளும் நாம் எப்படி நம்முடைய மூப்பர்களை நடத்த வேண்டும் என நம் ஒவ்வொருக்கும் பேசுகிறது.

### சட்டம் 1: மூப்பர்களை பாராட்டுகிற சுபாவத்தோடு நினைத்துப்பாருங்கள் (13:7)

எழுத்தாளர் கடந்த கால தலைவர்களைக் குறித்துப் பேசினார்: "தேவ வசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்" (வசனம் 7). மூப்பர்களுக்கு அப்பால் சிலரை மனதில் வைத்து எழுத்தாளர் எழுதியிருக்கலாம், ஆனால் இதில்

உள்ள வார்த்தைகள் நிச்சயமாக மூப்பர்களையும் உள்ளடக்கியே பேசுகிறது.

அதே போல நீங்களும் "தேவ வசனத்தைப் போதித்து, உங்களை நடத்தினவர்களை நினைத்துக் கொள்ளுங்கள்" என்று அறைகூவல் விடுக்கிறார் (வசனம் 7அ). உங்கள் மனதில் காட்சிப்படமாக உலாவவிடுங்கள். ஆவிக்குரிய ரீதியில் உங்கள் வாழ்க்கையை ஆசீர்வதித்தவர்களை மனதில் கொண்டு வாருங்கள்: பெற்றோர், ஆசிரியர்கள், பிரசங்கியார்கள், தேவபக்தியுள்ள அங்கத்தினர்கள் ... விசேஷமாக மூப்பர்கள். அநேக தேவபக்தியுள்ள மூப்பர்கள் எனக்கு உதவி செய்து என்னை ஊக்கப்படுத்தியிருக்கிறார்கள்.

"அவர்களுடைய நடக்கைகளின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து" என்று எழுத்தாளர் எழுதுகிறார் (வசனம் 7ஆ). "நன்றாய்ச் சிந்தித்து" என்று கிரேக்க மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தை வழக்கமான ஒரு நினைவலையைக் குறிப்பதில்லை. ஏதோ ஒன்றை *கூர்மையாக கவனித்து* அதை *ஜாக்கிரதையாக* சிந்தித்துப் பார்ப்பதை பொருள்படுத்துகிறது.[1] மறுபடியும் சிந்தியுங்கள். கடந்த தலைவர்களைக் குறித்து, உங்களுடைய வாழ்க்கைக்கு அவர்களுடைய வாழ்க்கையின் என்ன நல்ல காரியம் நல்வழிப்படுத்தியது? அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையை நீங்களும் வாழ பிரயாசப்படுகிறீர்களா? "அவர்களுடைய விசுவாசத்தை நீங்கள் பின்பற்ற வேண்டும்" (வசனம் 7இ) - அவர்களிடம் இருந்த குறைகளையல்ல (நம்மெல்லாரிடத்திலும் குறைகள் உண்டு), ஆனால் அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்.

## சட்டம் 2: மூப்பர்களுக்கு அடங்கி நடக்கிற தன்மையுள்ளவர்களாய் இருங்கள் (13:17)

வசனம் 17ல் எழுத்தாளர் தனது கவனத்தை தற்போதையை தலைவர்களுக்குத் திருப்புகிறார். அவர், "உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்திரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்க மாட்டாதே" என்று சொன்னார்.

"உங்களை நடத்துகிறவர்களுக்கு கீழ்ப்படிந்து அடங்குங்கள்" என்று நமக்குச் சொல்லப்படுகிறது (வசனம் 17ஆ). ஏன்? ஏனெனில் "அவர்கள் உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்திரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால்" (வசனம் 17அ). தேவனுடைய வசனத்தைப் போதிக்கிற யாருக்கும் இது பொதுவாக நடைமுறைப்படுத்தலாம். தேவபக்தியுள்ள இந்த உபதேசத்தை போதிக்கிறவர்களின் வசனங்களுக்கு அதைக் கேட்கிறவர்கள் கீழ்ப்படிய வேண்டும். மேலும், தேவனுடைய வசனத்தைப் போதிக்கிறவர்கள் ஏதோ ஒரு நாளில் அவர்கள் தங்கள் ஊழியத்தில் எவ்வளவு உண்மையாயிருந்தார்கள் என்பது குறித்து கணக்கு ஒப்புவிக்க வேண்டும். எழுத்தாளர், இந்த வார்த்தைகளை மூப்பர்களை மனதில் வைத்தே எழுதினார் என்பது, என்னுடைய நம்பிக்கை. வசனம் 17ல் "வசனத்துக்கு கீழ்ப்படிந்து அடங்குங்கள்" என்று சொல்லவில்லை, ஆனால் "உங்களை நடத்துகிறவர்களுக்கு கீழ்ப்படிந்து அடங்குங்கள்" என்றே சொல்லுகிறது.

"கீழ்ப்படிதல்" மற்றும் "அடங்குதல்" போன்ற வார்த்தைகள் மூப்பர்கள்

எடுக்கும் எந்த முடிவுக்கும் நம்முடைய ஒப்புதலை அளித்தல் என்று பொருள் அல்ல?[2] உதாரணமாக, அவர்கள் தேவனுடைய வசனத்துக்கு முரணாக அவர்கள் நம்மை ஏதோவொன்றைச் செய்யச் சொல்வார்களாகில், நாம் மறுப்பு தெரிவிக்க வேண்டும் (காண்க நடபடிகள் 5:29). தீர்வு செய்யப்பட வேண்டிய விஷயமாக இருந்தாலும், மூப்பர்களுடன் நாம் இணங்கி போகாவிட்டால், சரியான தன்மையை நாம் கைக் கொண்டிருக்கும் வரை, நாம் எப்படி உணருகிறோம் என்று அவர்களுடன் கருத்துக்களை பகிர்ந்து கொள்வதில் தவறில்லை. ஞானமுள்ள மேய்ப்பன் தன் ஆடுகளுக்கு செவி சாய்க்கிறான். (அங்கத்தினர்கள் மூப்பர்களை மதிக்க வேண்டும், மூப்பர்கள் அங்கத்தினர்களை மதிக்க வேண்டும்.) எப்படியிருப்பினும், கடைசியாக மூப்பர்களின் தீர்ப்பே இறுதியானது, என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும் - அந்த தீர்வுகளுக்கு தேவனிடத்தில் கணக்கு கொடுக்க வேண்டியவர்கள் அவர்களே. பொதுவாகச் சொன்னால், நாம் மூப்பர்களின் ஆவிக்குரிய தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். மற்றும் ஆடுகள் அன்பு நிறைந்த தங்களுடைய மேய்ப்பனைப் பின்பற்றிப்போவது போல் அவர்கள் நன்மைகளையே செய்கிறவர்களானதால் நாமும் அவர்களைப் பின்பற்ற வேண்டும்.

தீர்ப்பு மற்றும் கருத்துக்களைச் சார்ந்த காரியங்களில் அங்கத்தினர்கள் கீழ்ப்படிந்து அடங்குவதை மிகமிகக் கடினமான ஒன்றாகவே காணுகிறார்கள் என்பது என் அனுபவத்தில் கண்ட உண்மை. எப்படியிருப்பினும், நீங்கள் அதை நினைத்துப் பார்த்தால், தீர்வு சார்ந்த விஷயங்களில் தங்கள் முடிவைத் தெரிவிப்பது மட்டுமே மூப்பர்களுக்கு கொடுக்கப்பட்ட ஒரேபகுதி. விசுவாச விஷயத்தில் அவர்கள் தாங்களாக எதையும் பிரகடனப் படுத்திவிட முடியாது; தேவன் அதை ஏற்கனவே தமது வசனத்தில் செய்திருக்கிறார். தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிப்பது என்றாலும் அவர்கள் எடுக்கும் தீர்மானம், வசனத்தின் வரையறைக்குள்ளாக இருக்க வேண்டும். இதில் ஆராதனை ஒழுங்குகளை வரையறுத்தல், ஒரு சபைக் கட்டிடத்தைக் கட்டுதல், ஒரு பிரசங்கியாரை நியமித்தல் அல்லது நீக்குதல், மற்றும் கூடுதல் மூப்பர்களை நியமிக்கிற நடைமுறைகளும் கூட இவைகளுக்கு கட்டுப்பட்டது.

நம்மை நடத்துபவர்களுக்கு நாம் ஏன் நமது கீழ்ப்படிதலோடுகூட மரியாதை செலுத்த வேண்டும்? ஏனெனில் அவர்களுக்கென்று மிக அதிகமான பொறுப்புகள் உள்ளன. நாம் அவர்களுடைய பாரத்தைக் குறைக்க வேண்டுமேயொழிய, அதிகப் பாரத்தை கொடுத்துவிடக் கூடாது. அவர்கள் நம்முடைய ஆத்துமாக்களுக்காக "உத்திரவாதம் பண்ணுகிறவர்களாய்" "விழித்திருக்கிறவர்கள்" (வசனம் 17ஆ).[3] "விழித்திருப்பவர்கள்" எனும் பதம் "தூங்காமல் இருக்கிறவர்கள்" என்ற வார்த்தையின் பொருள்.[4] அங்கத்தினர்களின் பிரச்சனைகளில் அவர்களுக்கு சிறந்த உதவியை அளிக்கும் பொருட்டு அநேக மூப்பர்கள் பல இரவுகள் தூங்காமல் போராடியிருக்கிறார்கள்.

எபிரெய எழுத்தாளர் தமது வாசகர்களுக்கு அறிவுறுத்தி, "அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் [உங்கள் ஆத்துமாவுக்காக உத்தரவாதம் பண்ணுவது] செய்யவேண்டும்" (13:17இ). நீங்களும் நானும் மரியாதையும் கீழ்ப்படிதலும் உள்ளவர்களாயிருக்கும்போது, மூப்பர்களின் பணி சந்தோஷமுள்ளதாகிறது. யோவானைப் போல, அவர்களும் சொல்லக் கூடும், "என் [ஆவிக்குரிய] பிள்ளைகள் சத்தியத்தில் நடக்கிறார்கள் என்று

நான் கேள்விப்படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை'' (3 யோவான் 4; காண்க 1 தெசலோனிக்கேயர் 2:20). நாம் மரியாதையற்றவர்களாயும் கலகக்காரர்களாயும் இருப்போமாகில், மூப்பர்கள் துக்கம் மிகுந்தவர்களாயிருப்பார்கள். "துக்கம்'' என்பது நேரடிப் பொருளில் "வேதனையில் புலம்ப'' என்று அர்த்தம் ஆகும். "நீங்கள் உங்கள் ஆவிக்குரிய கால்விரலில் காயம் ஏற்படுத்திக் கொண்டால், மூப்பர்கள் அதை தங்கள் கால்களில் மேல் நோக்கி ஏறும்வலியாக உணருவார்கள்'' என்று யாரோ ஒருவர் சொன்னார்.

## சட்டம் 3: அன்பின் ஆவியோடு அவர்களிடம் நட்பாயிருங்கள் (13:24அ)

இறுதியாக, எழுத்தாளர் சொன்னார், "உங்களை நடத்துகிறவர்களையும், பரிசுத்தவான்கள் யாவரையும் வாழ்த்துங்கள்'' (வசனம் 24அ). அநேக எழுத்தாளர்களும் இந்தப்பதம் புத்தகத்தை எழுதியவர் சபைக்குள்ளாகவே இருந்த ஒரு சிறிய குழுவினருக்கு எழுதி அவர்கள் மூப்பர்களோடும் சபையிலுள்ள மற்ற மக்களோடும் மறுபடியும் நட்புறவு கொள்ளும்படி கூறப்பட்டதாக குறிப்பிடுகிறது என்று நம்புகின்றனர். "வாழ்த்துங்கள்'' எனும் பதம் ஏதோ ஹலோ சொல்லுவதுபோல மேலோட்டமான வார்த்தையைக் காட்டிலும் மேலானது. இந்தப் பகுதியில் அது ஒரு நெருங்கின உறவுமுறையை ஏற்படுத்தும் ஆவிக்குரிய பந்தத்தை நிலை நிறுத்திக்காட்டுகிறது. இந்த வகையான பந்தம் உள்ளூர் சபையின் அங்கத்தினர் ஒவ்வொருவருடனும் நமக்குத் தேவை. இந்த பந்தம் நமக்கு விசேஷமாக மூப்பர்களிடம் ஏற்படுத்தப்பட வேண்டும். நாம் ஆடுகள், அவர்கள் நம்முடைய ஆவிக்குரிய மேய்ப்பர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். மேய்ப்பர்கள் ஆடுகளை அறிந்திருக்க வேண்டும், ஆடுகள் தங்கள் மேய்ப்பர்களை அறிந்திருக்க வேண்டும். நாம் நமது தலைவர்களிடம் அன்பின் ஆவியோடு நட்புறவு கொண்டிருக்க வேண்டும்.

## முடிவுரை

வருகின்ற நாட்களில், புதிதாய் பொறுப்பேற்றுள்ள நம்முடைய மூப்பர்கள் பணியாற்றும்போது, பின்பற்றுகிறவர்களுக்கு கொடுக்கப்பட்ட இந்த மூன்று சட்டங்களையும் மறந்து விட வேண்டாம்:

- அவர்களை பாராட்டும் தன்மையுடன் நினைத்துக் கொள்ளுங்கள்.
- கீழ்ப்படிந்து அடங்குகிற தன்மையோடு மரியாதை கொள்ளுங்கள்.
- அன்பின் தன்மையோடு நட்புறவு கொண்டாடுங்கள்.

(ஆராதனையின் இந்தப் பகுதியை ஜெபத்துடன் முடியுங்கள்.)

---

குறிப்புகள்

[1]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 59-60.

[2]"குருடர்களுக்கு" "குருடர்" வழிகாட்டுகிற சூழ்நிலையை உருவாக்க நாம் விரும்புவதில்லை

*(காண்க மத்தேயு 15:14).* [3]*தீத்து 1ல் மூப்பர்களை "உக்கிராணக்காரர்களென" (வசனம் 7) பவுல் குறிப்பிட்டார். உக்கிராணக்காரர்கள் தங்களுடைய உக்கிராணத்துவத்துக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டும் (காண்க லூக்கா 16:2). 1 கொரிந்தியர் 4ல் பவுல் உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார் (வசனம் 2).* [4]Vine, 667.

7

# மூப்பர்களின் வலது–கரம் போன்ற மனுஷர்

## (1 தீமோத்தேயு 3:8–13)

*இந்தப் பாடத்தை உள்ளூர் சபையில் உதவிக்காரர்களை ஏற்படுத்தும் பொருட்டு துவக்கப் பிரசங்கமாக நான் பயன்படுத்தியிருக்கிறேன். ஆரம்ப வாக்கியத்தைத் தொடர்ந்து, தேர்ந்தெடுத்தலைக் குறித்தும், தொடர்ந்து நடைமுறைப் படுத்துவது என்ன என்பதையும் குறித்து இருக்கும். பிறகு, முடிவுரையில், தகுதியான மனுஷர்களைத் தேர்ந்தெடுக்க அங்கத்தினர்களுக்கு உள்ள பொறுப்புக்களை பயன்படுத்துவேன்.*

நாம் இதுகாலும் மூப்பர்களைப் பற்றி படித்துக் கொண்டிருந்தோம். இந்தப் பாடத்தில் "மூப்பர்களின் வலது கரம் போன்ற மனிதர்களைப்பற்றி" படிக்கப் போகிறோம்:[1] அவர்கள் உதவிக்காரர்கள். பிலிப்பியர் 1:1க்குத் திருப்புங்கள்: "இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரராகிய பவுலும் தீமோத்தேயும், பிலிப்பு பட்டணத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவருக்கும், கண்காணிகளுக்கும். உதவிக்காரருக்கும் எழுதுகிறதாவது." ஏற்கனவே நாம் பார்த்தபடி, பவுல் முதலாவதாக இரண்டு சுவிசேஷகர்களை (தன்னையும் தீமோத்தேயுவையும்) குறிப்பிட்டு எழுதினார், பிறகு பிலிப்பியிலிருந்த அனைத்து சபையார்களையும் ("பரிசுத்தவான்கள் அனைவருக்கும்") குறிப்பிட்டார். இறுதியாக, இரண்டு விசேஷித்த கூட்ட மக்களை ("காண்காணிகளுக்கும் உதவிக்காரர்களுக்கும்") குறிப்பிடுகிறார். இந்தப் பாடம் கடைசியில் குறிப்பிடப்பட்ட கூட்டமாகிய உதவிக்காரர்களைப் பற்றியது. பிலிப்பியர் 1:1ல் பேசப்படுகிற உதவிக்காரர்கள் யார்? இதற்கான பதில் மூன்று முக்கியமான பகுதிகளைக் கொண்டது: அவர்கள் (1) விசேஷித்த விதமான ஊழியர்கள் (2) குறிப்பிட்ட தகுதியாம்சங்களைப் பெற்றவர்கள் (3) மூப்பர்களுக்கு உதவிகரமாயிருந்து, இந்தத் தலைவர்கள் ஊழியத்தை நிறைவேற்ற உதவுபவர்கள்.

### விசேஷித்த ஊழியர்கள் ...

"உதவிக்காரர்கள்" எனும் வார்த்தை கிரேக்க வார்த்தையான *diakonos* என்பதிலிருந்து மொழியாக்கம் செய்யப்பட்டது. *Diakonos* எனும் வார்த்தையின் மூலக்கூறு பற்றி அநேக யூகங்கள் வெளியிடப்பட்டது. W. E. வைன் குறிப்பிடுகையில், "இந்த வார்த்தை அநேகமாக வினைச் சொல்லாகிய டயாக்கோ, என்பதுடன் சம்பந்தப் பட்டிருக்கலாம், 'துரிதப்படு, தொடர்ந்துபிடி,' என்றுபொருள் (இதன் ஆரம்பக்கூறு ஒரு ஓட்டப் பந்தய

வீரனைக் குறிப்பிடுவது).''[2] இன்னொரு யூகம் என்னவெனில் அது ஒரு தொகுப்பு வார்த்தை: டயா (''ஊடாக'') கூட்டல் கோனியா (''தூசி''[3]). ஆதலால் *diakonos* என்பதன் பொருள் ''தூசியை கிளறுபவன்''![4] என்று ஆலோசனையாகச் சொல்லப்படுகிறது. இன்னும் அதிக ஆலோசனையாக இது ஒரு வினைச்சொல் *diakoneo* மூல பொருள்படி ''மேஜையில் காத்திருப்பவன்''[5] (காண்க லூக்கா 17:8; யோவான் 12:2), ஆனால் பொதுவாக ஊழியம் செய்தலை குறிப்பிடுவதாயிற்று. *Diakonos* என்பதன் எளிய விளக்கம் ''ஊழியக்காரன்.''

*Diakonos*, அதன் வித்தியாசப்பட்ட பொருள்களில், புதிய ஏற்பாட்டில் முப்பதோ அதற்கு மேற்பட்ட தடவைகள் காணப்படுகிறது. பெயர்ச்சொல் பொருளில் வித்தியாசப்பட்ட பல வார்த்தைகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது, அதில் ''உதவிக்காரன்,'' ''வேலைக்காரன்,'' ஆகிய வார்த்தைகளையும் உள்ளடக்கியது. இவைகள் அனைத்தும் ஒரே கிரேக்க வார்த்தையிலிருந்து வந்தவை. கிரேக்க வார்த்தையில் ''மூப்பர்'' எனும் பதம் (*presbuteros*)[6] பலபொருள் படுவது போல, *diakonos* எனும் பதமும் பொதுவாகவோ அல்லது அதிகக் குறிப்பாகவோ பயன்படுத்தப்படலாம்.

*Diakonos* எனும் பதம் பொதுவாக பிரசங்கியார்களுக்கு பொதுவாகப் பயன்படுத்தப்பட்டது. பவுல் தீமோத்தேயுவிடம், ''இவைகளை நீ சகோதரருக்குப் போதித்துவந்தால், விசுவாசத்திலும் ... தேறினவனாகி, இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல ஊழியக்காரனாயிருப்பாய்'' [*diakonos*] (1 தீமோத்தேயு 4:6அ; காண்க எபேசியர் 6:21; கொலோசெயர் 1:7). ஆக, ஒரு வகையில் இந்த வார்த்தை, பிரசங்கியாரையும் ''உதவிக்காரன்'' என்று பொருள்படுத்துகிறது. மறுபடியும், பொதுவான அர்த்தத்தில், இந்த வார்த்தை சபையின் எல்லா அங்கத்தினர்களுக்கும் பொருந்தும். இயேசு சொன்னார், ''ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்கிறவனானால் [*diakoneo*] என்னைப் பின்பற்றக் கடவன்; நான் எங்கே இருக்கிறேனோ, அங்கே என் ஊழியக்காரனும் [*diakonos*] இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்தால் [*diakoneo*] என் பிதா அவனைக் கனப்படுத்துவார்'' (யோவான் 12:26). ஆதலால், ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஒரு ''உதவிக்காரராக''[7] இருக்க வேண்டும்.

குறிப்பான பொருளில், எப்படியாயினும், *diakonos* குறிப்பிட்ட விசேஷித்த குழு மனுஷர்களை குறிப்பிடுகிறது (பிலிப்பியர் 1:1). அவர்கள் குறிப்பிட்ட தகுதி யாம்சங்களைப் பெற்றிருப்பவர்கள் (1 தீமோத்தேயு 3:8-13) மற்றும் அவர்கள் குறிப்பிடப்பட்ட சிலபொறுப்புகளை நிறைவேற்றுபவர்கள். 1 தீமோத்தேயு 3:10 ''உதவிக்காரர்களாக ஊழியஞ் செய்வோரைப்'' பற்றிப் பேசுகிறது, வசனம் 13 (அதே அதிகாரம்) ''உதவிக்காரர்களுடைய ஊழியத்தை நன்றாய்ச் செய்கிறவர்கள்''[8] என்று குறிப்பிடுகிறது. இந்த அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்ட, *diakonos* ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் பொருந்தாது.

*Diakonos* என்ற இந்த சிறப்பு பணிக்கு கொடுக்கப்பட்டுள்ள பட்டம் வேதாகம ரீதியிலானது என்பதை கவனிக்க வேண்டும். மூப்பர்களுக்கு மூன்று பதங்கள் புதிய ஏற்பாட்டில் காணப்படுகின்றன (''மூப்பர்கள்,'' ''கண்காணிகள்,'' மற்றும் ''மேய்ப்பர்கள்''), ஆனால் உதவிக்காரர்களுக்கு ஒரு பதம் மட்டுமே. பிரசங்கியார்களுக்கு மூன்று பதங்கள் பயன்படுத்தப் பட்டுள்ளது (''பிரசங்கியார்'' [தூதர்]), ''ஊழியர்கள்'' [பணியாளர்கள்] மற்றும் ''சுவிசேஷகர்கள்'' (நற்செய்தி அறிவிக்கிறவர்கள்), ஆனால் உதவிக்காரர்களுக்கு ஒரே ஒரு பதம்தான்.

மேலும் *diakonos* எனும் வார்த்தையில் இயல்பான அதிகாரம் இல்லை என்பதைக் கவனிக்க வேண்டும். நாமகரண (பிரிவு) சபையார்கள் மத்தியில் "உதவிக்காரர்கள் கழகம்" சபையைக் கட்டுப் படுத்துவது போன்ற செய்தியை சில வேளைகளில் கேள்வியுறுகிறோம். அப்படிப்பட்ட ஒரு ஏற்பாடு புதிய ஏற்பாட்டு உபதேசத்துக்கும் டயாக்னோஸ் எனும் வார்த்தையின் அடிப்படை அர்த்தத்துக்கும் அந்நியமானது. மூப்பர்கள் உதவிக்காரர்களுக்கு சில பொறுப்புக்களைக் கொடுத்து அதை நிறைவேற்றும் அதிகாரத்தைக் கொடுக்கலாம், ஆனாலும் "உதவிக்காரர்" எனும் பதத்திற்குள் - கட்டமைப்பு கொண்ட ஒரு அதிகாரம் இல்லை. உதவிக்காரர்கள் முதலாவதும், மிகமுக்கியமானவர்களுமான, *ஊழியர்கள்.*

உதவிக்காரனாக இருப்பது என்பது ஒரு *பதவியல்ல*, ஆனால் அது ஒரு *செய்யப்பட* வேண்டிய *வேலை* என்று யாரோ ஒருவர் நன்றாகச் சொன்னார். கிங்ஜேம்ஸ் மொழிபெயர்ப்பில் "உதவிக்காரர்களின் [பணி] பதவி" என்று 1 தீமோத்தேயு 3:10, 13ல் சொல்லப்பட்டுள்ளது; ஆனால் சற்று நேரத்துக்கு முன்பு நாம் குறிப்பிட்டபடி, கிரேக்க வசனப்பகுதி "உதவிக்காரர்களின் *பதவி*" என்று எதுவும் குறிப்பிடுவதில்லை, மாறாக உதவிக்காரனாக *பணி* செய்வதைக் குறிப்பிடுகிறது. ஒரு மனிதனை "உதவிக்காரனாக ஏற்படுத்துவதால்" அது அவனை உதவிக்காரனாக்கி விடாது. அவன் ஏற்படுத்தப்பட்ட பின், மூப்பர்கள் அவனை செய்யும்படி சொல்லுவதை செய்யத் தொடங்கும்போதே அவன் உண்மையான உதவிக்காரனாக மாறுகிறான்[9] - அவன் அந்த விசேஷமான வழியில் ஊழியம் செய்யத் துவங்கும்போது.

## ... குறிப்பிட்ட தகுதியாம்சங்களை உடையவர் ...

உதவிக்காரர்கள் வெறும் ஊழியர்கள் மட்டுமல்ல; அவர்கள் *தகுதிபெற்ற* ஊழியக்காரர்கள். உதவிக்காரர்களின் தகுதியாம்சங்கள் 1 தீமோத்தேயு 3:8-13ல் காணப்படுகிறது, மூப்பர்களின் தகுதியாம்சங்களுக்கு அடுத்ததாக இது சொல்லப்படுகிறது:

> அந்தப்படியே,[10] உதவிக்காரரும் இரு நாக்குள்ளவர்களாயும், மதுபானப் பிரியராயும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களாயும் இராமல், நல்லொழுக்கமுள்ளவர்களாயும், விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்த மனச்சாட்சியிலே காத்துக் கொள்கிறவர்களாயும் இருக்க வேண்டும். மேலும் இவர்கள் முன்னதாகச் சோதிக்கப் படவேண்டும்; குற்றஞ் சாட்டப்படாதவர்களானால் உதவிக்காரராக ஊழியஞ் செய்யலாம். அந்தப்படியே ஸ்திரீகளும் நல்லொழுக்கமுள்ளவர்களும், அவதூறு பண்ணாதவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், எல்லாவற்றிலேயும் உண்மையுள்ளவர்களுமாய் இருக்க வேண்டும். மேலும் உதவிக்காரரானவர்கள் ஒரே மனைவியை உடைய புருஷருமாய், தங்கள் பிள்ளைகளையும் சொந்தக் குடும்பங்களையும் நன்றாய் நடத்துகிறவர்களுமாயிருக்க வேண்டும். இப்படி உதவிக்காரருடைய ஊழியத்தை நன்றாய்ச் செய்கிறவர்கள் தங்களுக்கு நல்ல நிலையையும், கிறிஸ்து இயேசுவைப் பற்றும்

விசுவாசத்தில் மிகுந்த தைரியத்தையும் அடைவார்கள்.

நடபடிகள் 6ல் காணப்படுகிற சுருக்கமான தகுதியாம்ச பட்டியலையும் இத்துடன் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று சிலர் நினைக்கிறார்கள்:

> ... அப்பொழுது பன்னிருவரும் [அப்போஸ்தலர்கள்] சீஷர் கூட்டத்தை வரவழைத்து: நாங்கள் தேவ வசனத்தைப் போதியாமல், "பந்தி விசாரணை செய்வது தகுதியல்ல. ஆதலால் சகோதரரே, *பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற* ஏழுபேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம். நாங்களோ ஜெபம் பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம் என்றார்கள். இந்தயோசனை சபையாரெல்லாருக்கும் பிரியமாயிருந்தது. அப்பொழுது *விசுவாசமும் பரிசுத்த ஆவியும் நிறைந்தவனாகிய* ஸ்தேவானையும், பிலிப்பையும், பிரொரோகோரையும், நிக்கானோரையும், தீமோனையும், பர்மெனாவையும் யூதமார்க்கத் தமைந்தவனான அந்தி யோகியா பட்டணத்தானாகிய நிக்கொலாவையும் தெரிந்து கொண்டு" (வசனங்கள் 2-5; வலியுறுத்தல் என்னுடையது).

கடந்தகாலங்களில், தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த ஏழு மனிதர்களும் "முதல் உதவிக்காரர்கள்" எனப்பட்டனர். சமீபத்தில்தான் *டயாக்னோஸ்* எனும் வார்த்தையை இவர்களுக்கு அடையாளப்படுத்தும்படி பயன்படுத்தவில்லை என்பது பொதுவாகக் குறிப்பிடப் பட்டது.[11] ஆயினும், "பந்தி விசாரணை" எனும் சொற்றொடருக்கு *டயாக்னியோ* எனும் வினைச் சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது. இது 1 தீமோத்தேயு 3ல், பயன்படுத்தப்பட்டுள்ள அதே பதம்தான், அங்கு பவுல் உதவிக்காரரராக ஊழியஞ் செய்யலாம் என்று பேசியிருக்கிறார் (வசனங்கள் 10, 13). குறைந்தபட்சம், அந்த ஏழு மனிதர்களும் உதவிக்காரர் செய்ய வேண்டிய பணியைத் செய்தார்கள், எனவே சட்டரீதியாக அவர்களுக்கும் பொதுவாக இவ்வார்த்தை பயன்படுத்தப்படலாம்.

1 தீமோத்தேயு 3:8-13ல் காணும் தகுதியாம்சங்களை மீண்டும் வாசிக்கவும், பிறகு நடபடிகள் 6ல் காணும் தகுதிகளை சிந்திக்கவும் ("பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருத்தல்," விசுவாசமும் பரிசுத்த ஆவியும் நிறைந்தவர்). இந்த பட்டியல்கள் ஒரு உதவிக்காரர் செய்ய வேண்டிய பணியைக் குறித்த குறிப்பு அடையாளங்களையும் முக்கியத்துவத்தையும் கோடிட்டு காட்டுகிறது. உதவிக்காரர்கள் வித்தியாசப்பட்ட தங்களுடைய ஊழியங்களினால் சபையை முன்னிலைப்படுத்துபவர்கள். கொடுக்கப்படும் பொறுப்புகளை ஏற்றுச் செயல்படுத்தும் நற்குணம் பெற்ற மனுஷர்கள் அவர்கள்.

1 தீமோத்தேயு 3ம் அதிகாரத்தில் காணப்படும் தகுதியாம்சங்களை சற்று நேரம் காண நேரம் எடுத்துக் கொள்வோமாக. பிறகு நடபடிகள் 6ல் குறிப்பிடப்பட்ட சுருக்கமான பதங்களையும் ஆராய்வோம்.

### 1 தீமோத்தேயு 3

(1) *நல்லொழுக்கம்* (*Dignified*). "உதவிக்காரர்கள் ... நல்லொழுக்கமுள்ள மனுஷர்களாயிருக்க வேண்டும்" (வசனம் 8அ). "நல்லொழுக்கமுள்ள

மனுஷர்கள்" என்பது *செம்னாஸ்* என்பதிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது, KJV யில் "ஆழ்ந்த சிந்தனைக்குரிய" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த *semnos*, என்பது ஆழ்ந்த சிந்தனையையும் நல்லொழுக்கத்தையும் உட்படுத்தியது. "இந்த வார்த்தை நோக்கத்தை வினயமாக சுட்டிக் காட்டுவதுடன், சுயமரியாதை நடத்தையையும் சுட்டிக் காட்டுகிறது."[12] இந்த மனுஷர்கள் உதவிக்காரர்களின் பணியை வினயமாக எடுத்துக் கொள்பவர்கள்.

*(2) உண்மையுள்ளவர்கள்* (*Sincere*). "உதவிக்காரர்கள் இருநாக்குள்ளவர்களாயிருக்கக் கூடாது" (வசனம் 8அ). "இருநாக்கு" என்பது *dilogos* என்பதிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (*dis* ["இரண்டு விதம்"] கூட்டல் *logos* ["வார்த்தை"]). இது முதல் - நூற்றாண்டு உருவக மொழி. அது ஒரு தனி நபர் ஒருவரிடத்தில் ஒன்றையும் இன்னொருவரிடத்தில் வேறொன்றையும் பேசுதல். நான் வாழுகிற இடத்தில் இதை "இரட்டைமுகம்" என்ற பதத்தைக் குறிப்பிடுவர், TEV எனும் ஆங்கில மொழிபெயர்ப்பு வேதத்தில் உதவிக்காரர் "உண்மையுள்ளவராயிருக்க" வேண்டும் என்று சொல்லப்படுகிறது.

*(3) மதுபான பிரியராயிருக்கக் கூடாது.* உதவிக்காரர்கள் "மதுபான பிரியராயிருக்கக் கூடாது" (வசனம் 8இ) ஞானி எழுதினார், "திராட்சரசம் பரியாசஞ் செய்யும், மதுபானம் அமளிபண்ணும்; அதினால் மயங்குகிற ஒருவனும் ஞானவானல்ல" (நீதிமொழிகள் 20:1; காண்க 23:29-35).

*(4) நேர்மையுள்ளவர்.* உதவிக்காரர்கள் "இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களாயிருக்கக் கூடாது" (வசனம் 8ஈ). "இழிவான ஆதாயம்" என்பது சில (குறுக்கு வழியில்) மறைவான வழியில் பணத்தைச் சம்பாதிப்பது. சிலர் பண ஆசை கொண்டு எப்படி சம்பாதிக்கிறோம் என்ற முறையில்லாமல் பெறுகின்றனர். இது உதவிக்காரர்களுக்கு உகந்தது அல்ல. அவர் தன்னுடைய அனைத்துப் பரிமாற்றங்களிலும் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும்.

*(5) விசுவாசமுள்ளவன்.* வசனம் 9ல் இந்த தகுதியாம்சம் சொல்லப்படுகிறது. "விசுவாசத்தின் இரகசியத்தை சுத்தமனச்சாட்சியிலே காத்துக் கொள்கிறவர்களாயும் இருக்க வேண்டும்." விசுவாசத்தின் "இரகசியம்"[13] என்பது இயேசுவில் வைக்கும் விசுவாசத்தை மையப்படுத்தும் தேவனுடைய வெளிப்பாடு. ஒரு உதவிக்காரன் "சுத்த மனச்சாட்சியுள்ளவராயிருக்க வேண்டும்," ஏனெனில் அவர் அந்த "வெளிப்பாட்டைப் பற்றிக் கொண்டு" அதன்படி வாழ இயன்ற அளவு முயற்சிக்கிறார்.

*(6) செயல் திறன்.* "இந்த மனுஷர்கள் முன்னதாக *சோதிக்கப்பட வேண்டும்;* பிறகு ... உதவிக்காரராக ஊழியஞ்செய்யலாம்" (வசனம் 10அ; வலியுறுத்தல் என்னுடையது). உதவிக்காரராய் ஊழியஞ் செய்ய சோதிக்கப்பட வேண்டிய "சோதனைகள்" என்ன? ஒரு சோதனை என்னவென்றால் அந்த நபர் ஏற்கனவே ஊழியஞ்செய்கிறாரா, இல்லையா. ஏற்கனவே தங்களுடைய தாலந்துகளைப் பயன்படுத்தி எஜமானருக்கு ஊழியஞ்செய்கிறாரா, அவரை இந்த ஊழியத்தை செய்ய நியமியுங்கள். ஒருவரை "வேலை செய்ய வைப்பதற்காக" உதவிக்காரனாக்கவேண்டாம். இரண்டாவது சோதனை, முதலாவதுடன் தொடர்புடையதுதான், அந்த மனிதன் மூப்பர்களோடு இணைந்து பணியாற்ற இயலுமா? ஒரு பொறுப்பை ஏற்றுக் கொண்டு அதை நடப்பாக்கக் கூடிய நபரா அவர்?

*(7) நற்சாட்சி.* வசனம் 10ல் தொடர்ந்து, "குற்றஞ்சாட்டப்

படாதவர்களானால் அவர்கள் உதவிக்காரர்களாக ஊழியஞ் செய்யலாம்'' (வசனம் 10ஆ). "குற்றஞ்சாட்டப்படாதிருத்தல்'' என்பது அவர்கள் பாவமே செய்யாதவர்கள் என்று பொருள் அல்ல (காண்க ரோமர் 3:23). அவர்கள் தங்களுடைய பாவங்களை ஒப்புக்கொண்டு, மனந்திரும்பி, தேவனையும் மற்றவர்களையும் மன்னிக்கும்படி கேட்கக் கூடியவராயிருக்கிறார் என்று பொருள். அவர்கள் தங்களுடைய தவறுகளை காணுகிற அளவுக்கு நேர்மையானவர்களும் எந்தத் தவறையும் சரிசெய்துகொள்ளக்கூடிய அளவுக்கு தன்னால் இயன்ற எல்லாவற்றையும் செய்யும் உண்மையுள்ளவர்களாயுமிருக்கிறார்கள். ஒரு உதவிக்காரர் சபைக்குள்ளேயும் புறம்பேயும் நற்சாட்சி பெற்றவராயிருக்க வேண்டும்.

(8) *நல்ல கணவனாக, தகப்பனாக இருக்க வேண்டும்.* மூப்பர், உதவிக்காரர் ஆகிய இருசாராருக்குமே, பவுல் வலியுறுத்தி நல்ல குடும்பஸ்தனாக இருக்க வேண்டியதைப் பேசினார். வசனம் 11ல் உதவிக்காரர்களின் மனைவிகளைப் பற்றி அப்போஸ்தலன் குறிப்பிடுகிறார்: ''அந்தப்படியே ஸ்திரீகளும் நல்லொழுக்கமுள்ளவர்களும், அவதூறு பண்ணாதவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும் (இச்சையடக்கமுள்ளவர்களும்), எல்லாவற்றிலும் உண்மையுள்ளவர்களுமாயிருக்க வேண்டும்.'' NIV மொழிபெயர்ப்பில், ''அவர்களுடைய மனைவிகள் மதிப்பிற்குரியவர்களாகவும், அவதூறு பண்ணாதவர்களும், ஆனால் தெளிந்த புத்தியுள்ளவர்களும் எல்லாவற்றிலும் நம்பத்தக்கவர்களுமாயிருக்க வேண்டும்'' என்று சொல்லப்படுகிறது. சில பதவிகள் அந்த பதவி சம்பந்தப்பட்ட விஷயத்தில் மனைவியினால் எந்த பாதிப்பு அவனுக்கு ஏற்படாது, ஆனால் உதவிக்காரனாக ஊழியம் செய்கிற விஷயத்தில் அது உண்மையல்ல. ஒரு உதவிக்காரனுடைய மனைவி அவனுக்கு ஆதரவாய் இருக்கக் கூடியவளும், அவளுடைய வாழ்க்கை அவனுக்கு சாதகமான சூழலை ஏற்படுத்தக் கூடியதுமாயிருக்கிறது.

வசனம் 12 உதவிக்காரனுடைய குடும்ப வாழ்க்கையை தொடர்ந்து வலியுறுத்துகிறது: ''உதவிக்காரரானவர்கள் ஒரே மனைவியையுடைய புருஷருமாய், தங்கள் பிள்ளைகளையும் சொந்தக் குடும்பங்களையும் நன்றாய் நடத்துகிறவர்களுமாயிருக்க வேண்டும்.'' ஒரு உதவிக்காரன் திருமணமாகி ஒரே ஒரு மனைவியை உடையவராயிருக்க வேண்டும். மேலும், அவர் தன்னுடைய பிள்ளைகளையும் தன் குடும்பத்தையும் நன்றாய் நடத்துகிறவனாயிருக்க வேண்டும். இந்த அதிகாரத்தில் பவுல் ஏற்கனவே குறிப்பிட்டபடி, "ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?" (வசனம் 5).

**நடபடிகள் 6**

நடபடிகள் 6:3 சொல்லுகிறது. அப்போஸ்தலர்கள் உள்ளூர் சபைக்கு சொன்னார்கள் ''பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள்.'' வசனம் 5ல் தெரிந்து கொள்ளப்பட்ட ஏழு நபர்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் "விசுவாசத்தாலும் பரிசுத்த ஆவியானாலும் நிறைந்த"வராகிய ஸ்தேவான். முதல் உதவிக்காரர்களுக்கு ஒப்பாக ஊழியம் செய்யும்படிக்கு தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் தகுதியாம்சங்களைக் கவனித்தல் நமக்கு

*மதிப்புள்ளதாக இருக்கலாம்.*

*(1) நற்சாட்சி. இது 1 தீமோத்தேயு 3:10ல் சொல்லப்பட்ட தகுதியாம்சத்தை நினைவுபடுத்துகிறது: "குற்றஞ்சாட்டப்படுதலுக்கு அப்பாற்பட்டவர்கள்." இந்த மனிதர்கள் சபைக்குள்ளாக நற்சாட்சி பெற்று இருக்க வேண்டும், ஏனெனில் அவர்கள் சபையாரோடுதான் தங்கள் செயற்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும். அவர்கள் சமுதாயத்திலும் நற்சாட்சி பெற்றிருக்க வேண்டும் ஏனெனில், தங்களுடைய பணிகளைச் செய்ய, கிறிஸ்தவர்களல்லாதவர்களோடும் தொடர்புடையவர்களாயிருக்க வேண்டியுள்ளது. அங்கத்தினரல்லாதவர்களின் கண்களுக்கு இந்த மனிதர்கள் சபையை முன்னிலைப்படுத்துபவர்கள்.*

*(2) ஆவியில் நிறைந்து விசுவாசத்திலும் நிறைந்தவர்கள். அவர்கள் "பரிசுத்த ஆவியிலும்" நிறைந்தவர்களாயிருக்க வேண்டும். இதன் பொருள் "அற்புதவரங்களில் நிறைந்திருப்பது" என்பதல்ல, அப்போஸ்தலர்கள் அவர்கள் மேல் கைகளை வைக்கிற வரைக்கும் அவர்கள் அற்புதவரங்களில் வல்லமைகளைப் பெற்றிருக்கவில்லை என்பது தெளிவு (காண்க நடபடிகள் 5:12; 6:6, 8; 8:5, 6, 14-19). "ஆவியில் நிறைந்து" என்பது ஒருவர் தன்னை ஆவியினால் நடத்தப் படுவதற்கு ஒப்புக் கொடுத்தல்[14] என்பதை சுட்டிக்காட்டுகிறது. ஒருவர் "ஆவியில் நிறைந்திருந்தால்," அவர் "ஆவியின் கனியை" உடையவராயிருக்கிறார்: "அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்" (கலாத்தியர் 5:22, 23; வசனங்கள் 16-18 ஐக் கவனியுங்கள்). இது சம்பந்தமாகவே, ஸ்தேவான் "விசுவாசத்தில் நிறைந்தவனாயிருந்தான்" என்று சொல்லப்படுகிறது. இதை நாம் ஒரே வார்த்தையில் "விசுவாசத்தில் நிறைந்தவன்" (முழு - விசுவாசம்)* faith-full *என சொல்லுகிறோம்.*

*(3) ஞானம். இறுதியாக, அப்போஸ்தலர்கள் சபையாரிடம் "... ஞானமும் நிறைந்தவர்களை" தெரிந்து கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். தேவனுடைய சித்தத்தை அறிகிற அறிவை அடைவதால் மட்டுமே வருகிற ஞானத்தால் அவர்கள் நிறைந்திருக்க வேண்டியவர்கள் (காண்க நீதிமொழிகள் 23:23). கூடுதலாக, அவர்கள் பிரச்சனைகளை அன்றாடம் ஞானத்துடன் கையாளும் திறமை பெற்றிருக்க வேண்டும்.[15] அவர்கள் ஒவ்வொரு காரியத்துக்கும் அப்போஸ்தலரிடத்தில் போக வேண்டிதாயிருந்திருந்தால், அது பிரச்சனையில் தான் கொண்டுபோய் விட்டிருக்கும் இது அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்ட நோக்கத்தை தோல்வியுறச்செய்திருக்கும் (வசனங்கள் 2-4).*

*நடபடிகள் 6ல் குறிப்பிடப்படுகிற தகுதியாம்சங்கள் உதவிக்காரர்களுக்கு குறிப்பிடப்பட்டிருந்தாலும் குறிப்பிடப்படாமலிருந்திருந்தாலும், அவை உதவிக்காரர்களின் பணி குறித்து 1 தீமோத்தேயு 3ல் சொல்லப்படுகிற தகுதிகளோடு தொடர்புடையவைகளே.*

## ... அவர்கள் மூப்பர்களுக்கு உதவுபவர்கள்.

*உதவிக்காரர்கள் என்பவர்கள் குறிப்பிட்ட தகுதியாம்சங்களைப் பெற்று சேவை செய்யும் ஊழியர்கள் என்பதைக் கண்டோம். அடுத்ததாக, அவர்கள் செய்ய வேண்டிய பணிகளை ஆராய்வோம். அவர்களுடைய தலையாய பணி மூப்பர்களுக்கு உதவி செய்வது, அதினால் மூப்பர்கள் தங்களின் மேய்ப்பர் பணியை நன்கு செயலாற்ற முடியும்.* AB *வேதாகமத்தில் பிலிப்பியர் 1:1ன் கடைசி பகுதி பின்வருமாறு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது,*

"... கண்காணிகளுக்கும் [மேற்பார்வை செய்பவர்களுக்கும்] உதவிக்காரர்களுக்கும் [*உதவியாளர்களுக்கும்*]" (வலியுறுத்தல் என்னுடையது).

ஒரு சிறு பையனாக நான் இருந்த போது, அவ்வப்போது யாரோ ஒருவர் சொல்லுவதை கேட்டேன், "உள்ளூர் சபையின் *ஆவிக்குரிய* தேவைகளுக்கு மூப்பர்களே பொறுப்பாளிகள், சபையின் *சரீரத்தேவைகளுக்கு* உதவிக்காரர்கள் தான் பொறுப்பாளிகள்," என்றார். வசனத்தை நான் சரியாக புரிந்து கொண்டிருப்பேனேயானால் மூப்பர்கள்தான் மாம்ச மற்றும் ஆவிக்குரிய தேவைகள் ஆகிய இரண்டிற்குமே பொறுப்பாளிகள் என்று அவைகள் போதிக்கின்றன. அவர்கள் மட்டுமே சபையைக் கண்காணிக்க வேண்டியவர்கள். மூப்பர்கள் தான் எல்லாவற்றையும் செய்யவேண்டியவர்கள் என்பது இதன் பொருள் அல்ல, ஆனால் அவைகள் செய்யப்படுகின்றன என்பதை அவர்கள் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அர்த்தப்படுகின்றன. எல்லாவற்றையும் அவர்களே செய்ய அவர்கள் முயற்சிப்பார்களானால், (1) மற்றவர்கள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தேவனுடைய தாலந்துகளை பயன்படுத்தக்கூடிய சிலாக்கியங்களை இல்லாததாக்கும், மற்றும் (2) அது மூப்பர்களின் அதிகமான நேரத்தை எடுத்துக் கொள்ளும், அதினால் அவர்கள் ஆவிக்குரிய மேய்ப்பர்களாக செயல்பட முடியாது. அதினால்தான் உதவிக்காரர்கள் தேவை. சமீபத்தில் "உதவிக்காரரின் வேலை என்ன?" என்று என்னிடத்தில் கேட்கப் பட்டது. "மூப்பர்கள் சொல்லுவதையெல்லாம் செய்வது" என்று நான் பதில் சொன்னேன். மூப்பர்கள் சபையின் தேவைகளையும் உதவிக்காரரின் திறமைகளையும் பரிசீலிக்க வேண்டும், அதன் பிறகு உதவிக்காரர்களுக்கு வேலையை ஒதுக்கிக் கொடுக்க வேண்டும். நாம் ஏற்கனவே பார்த்தோம், உதவிக்காரர்களுக்கென்று தனிப்பட்ட அதிகாரம் எதுவுமில்லை - ஆனாலும் மூப்பர்கள் உதவிக்காரர்கள் என்ன வேலையைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்யவும் அந்த வேலை செய்யப்படுவதற்கான அதிகாரத்தையும் (ஆகிய இரண்டையுமே) அவர்களுக்கு கொடுக்கலாம்.

இந்த அடிப்படைகோட்பாடு நடபடிகள் 6ல் காணப்படுகிறது. அந்த அதிகாரத்தில் ஏழு மனுஷர்கள் உதவிக்காரர்களுடையது போன்ற - பணியைச் செய்ய தெரிந்தெடுக்கப்பட்டார்கள். பிறகு அப்போஸ்தலர்கள் அவர்களுக்கு பொறுப்புக்களைக் கொடுத்து சபையிலிருந்து விதவைகள் பசியோடு போகவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டார்கள். வசனம் 2 லிருந்து 4ஐ மறுபடியும் படியுங்கள்:

> அப்பொழுது பன்னிருவரும் சீஷர் கூட்டத்தை வரவழைத்து, "நாங்கள் தேவ வசனத்தைப் போதியாமல், பந்தி விசாரணை செய்வது தகுதியல்ல, ஆதலால் சகோதரரே, பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை உங்களில் தெரிந்துகொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம். நாங்களோ ஜெபம் பண்ணுவதிலும் தேவ வசனத்தைப்போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம்" என்றார்கள்.

இந்த வார்த்தைகளை சூழ்நிலைக்கு ஏற்ப இன்றைய உள்ளூர் சபைக்கு, சொல் அமைப்பை மாற்றி வசனங்களை பின்வருமாறு பார்ப்போம்: "அப்பொழுது மூப்பர்கள் உள்ளூர் சபையின் சீஷர் கூட்டத்தை வரவழைத்து,

நாங்கள் பசியுற்றாரை போஷிப்பதும், தேவையுடையோருக்கு துணிமணிகளை கொடுத்து உதவுவதும், அல்லது நாம் கூடிவரும் சபைக் கட்டிடத்தை பராமரிப்பதுமாகிய பணிகளுக்காக எங்கள் கடமையாகிய மேய்ப்பரின் வேலையை செய்யத்தவறுவது தகுதியல்ல. ஆதலால், சகோதரரே, 1 தீமோத்தேயு 3:8-12ல் சொல்லப்பட்ட தகுதியாம்சங்களைக் கொண்டுள்ளவர்களை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம். ஆனால் நாங்களோ ஜெபம் பண்ணுவதிலும், வேத வசனங்களை படிக்கிறதிலும், மந்தையின் தேவைகளை சந்திப்பதிலும் தரித்திருப்போம்'' என்றார்கள்.

நடபடிகள் 6ல் சரியாகப் பகிர்ந்தளிக்கப்பட வேலைகள் இரண்டு வகையான விளைவுகளைக் கொண்டு வந்தன. முதலாவதாக கொடுக்கப்பட்ட வேலை செய்து முடிக்கப்பட்டது. இரண்டாவது விளைவு வசனம் 7ல் காணப்படுகிறது. "தேவ வசனம் விருத்தியடைந்தது; சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று; ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தார்கள்.'' உதவிக்காரர்கள் தங்கள் வேலையைச் செய்யும்போது, மூப்பர்கள் தங்கள் வேலைகளைச் செய்ய முடியும். பிறகு பிரசங்கியாரும் சபையாரும் தங்கள் வேலைகளைச் செய்வார்கள். தேவன் அந்த உள்ளூர் சபையை ஆசீர்வதிப்பார் மற்றும் சபை வளரும்!

## முடிவுரை

உதவிக்காரர்களாய் ஊழியம் செய்வது முக்கியமானது, அது இன்றியமையாத ஒருவேலை. உதவிக்காரர்களுக்கான தகுதியாம்சங்களை பவுல் கொடுத்தபின் 1 தீமோத்தேயு 3ல் அவர் தொடர்ந்து, "இப்படி உதவிக்காரர்களுடைய ஊழியத்தை நன்றாய்ச் செய்கிறவர்கள் தங்களுக்கு நல்ல நிலையையும், கிறிஸ்து இயேசுவைப் பற்றும் மிகுந்த தைரியத்தையும் அடைவார்கள்'' என்றார் (வசனம் 13). NLT மொழிபெயர்ப்பில், "உதவிக்காரர்களுடைய ஊழியத்தை நன்றாய்ச் செய்கிறவர்கள் மற்றவர்களிடமிருந்து மரியாதையையும் இயேசு கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தில் கூடுதலான நம்பிக்கையாலும் வெகுமதியளிக்கப்படுவார்கள்'' என்று கூறப்பட்டுள்ளது.

உதவிக்காரர்கள் சபையில் சிறப்பான பொறுப்புக்களைக் கொண்ட சபையின் சிறப்பான ஊழியர்களாவார்கள் - ஆனால் நாம் எல்லோருமே ஊழியக்காரர்களாயிருக்க வேண்டுமல்லவா? நமது தாலந்துகளைப் பயன்படுத்தி, தேவனுடைய ஊழியத்திலும் மனிதகுலத்துக்கும் சேவை செய்ய, தேவன் தாமே நம் எல்லாருக்கும் உதவி செய்வாராக. இயேசு சொன்னார், "உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியஞ் செய்யக் கடவன்'' (மத்தேயு 23:11).

## குறிப்புகள்

இந்தப் பாடத்தை நான் போதித்துக் கொண்டிருக்கையில், எனது தலைக்கு மேல் பின்பக்கமாக சில வரைபடங்களை பயன்படுத்தியுள்ளேன். இவைகள் ஒரு போஸ்டர்களாகவோ மின் சாதனங்கள் மூலமோ காட்டப்படலாம். சில நிகழ்ச்சிகளில், நான் பாடத்தை புறக்குறிப்பாக எழுதி அச்சிட்டு எல்லா

அங்கத்தினர்களுக்கும் நகல்களைக் கொடுப்பதுண்டு. சில வேளைகளில் இரண்டையுமே செய்திருக்கிறேன்.

## உதவிக்காரர்களின் தகுதியாம்சங்களைப் பற்றிய துணைக் குறிப்புகள்

மூப்பர்களின் தகுதியாம்சங்களைக் குறித்து சொல்லப்பட்டது போல, உதவிக்காரர்களின் தகுதியாம்சங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியே விவரிக்க நான் முற்படவில்லை. என்னுடைய பிரதான நோக்கம் நான் சொல்லுவதைக் கேட்பவர்களின் மனங்களை ஒருமைப்படுத்தி தேவன் கொடுத்த உதவிக்காரர்களின் தகுதிகளைக் காணச்செய்வதுதான். தகுதியாம்சங்களைக் குறித்து கேள்விகள் எழும்பக் கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கிறபடியினால், போதகர்களுக்கும் பிரசங்கியார்களுக்கும் சில குறிப்புக்களை வரிசைபடுத்துகிறேன்.

(1) ''அந்தப்படியே ஸ்திரீகளும் ... எல்லாவற்றிலும் உண்மையுள்ளவர்களுமாயிருக்க வேண்டும்'' (1 தீமோத்தேயு 3:11). சிலர் இதைச் சுட்டிக் காட்டி இங்கே சொல்லப்படுகிற வார்த்தை "ஸ்திரீகள்," என்று சொல்லப்படுகிறதேயொழிய, "மனைவிகள்" என்று சொல்லப்படவில்லை, எனவே இந்த வசனம் பெண்கள் உதவிக்காரர்களாயிருப்பதைப் பற்றி பேசுகிறது என்ற முடிவுக்கு வருகின்றனர். அப்படியானால், உதவிக்காரர்களின் தகுதியாம்சங்கள் குறித்து நாம் நான்கு வசனங்களில் காண்கிறோம் (வசனங்கள் 8-10, 12) "உதவிக்காரியின்" தகுதியாம்சங்களை ஒரு வசனத்தில் மட்டுமே சொல்லப்பட்டுள்ளது (வசனம் 11) - உதவிக்காரர்களின் தகுதியாம்சங்களை சொல்லிக் கொண்டு வரும்போது இடையில் புகுத்தப்பட்டது அது. கிரேக்க வார்த்தையில் "மனைவி" என்பதற்குத் தனிப்பட்ட வார்த்தை எதுவுமில்லை என்பதை மனதில் வைக்க வேண்டும்; கிரேக்க மொழியில் "ஸ்திரீ" (*gune*) எனும் பதமே "மனைவிக்கும் பயன்படுத்தப்படுகிறது." எனவே இந்த சந்தர்ப்பப் பொருளில் பொதுவாக ஸ்திரீகளைக் குறித்து பேசப்படுவதாக எடுத்துக் கொள்ளாமல் மனைவியைக் குறித்து பேசப்படுவதாக எடுத்துக் கொள்வது நலம்.

(2) "உதவிக்காரர்கள் ஒரே ஒரு மனைவியை உடைய புருஷனாக" இருக்க வேண்டும் (வசனம் 12அ). மூப்பர்களுடைய தகுதியாம்சங்களைக் குறித்து நாம் பார்த்தபடி, இது மணமாகாதவர்களையும் பலதார மனைவிகளையுடைவர்களையும் தவிர்க்கின்றது.

(3) "உதவிக்காரர்கள் தங்கள் ... பிள்ளைகளை நன்றாய் நடத்தக் கூடியவர்களாயிருக்க வேண்டும்" (வசனம் 12அ, ஆ). மூப்பர்களின் தகுதி யாம்சங்களைக் குறித்து நாம் விவாதிக்கும்போது, ஒரு மூப்பர் ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகளை கொண்டிருப்பது அவசியமா இல்லையா என்பது பற்றிப் பார்த்தோம். வசனப்பகுதியில் "*தங்கள்* பிள்ளைகளை" என்று குறிப்பிடுவதால் உதவிக்காரர்களுக்கு இந்தக் கேள்வி எழும்ப வேண்டுவதில்லை. இரண்டு உதவிக்காரருக்கு தலா ஒரு பிள்ளையிருந்தாலும், மொத்தமாக இரண்டு *பிள்ளைகள்* என்று எடுத்துக் கொள்ளலாம். மேலும் உதவிக்காரர்களுக்கு

*"விசுவாசமுள்ள பிள்ளைகள்"* இருக்க வேண்டும் என்று எதுவும் குறிப்பிடப்படவில்லை. அநேக எழுத்தாளர்கள் மூப்பர்களின் பிள்ளைகளை விட உதவிக்காரர்களின் பிள்ளைகள் - இன்னும் கிறிஸ்தவனாகிற பிராயத்தை எட்டாதவர்களாக இருக்கலாம் என்கின்றனர்.

---

குறிப்புகள்

[1]"வலதுகரம் போன்ற மனுஷர்கள்" என்பது அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அன்றாடம்பயன்படுத்தும் ஒரு சொற்றொடர். இதன் ஆய்வு விளக்கம் என்னவெனில், ஒரு மனிதன் எப்பொழுதும் ஒருவரை சார்ந்திருப்பது, உதவி செய்ய ஆயத்தமாயிருப்பது. ஒரு "வலது - கரம் போன்ற மனிதன்" மிக முக்கியமான கூட்டாளி. [2]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 147. [3]Ibid., 187. [4]ஓட்டப்பந்தய வீரனுக்கு பயன்படுத்துகிற ஒரு உருவகமொழி இது. உதவிக்காரர் "வேகமாய் ஓடியாடி செயல்படுவதைக் குறிப்பிடுகிறது ... தனது துரித வேலையைச் செய்கிற போது தூசியைத் தட்டிவிட்டுப் போகிறார்" (J. Dwight Pentecost, *The Joy of Living: A Study of Philippians* [Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1973], 113-14). [5]Geoffrey W. Bromiley, *Theological Dictionary of the New Testament,* ed. Gerhard Kittel and Gerhard Friedrich, trans. Geoffrey W. Bromiley, abr. (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 152. [6]"மூப்பர்" எனும் பதம் "முதியவர்" என்று அர்த்தப்படுகிறது, ஆனால் புதிய ஏற்பாட்டில் சிலவேளைகளில் மூப்பர்களின் "பணியை" குறிப்பதற்கென விசேஷ விதமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. [7]இந்தப் பொதுவான கருத்தில் பெபேயாள் சபையில் ஒரு *diakonos* ஆக இருந்தாள் (ரோமர் 16:1). [8]சிலர் உதவிக்காரர்களின் பணியை ஊழிய வரங்களுடன் சம்பந்தப்படுத்துகின்றனர் (ரோமர் 12:6, 7; 1 பேதுரு 4:10, 11). அப்போஸ்தலர்களின் கைகளை வைப்பதன் மூலம் ஒருவேளை இயல்புக்கு மேலான செயல்பாடுகளை செய்ய முடிந்தது. [9]அதாவது, அவர் வார்த்தையின் விசேஷித்த பொருளில் உதவிக்காரராகிறார். [10]"அந்தப்படி" எனும் பதம் மூப்பர்களின் தகுதியாம்சங்களை திருப்பிப் பார்க்கச் செய்கிறது.

[11]மூப்பர்களில்லாமல் "உதவிக்காரர்களின் பணி" இருக்கலாமா கூடாதா என்று கேள்விகள் எழும்புவதுண்டு. நடபடிகள் 6ம் அதிகார நிகழ்ச்சியின் போது, எருசலேம் சபையின் இன்னும் மூப்பர் ஏற்படுத்தப்படவில்லை. [12]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 278-79. Vine cited H. C. G. Moule, *The Epistle of Paul the Apostle to the Philippians*, Cambridge Greek Testament for Schools and Colleges (Cambridge: Cambridge University Press, 1897), 82. [13]புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளபடி, "இரகசியம்" என்பது பழைய ஏற்பாட்டில் இரகசியமாக இருந்தது, ஆகிலும் தேவனுடைய ஏவப்பட்ட மனுஷர்களால் வெளிப்படுத்தப்பட்டது. [14]ஆவியானவர் நம்மை வழிநடத்துகிற ஒரே வழி அவர் ஏவின வசனத்தின் மூலமே (காண்க 2 பேதுரு 1:21; எபேசியர் 6:17; காண்க சங்கீதம் 119:105). [15]அவர்கள் திறமை ரீதியில் எழுந்த பிரச்சனை சபையில் எழும்பியதால் அவர்கள் ஏற்படுத்தப்பட்டார்கள் (நடபடிகள் 6:1). சூழ்நிலை சரியானபடி கையாளப்படாவிடில், ஏற்படுத்தப்பட்ட கடுமையான காரியம் பேராபத்தை விளைவித்திருக்கக் கூடும்.

*8*

# உதவிக்காரர் நியமன ஆராதனை: "என்னை ஒரு ஊழியக்காரனாக்குங்கள்"

*நான் ஒரு உதவிக்காரர் நியமன ஆராதனையை நடத்தினபோது மூப்பர்களுக்கான நியமன ஆராதனையைப் போலவே ஏற்கனவே சொல்லப்பட்டுள்ள ஒழுங்கு முறையில் நடத்தினேன். வாசிக்கப்பட்ட வசனங்கள். சொல்லப்பட்ட குறிப்புரைகள் உதவிக்காரர்களின் பணியைப் பொருந்தப்பண்ணின. தொடர்ந்து வரும் பக்கங்களிலுள்ள உதவிக்காரர் நியமன ஒழுங்கு ஆராதனைப் படிவத்தில் சொல்லப்பட்டுள்ளவை, சில அதே வடிவத்தில் அமைந்திருந்தாலும், அநேக வழிகளில் அது வித்தியாசப் பட்டது. முதலாவதாக, ஆராதனை ஒழுங்கு ஒரு தனித்தாளில் அச்சிடப்பட்டு கலந்துகொண்ட யாவருக்கும் வினியோகிக்கப் பட்டது. இதன் மூலம் என்ன நிகழ்ச்சி நடக்கிறது என்பதை வரிசைப்படி சபையார் பின் தொடரவும் மத்தேயு 20:25-28ஐ எல்லோரும் ஒரே மொழிபெயர்ப்பு வசனங்களை ஒன்று சேர்ந்து வாசிக்கவும் ஏதுவாக்கியது. இதில் நமது பாட்டுப் புத்தகத்தில் இல்லாத "ஊழியனுக்கான பாடலின்" வசனங்களும் இடம் பெற்றிருந்தது. இரண்டாவது வித்தியாசம் என்னவெனில் அந்தக் கருத்தை ஒட்டிய ஒரு சிறிய பிரசங்கத்தைச் செய்யவும் நேரம் ஒதுக்கப்பட்டது.*

## குறிப்புகள்

*மூப்பர்களில்லாமல் (அதிகார ரீதியாக) ஒரு சபை உதவிக்காரரை கொண்டிருக்க முடியாது என்பதை பெரும்பாலானோர் ஏற்றுக் கொள்கின்றனர். உதவிக்காரர்களை நியமிக்கிற வேளையில் மூப்பர்கள் இருப்பார்கள் என்ற யூகத்தில் அந்த சபையில் மூப்பர்களே முதன்மையாக நின்று ஒழுங்கு முறைப்படிவத்தில் கண்டுள்ள ஆராதனையை நடத்த வேண்டும்.*

*ஆராதனையில், அறிமுக குறிப்புரைகளை நான் வழங்கினேன், பிரசங்கம் செய்தேன், அழைப்புக் கொடுத்தேன், மற்றும் பொதுவாக ஆராதனை மிகவும் மிருதுவாக "நீங்கள் என்னவாக இருக்க விரும்புகிறீர்கள்" என்ற சுருக்கச் செய்தி இந்தப் புத்தகத்திலேயே முழுமையாக கொடுக்கப்பட்டுள்ளது.*

*நீங்கள் "ஊழியக்காரன் பாடலை" பயன்படுத்தலாம். பாடல் (ராகம்) உங்களுக்குத் தெரியாவிட்டால், அதிலுள்ள வார்த்தைகளை நீங்கள் சத்தமாக வாசிக்கலாம் அல்லது உள்ளூர் சபையார்கள் ஒன்றாக சேர்ந்து வாசிக்கலாம். உணர்ச்சிமிகு நேரம் நகர்ந்து கொண்டிருக்கிறது.*

*உதவிக்காரர்கள் அறிமுகப் படுத்தப்படும்போது சபையில் அவர்களுடைய*

*கடமை என்ன என்பதை (அவர்களுடைய பொறுப்புகள் ஒவ்வொருக்கும் என்ன என்பதை) குறிப்பிடுவது சிறப்பான கருத்தாக இருக்கும். மூப்பர்கள் இதை சிறப்பாக நியமன ஆராதனைக்கு முன்பே ஒழுங்குபடுத்தி ஒவ்வொரு உதவிக்காரனுக்கும் மூப்பர்கள் பணிக்கும்படி மனதில் கொண்டுள்ள வேலைகளை நிறைவேற்ற மனதுள்ளவர்களாகவும் திறமையுள்ளவர்களாகவும் இருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று ஒரு வழியும் தெரியாமலிருக்கிற உதவிக்காரர்களைக் காட்டிலும் நேர்மறையாய் செயல்படுத்த வேண்டிய உள்ளூர் சபைக்கு கெடுதியானது ஒன்றும் இருக்காது. ஒவ்வொரு உதவிக்காரனுடைய உத்தியோகமும் என்னவாக இருக்கும் என்று உள்ளூர் சபையாருக்குத் தெளிவுபடுத்துவதில் இன்னொரு பயனும் இருக்கும். அவர்களுக்கு ஒரு கேள்வி இருக்கும் போது, உடனடியாக மூப்பரிடம் எதற்குகெடுத்தாலும் செல்வதற்கு பதிலாக முதலில் ஒரு உதவிக்காரனிடம் செல்ல ஊக்கப்படுத்தும். உள்ளூர் சபை சிறியதாயிருக்குமேயாகில், ஒவ்வொரு நியமன உதவிக்காரருக்கும் வாய்மொழியாக செய்ய வேண்டியவைகளைச் சொல்லலாம். அநேக உதவிக்காரர்கள் நியமிக்கப் பட்டிருப்பார்களேயாகில் பொறுப்புக்களும் ஞாபகத்தில் வைக்க ஏராளமாக இருக்கக் கூடும், எனவே ஒவ்வொரு உதவிக்காரருடைய பெயர்களையும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளையும் அச்சிட்டு அந்த வரிசைபட்டியலை ஆராதனை முறைமையுடன் விநியோகித்து விடலாம்.*

*எங்கள் மூப்பர்களில் ஒருவர் ''மூப்பர்களிடமிருந்து பணியை ஒப்புக் கொடுத்தலை'' வழங்கினார். மற்றும் ''உதவிக்காரர்களிடமிருந்து மறுமொழி''யைக் கொடுக்க ஒருவர் தெர்ந்தெடுத்து நியமிக்கப்பட்டிருந்தார்.*

*இந்த ஆராதனைக்கு என்னுடைய அழைப்பு ரோமர் 6:3-6, 17, 18 ஐ அடிப்படையாகக் கொண்டிருந்தது. நாம் ஞானஸ்நானம் பண்ணப்படும்போது தேவனுடைய ஊழியக்காரர்களாகிறோம் என்று இந்த வசனப் பகுதி போதிக்கிறது. ஞானஸ்நானம் பண்ணப்படாத அனைவருக்கும் அவர்கள் தேவனுக்கும் மனுஷருக்கும் ஊழியர்களாக இருக்கும்படி முழுக்கப்பட உற்சாகப்படுத்தினேன்.*

*என்னுடைய பிரசங்கத்துக்கு எட்டு நிமிடம் ஆனது. மூப்பர்களின் (உதவிக்காரருக்கான) கொடுக்கப்பட்ட கடமைகளை வாசிக்க எட்டு நிமிடம் ஆயிற்று. துவக்கத்திலிருந்து முடிவுரை ஒரு மணி நேரமும் பதினைந்து நிமிடங்களாயின.*[1]

---

*குறிப்பு*

[1]*பாரம்பரிய, ''ஊழியக்காரன் பாடல்,'' விசுவாச ஸ்தோத்திரப் பாடல்கள் தொகுத்து பதிப்பு செய்தவர் ஆல்டன் ஹோவார்ட் (மேற்கு மோன்ரே, லாஸ் ஏஞ்சலஸ்:, ஹோவார்ட் வெளியீட்டுக் குழுமம், 1994).*

9

# "நீங்கள் என்னவாயிருக்க விரும்புகிறீர்கள்"

## (மத்தேயு 20:20-28)

*இது புதிய உதவிக்காரர்களை நியமிக்கிற ஆராதனையில் நான் பயன்படுத்திய ஒரு குறுகிய பிரசங்கம். பிரசங்கத்துக்கு முன் மத்தேயுவில் உள்ள இந்த வசனப்பகுதியை சபையாரால் (அல்லது சபைக்கு) வாசிக்கப் பட வேண்டியது.*

*நீங்கள் வளரும்போது என்னவாக இருக்க விருப்பப்படுகிறீர்கள்?* இந்தக் கேள்வியை நாம் குழந்தைகளிடம் கேட்போம்.[1] நாம் சிறுபிள்ளைகளாயிருந்தபோது, நம்மில் அநேகம் பேர் இந்தக் கேள்வி கேட்கப் பட்டவர்கள். நான் சிறுபிள்ளையாயிருந்தபோது, "நான் மருத்துவராகப் போகிறேன்" என்று பதில் சொல்லியிருக்கிறேன். நான் உயர்நிலைப் பள்ளியில் முதுநிலை வருடத்தை அடைந்து நான் பிரசங்கியாராகப் போகிறேன் என்று முடிவு செய்யும் வரை அப்படித் தான் சொல்லிக் கொண்டிருந்தேன்.

இன்றைக்கு ஆவிக்குரிய கோணத்தில் இருந்து அந்தக் கேள்வியைக் கேட்கிறேன். நீங்கள் *ஆவிக்குரிய முறையில்* வளரும்போது என்ன செய்வீர்கள்? "தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக" என்று வசனம் அறைகூவல் விடுக்கிறது (எபேசியர் 4:15). நாம் மேலும் மேலும் கிறிஸ்துவைப் போலிருக்க வேண்டியவர்கள். அவரது கம்பீரமிக்க குணாதிசயங்கள் யாவை? மத்தேயு 20:20-28ல் இயேசு தம்மை ஒரு *ஊழியக்காரன்* என்று இயேசு சொன்னார்.

"கிறிஸ்துவுக்குள் நீங்கள் வளரும்போது என்னவாயிருக்கவிரும்புகிறீர்கள்?" என்ற கேள்விக்குப் பதிலாக, "நான் ஒரு மூப்பராகவோ உதவிக்காரராகவோ பணியாற்ற விரும்புகிறேன் ... அல்லது ஒரு மூப்பருக்கு அல்லது உதவிக்காரருக்கு விசுவாசமுள்ள மனைவியாக ... அல்லது வேதாகம ஆசிரியராக ... அல்லது ஒரு பிரசங்கியாராக ... சுவிசேஷகராக அல்லது பிரசங்கியார் அல்லது சுவிசேஷகரின் மனைவியாக இருக்க விரும்புகிறேன்" என்று நீங்கள் நினைக்கலாம். இவைகள் அனைத்துமே நல்லதுதான்; இவைகள் போல ஒவ்வொருவருக்கும் குறிக்கோள்கள் இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன். இருப்பினும் தேவன் நம்மை நமது திறமைக்கேற்ப பயன்படுத்த ஏதுவாக, முதலாவதும் மிகமுக்கியமானதுமாக, நாம் *ஊழியர்களாயிருக்க* வேண்டும், என்பதை நான் ஆலோசனையாகச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றும் நாம் உதவிக்காரர்களை ஸ்தாபிக்கிறோம். நாம் உதவிக்காரர்களின் பணிகுறித்த சிறப்புக்கூறுகளை விவரிக்க சில நிமிடங்கள் எடுத்துக் கொள்கிறோம்,

ஆனால் உதவிக்காரனாயிருப்பது என்பது மகிமைக்குரிய காரியமல்ல, கனமோ, ஏற்புடையதாகவோ இராது. அது வேலையையும் பிரயாசத்தையும் பற்றியது தான் - பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவோ, பாராட்டுதலுக்குரிய வேலையாகவோ இது இராது, மற்றும் சில வேளைகளில் குற்றப்படுத்தப்படும் பிரயாசமாயிருக்கும் - ஏனெனில் அது ஒரு *ஊழியக்காரனின்* வேலையின் விவரிப்பின் ஒரு பகுதியாயிருக்கிறது.

## ஓர் உலகளாவிய அறைகூவல்

கிரேக்க வார்த்தையான diakonos என்பதன் மொழியாக்கமே "உதவிக்காரன்" எனும் பதம். கிரேக்க வார்த்தையின் எளிய அர்த்தம் "ஊழியக்காரன்": மற்றவர்களுக்காக பணிபுரிவன், மற்றவர்களுக்கு பொறுப்பாளியானவன். அடிப்படையில், இந்த மனுஷர்கள் குறிப்பிடப்பட்ட வேலை கொடுக்கப்பட்டு மூப்பர்கள் அவைகளைச் செய்யும்படி இவர்களுக்குச் சொல்லி அவைகளைச் செயல்படுத்தும்போது அவர்கள் தாங்களாக மந்தையை மேய்ப்பதில் கவனம் செலுத்துவார்கள். நீங்கள், ஒரு சபையாராய் (எண்ணிக்கை) மனுஷர்களை உதவிக்காரர்களாய் இருக்கும்படி தெரிந்தெடுத்துள்ளீர்கள். இந்த (எண்ணிக்கை) கிறிஸ்தவ மனிதர்கள், (எண்ணிக்கை) கிறிஸ்தவ கணவன்மார்கள், மற்றும் தகப்பன்மார்கள், தாலந்துகளாலும், திறமைகளாலும் அலங்கரிக்கப் பட்டவர்களாய் இருக்கிறார்கள். நீங்கள் இந்த மனுஷர்களை *ஊழியம் செய்யும்படி* தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள் - ஏனெனில் "உதவிக்காரன்" என்ற வார்த்தையின் பொருள் அதுதான்.

இருப்பினும், ஊழியஞ்செய்யும் தேவை உதவிக்காரர்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டதல்ல. ரோமர் 6ல் பவுல் ஞானஸ்நானம் பண்ணப்பட்டபோது நாம் மனப்பூர்வமாய் கீழ்ப்படிதலைக் குறித்து பேசினார் (வசனம் 17; காண்க வசனங்கள் 3, 4). பிறகு அவர் வசனம் 18ல், "பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள்" என்றார். வசனம் 22 "நாம் தேவனுக்கு அடிமைகளானோம்" என்று சொல்லுகிறது. KJV "நீங்கள் நீதிக்கு ஊழியக்காரரானீர்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றும் தொடர்ந்து நாம் "தேவனுக்கு *ஊழியக்காரரானோம்*" என்று குறிப்பிடுகிறது (வலியுறுத்தல் என்னுடையது). மற்றொரு நிருபத்தில், பவுல் அறைகூவலாக: "... அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியம் செய்யுங்கள்" (கலாத்தியர் 5:13) என்றார்.

தேவனுக்கு ஊழியம் செய்யுங்கள்; ஒருவருக்கொருவர் ஊழியஞ் செய்யுங்கள். அதுதான் கிறிஸ்தவம் என்பதெல்லாமே. நாம் மூப்பர்களாகவோ உதவிக்காரர்களாகவோ ஊழியம் செய்கிறோமோ இல்லையோ, நாம் ஊழியக்காரர்களாய் இருப்பது மிகவும் அத்தியாவசியமானது. நம்மில் ஒவ்வொருவரும் ஊழியம் நிறைந்த வாழ்க்கையை வாழ நாம் தீர்மானிக்க வேண்டும், தேவன் கொடுத்த திறமைகளைப் பயன்படுத்தி அவருக்கும் மற்றவர்களுக்கும் நாம் ஊழியம் செய்ய வேண்டும்.

## ஒரு சிந்தனையைத் தூண்டும் நிகழ்ச்சி

மத்தேயு 20:20-28ல் இயேசு தமது சீஷர்களுக்கு ஊழிய எண்ணத்தை போதிக்க முயற்சித்துக் கொண்டிருந்தார். அப்போதுதான் எருசலேமிலே தமக்கு என்ன

சம்பவிக்கும் என்பதைச் சொல்லியிருந்தார்: அவர் சீக்கிரத்தில் *மரிக்கப்போகிறார்* (வசனங்கள் 17-19). பிறகு சலோமி வந்தாள் (காண்க மாற்கு 15:40). அவள் செபதேயுவின் மனைவியும், யாக்கோபுக்கும் யோவானுக்கும் தாயுமானவள். இயேசு ஒரு சிலுவையைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார், ஆனால் அவளோ *கிரீடத்தைப்* பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தாள், அவர் *பொறுப்புக்களைப்* பற்றி பேசிக் கொண்டிருந்தார், அவளோ *பிரதிபலனைப்* பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தாள் அவர் வேதனையைப் பற்றி பேசிக் கொண்டிருந்தார், ஆனால் அவள் பதவியைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

அதன் விளைவாகத்தான் அவள் சொன்னாள், ''உம்முடைய இராஜ்யத்திலே என் இரண்டு குமாரர்களையும் மிகவும் முக்கியமான ஸ்தானத்தில் வைக்க வேண்டும் - ஒருவன் உமது வலது பாரிசத்திலும் ஒருவன் உமது இடது பாரிசத்திலும் அதாவது உமது சிங்காசனத்துக்கு அடுத்த இடத்தில் உட்கார்ந்திருக்கும்படி அருள் செய்ய வேண்டும்'' என்றாள். இயேசு தமது தலையை ஆட்டி இப்படிச் சொன்னார் என்று கற்பனை செய்து பார்க்கிறேன். அவர் சொன்னார், "நீங்கள் கேட்டுக் கொள்வது இன்னதென்று உங்களுக்குத் தெரியவில்லை" என்றார் (வசனம் 22அ). அவள் ராஜ்யத்தின் தன்மையைப் புரிந்துகொள்ளவில்லை - அது ஆவிக்குரியது, சரீரப் பிரகாரமானதல்ல என்பதை அவள் புரிந்து கொள்ளவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக, கர்த்தருடைய ராஜ்யம் ஊழியம் கொள்ளுகிற காரியமல்ல, ஊழியம் செய்கிற இடம் என்பதை அவள் புரிந்து கொள்ளவில்லை.

இயேசு யாக்கோபையும் யோவானையும் பார்த்துக் கேட்டார், "நான் பானம்பண்ணப்போகிற பாத்திரத்தில் நீங்கள் பானம்பண்ணக் கூடுமா?" (வசனம் 22ஆ). வசனம் 17லிருந்து 19 வரை குறிப்பிட்ட பாடுகள் அவர் சிந்தையில் இருந்தது, ஆனால் அவர் ஏதோ கடினமான ஒருவேலையைப் பற்றி பேசிக் கொண்டிருப்பதாக நினைத்தார்கள், அதாவது அவர் தமது சரீரப் பிரகாரமான சிங்காசனத்தில் அமருவதற்கு முன் தமது சத்துருக்களை தோல்வியுறச் செய்வார் போன்ற எண்ணமுடையவர்களானார்கள். அவர்கள் தைரியத்தில் குறைவு பட்டிருக்கவில்லை, ஆதலால் அவர்கள் வழுவலான சொல்லில் பதில் அளித்து, ''கூடும்'' என்றார்கள் (வசனம் 22இ). அவர்களுடைய தாயைப்போலவே அவர்கள் என்ன சொல்லுகிறோம் என்று தெரியாமலேயே பேசினார்கள்.

இயேசு தமது தலையை அசைத்து "என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள்" என்று சொல்லுவதை கற்பனையில் பார்க்கிறேன் (வசனம் 23அ). அவர் எதிர்காலத்தை பார்க்க முடிந்தது. யாக்கோபுதான் தமது இரத்தசாட்சியாக மரிக்கவிருந்த முதல் அப்போஸ்தலன் என்பது அவருக்குத் தெரியும் (நடபடிகள் 12:2). யோவான் பாடுபட்டு பத்மு தீவிலே சிறைவைக்கப்படுவார் என்பது அவருக்குத் தெரியும் (வெளிப்படுத்தின விசேஷம் 1:5). இயேசு தொடர்ந்து, "என் இடது பக்கத்திலும் என் வலது பக்கத்திலும் உட்கார்ந்திருக்கும்படி செய்வது என் காரியமல்ல" (மத்தேயு 20:23ஆ) என்றார். பின்னதாக கிறிஸ்து, தேவனுடைய அமைப்பில், (வசனம் 23 இ) பரலோகப் பதவி பெறும் கனமெல்லாம் அவருக்கு *ஊழியஞ்* செய்பவர்களுக்கே வைக்கப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிடுகிறார்.

வசனம் 24 சொல்லுகிறது, மற்ற அப்போஸ்தலர்கள் யாக்கோபும் யோவானும் வேண்டிக்கொண்டதை கேட்டபொழுது, அவர்கள் ''அந்த இரண்டு சகோதரர் பேரிலும் எரிச்சல் அடைந்தார்கள்.'' அந்த பத்து பேரும்

எரிச்சல் அடையக் காரணம் யாக்கோபும் யோவானும் தங்களுடைய எதிர்கால ஆசையைச் சொன்னதினால் அல்ல, மாறாக அவர்கள் இருவரும் தங்களுக்கு முந்திக் கொண்டனர் என்பதால்தான். அவர்களுக்கு அது மகிழ்ச்சியின்மையைக் கொடுத்தது, ஏனெனில் அதை அவர்கள் முன்னதாக நினைக்கவில்லை என்பதால்தான்.

இயேசு பன்னிருவரையும் தம்மைச் சுற்றிலும் கூட்டி தம்முடைய இராஜ்யம் என்பது என்ன என்பதை மற்றொருமுறை - மனுஷருடைய இருதயத்தில் அவர் ஆளுகை செய்வதையும் - உண்மையில் உள்ளடக்குகிறது என்பதை - விளக்க முயற்சித்தார். அதன் பிரதிபலிப்பாக, இயேசு சொன்னார், "உலகத்தின் ஆட்சியாளர்களைப் பற்றி உங்களுக்குத் தெரியும். அதிகாரம், பதவி கௌரவம் ஆகியவைகள்தான் அவர்களுக்கு முக்கியம்" (வசனம் 25). அப்போஸ்தலர்கள் தங்கள் தலைகளை அசைத்திருப்பார்கள். உலகத்தைப் பொறுத்தமட்டில், மிகுந்த அதிகாரத்தைப் பிரயோகிப்பவர்கள்தான் பெரியவர்கள் என்பதை பார்வையிலேயே கண்டு பிடித்து விடலாம் என்பது, அவர்களுக்குத் தெரியும்.

இயேசு தொடர்ந்து, "உங்களுக்குள்ளே இப்படியிருக்கலாகாது" என்றார் (வசனம் 26அ). தமது இராஜ்யம் உலகத்து இராஜ்யத்தைப் போன்றது அல்ல என்பதை தமது சீஷர்கள் அறிய வேண்டும் என்று அவர் விரும்பினார். அவர்கள் ஏதோ புதிரைப் போல் பார்த்திருப்பார்கள். இயேசுவின் ராஜ்யத்தில் யார் பெரியவனாக *இருப்பான்?* அவர் "உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு பணிவிடைக்காரனாயிருக்கக் கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக் கடவன்" (வசனங்கள் 26ஆ, 27), தமது ராஜ்யத்தில், *கீழ்நோக்கிச்* செல்லுவதே *மேல் நோக்கிச்* செல்லும் பாதை என்பதை தம்மைப் பின்பற்றுவோர் புரிந்துகொள்ள வேண்டுமென்று விரும்பினார். ஒரு ஊழியனாக இருக்கக் கற்றுக்கொள்ளுங்கள்; ஒரு அடிமையாயிருக்கக் கற்றுக்கொள்ளுங்கள். உங்கள் உரிமைகளைப்பற்றி கவலைப்படாதிருங்கள். யாருக்கு மதிப்புக் கிடைக்கிறது என்பதைக் குறித்து கவலைப்படாதீர்கள். ஊழியம் செய்ய பிரயாசப்படுங்கள்.

இயேசு தாம் எந்த ஊழியத்தையும் செய்யாமல் மற்றவர்களை ஊழியஞ் செய்யச் சொன்னாரா? நிச்சயமாக இல்லை. அவர் தொடர்ந்து தமது சீஷர்களிடத்தில் பேசும்போது, எருசலேமில் தமக்கு வரவிருக்கிற மரணத்தின் மையத்தில் ஊழியம் என்பது இருக்கிறது என்பதை வலியுறுத்தினார்: "அப்படியே மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" (வசனம் 28). தேவனுடைய குமாரனாய், தெய்வமாய், எல்லாவற்றிற்கும் சிருஷ்டிகருமாய் (யோவான் 1:1-3), இருக்கிற அவர் ஊழியம் கொள்வதற்கு உரிமை பெற்றிருக்கிறார். ஆயினும், அவர் அந்த உரிமையை விட்டுக் கொடுத்தார் (காண்க பிலிப்பியர் 2:6-8). அவர் ஊழியம் செய்ய வந்தார் மற்றும் முற்றிலும் மிகப்பெரிய ஊழியத்தை நடப்பிக்க வந்தார் - சிலுவையிலே மரித்து பாவத்தினால் அடிமைப்பட்டிருக்கிற எல்லாருக்காகவும் தம்மை மீட்கும் பொருளாக ஒப்புக்கொடுத்தார்.

## முடிவுரை

இங்கே முன்பாக அமர்ந்திருக்கிற இந்த (எண்ணிக்கை) மனிதர்கள் விசேஷித்த ஊழியத்திற்கென்று ஒப்புக்கொடுத்திருக்கிற இந்த நாளிலே தேவன் தாமே அவர்களை ஆசீர்வதிப்பாராக. மேலும் எல்லாருக்கும் பிரதான ஊழியர் இயேசுவைப்போல் ஒவ்வொரு நாளும் வளரும்படி பிரயாசப்படுகிற நம்மில் ஒவ்வொருவரோடும் இருப்பாராக.

---

குறிப்பு

[1] அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள பிள்ளைகளிடத்தில் இந்தக் கேள்வியைத்தான் கேட்கிறோம். சில சமுதாயங்களில் பிள்ளைகள் தங்கள் சொந்த வேலைகளைத் தெரிவுசெய்ய சுதந்தரம் இல்லை. தேவைப்படுகிற இடத்தில் இதைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

# 10

# தலைமைத்துவத்துக்கான "படிகள்"

ஹங்கேரியிலுள்ள ஸோல்னோக் எனுமிடத்தில், ஆறு ஆண்டுகாலம், சுவிசேஷகனாக ஊழியத்தை நான் செய்தபின், எனது நல்ல நண்பரும் உள்ளூர் சபையின் முன்னோடியுமாகிய, குயிலா சுயுடோவிடத்தில், எனது குடும்பத்தை அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு கூட்டிப்போக திட்டமிட்டிருப்பதாகக் குறிப்பிட்டேன். இந்தச் செய்தி எங்கள் இருவருக்குமே கண்ணீரை வரவழைத்தது, ஆனால் இன்னொருவர் அதே அறையில் வேறொரு காரணத்துக்காக அழுது கொண்டிருந்தார். எனது ஒரு - வயது மகள் நடக்கக் கற்றுக் கொண்டிருந்தாள், ஆனால் அவளாக அடியெடுத்து வைக்க பயப்பட்டாள். அழுகையினூடே உணர்ச்சி வசப்பட்டவளாய், எனது மகள் தன் அழுகையை மறந்தாள், எழுந்து நின்றாள், அந்த அறையை நடந்து கடந்து சென்றாள். அங்கே நான், அவளுடைய முதல் காலெடுத்து வைப்பதில் ஏற்பட்ட அனுபவத்தால் சந்தோஷப்பட்டேன், அதே வேளையில் ஸோல்னோக்கில் இருந்த சபைக்கு ஒரு எதிர்கால தலைவரை ஆறுதல்படுத்திக் கொண்டும் இருந்தேன்.

"நீங்கள் அதைப் பார்த்தீர்களா?" என்று குயிலாவிடம் கேட்டேன். அவர் சொன்னார், "ஆம்." பிறகு நான் கேட்டேன், "அதன் பொருள் என்னவென்று உங்களுக்குத் தெரிகிறதா?" குயிலா சொன்னார், "நான் எனது முதல் அடியை எடுத்துவைத்து, நடக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்."

தலைமைப் பொறுப்புக்குள் போவது என்பது நடக்கக் கற்றுக் கொள்வது போன்ற மிக முக்கியமானது. ஒரு குழந்தை நடக்கத்தடுமாறும்போது நிற்கவும், அடியெடுத்து வைக்கவும், கடைசியில் நடக்கவும் பயிற்சி எடுத்துக் கொள்கிறது. அதே போல, சபையின் வரும்காலத் தலைவர்கள் அவர்களுடைய தலைமைத்துவப் பொறுப்புகளுக்கு பயிற்றுவிக்கப் படவேண்டும்.

*எப்படி நிற்க வேண்டுமென கற்றுக் கொள்ளல்.* சில வேளைகளில் சுவிசேஷகர்கள் மிக விரைவில் மிக அதிகமான பொறுப்புகளை கொடுக்கிற தவறுகளைச் செய்கின்றனர். தனது வாழ்நாள் முழுவதும் சபை ஆராதனையில் கலந்து கொண்டுள்ள ஒரு கிறிஸ்தவன் வருடக் கணக்காக "பயிற்சிவிக்கப்படுதலில்" செலவிட்டிருக்கிறான். எந்த வித மனரீதியான பிரயாசமில்லாமலேயே முறைசார்ந்த மற்றும் முறைசாராத பயிற்சியாக எப்படி ஜெபிப்பது, பாடலில் நடத்துவது, பிரசங்கிப்பது போன்ற பயிற்ச்சியை நாம் பெற்றுக் கொள்கிறோம். எதிர்கால தலைமைத்துவம் ஏற்கும் தகுதியுள்ள நபர்கள் கிறிஸ்தவத்திற்கு மனமாற்றப்படும்போது, சுவிசேஷகர்கள் ஆராதனையின் பலபகுதிகளையும் எப்படி நடத்துவது என்பது குறிப்பது பொறுமையாகப் போதிக்க வேண்டும். வருங்காலத் தலைவர்களோடு ஆராதனை குறித்து போதிப்பதோடு, கூடுதலாக தேவன் தம்முடைய சபையை வழிநடத்த ஒருவரை உபயோகிக்கும்போது,

வாழ்க்கையில் என்ன மாறுதல் நடக்கிறது என்பதைப்பற்றி சுவிசேஷகர்கள் அவர்களுடன் ஒருவருக்கு ஒருவர் என்ற நேர்முக சம்பாஷனையில் செலவிட வேண்டும்.

*அடிஎடுத்து வைப்பது எப்படி என்பதைக் கற்றுக் கொள்ளுதல்.* எதிர்கால தலைமைத்துவத்தை ஏற்பவர்கள் உள்ளூர் சபையை எப்படி நடத்த வேண்டும் என்பதில் ஒருமுறை நேரத்தை செலவிட்டு கற்றுக் கொண்ட பிறகு அவர்கள் தங்கள் புதியத் திறமைகளை வளர்த்துக் கொள்ள சந்தர்ப்பம் கொடுக்கப்பட வேண்டும். தலைமைத்துவப் பயிற்சியில் இது கடினமானது, ஏனெனில் பக்குவப்படுத்தப்பட்ட தலைவர்களுக்குக் குறுக்கிடும் சோதனை அதிகமானதாக இருக்கும். ஒரு குழந்தை நன்கு நடக்க ஏதுவான நுட்பங்களை போராடி வெற்றி கொள்ளும் வரை அடிஎடுத்து வைக்கவும் கீழே விழுவதுமாக இருப்பதுபோல, வருங்கால சபைத் தலைவர் சபையாருக்கு முன்பாக நிற்கும் போது வரும் சந்தோஷங்களையும் பயங்களையும் அனுபவித்தே ஆக வேண்டும். அவர் தனிப்பட்ட ரீதியான கஷ்டங்களையும் சவால்களையும் வேதாகமரீதியான பதில்களுடன் எப்படி சகித்துக் கொள்ள வேண்டும் என்பதையும் அவர் கற்றுக் கொள்ள வேண்டும்.

பெற்றோர்கள் தட்டுத்தடுமாறி விழப்போகும் பிள்ளைகளை விழாமல் இருக்கத்தக்கதாக பிடித்துக் கொள்வதைத் தவிர்க்க வேண்டியதிருக்கும். சுவிசேஷர்களும் தங்களிடம் பயிற்சிபெறும் நபர்கள் பிரசங்கத்தில் தடுமாறும்போதோ தங்கள் ஜெபத்திலே முணுமுணுக்கும் போதோ குறுக்கிடுவதிலிருந்து விலகியிருக்க வேண்டும். வருங்கால தலைமைத்துவத்தை ஏற்கும் நபர்கள் தவறுகளைச் செய்யும்போது விட்டுவிட வேண்டும், அப்படிப்பட்ட நேரங்களில் இன்னும் அதிகமான போதனைகளைப் போதிக்க வாய்ப்பாக்கிக் கொள்ளலாம். மன உளைச்சலோ அல்லது எதிர்மறையான சம்பவம் எதுவும் அவர்களுக்கு ஏற்படுமாகில், சுவிசேஷகர்கள் அவர்களை ஊக்கப்படுத்தி அடுத்தமுறைக்கு ஆயத்தப்படுத்த வேண்டும்.

*எப்படி நடக்க வேண்டும் என்பதைக் கற்றுக் கொள்ளுதல்.* இந்தக் கடைசி வளர்ச்சிப்படிக் கற்றுக்கொள்ளுதல் மற்றும் அனுபவம் ஆகிய பலமான அஸ்திபாரத்தின்மேல் கட்டப் பட்டது. இதுவரை, வருங்கால தலைவர்கள் பயிற்சிவிக்கப்பட்டுக் கொண்டிருந்த அவர்களுக்கு தலைமைத்துவ கடமைகளில் பங்குபெற சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டிருந்தது. இந்த வளர்ச்சிப்படியில், அவர்கள் தடுமாறி, நடந்து, அவர்களுடைய வேதம் சார்ந்த தலைமைத்துவ திறமைகளோடு ஓடும்படி எதிர்பார்க்கப் படுகிறார்கள். அவர்கள் கிரியை செய்யும் பிரசங்கத்தை செய்வது மட்டுமல்ல, உபத்திரவத்திலிருக்கும் அங்கத்தினர்களை கருணையோடு கவனித்துக் கேட்கவும் முடியும். அவர்கள் சபைக்கு முன்பாகவும், தனியாக இருக்கும்போதும் எப்படி ஜெபிப்பது என்பதை அறிந்திருக்கிறார்கள்.

ஒரு பிரசங்கியாரோ அல்லது ஒரு சுவிசேஷக ஊழியரோ ஒரு உள்ளூர் சபையில் மூன்று வருடங்கள் இருந்தாலும் அல்லது முப்பது வருடங்கள் இருந்தாலும், ஏதோ ஒரு நாளில் அவருடைய இடத்தில் வேறொருவர் வருவார். தலைமைத்துவ பயிற்சி என்பது ஒருவருடைய முறையாக நடந்து கொண்டேயிருக்கிற ஊழியத்தின் பகுதியாக இருக்கவேண்டும். இதினால் உள்ளூர் சபை ஒரு நாளிலே சுயமாய் நிற்க ஏதுவாக்குவதும் மட்டுமல்ல, அது தலைமைத்துவ நபர்களை அதிகப்படுத்தி அவர்களுடைய செல்வாக்கு பெருகி

புதிய தலைவர்களை ஏற்படுத்துவதோடு உலகத்திற்கே சுவிசேஷ ஊழியம் செய்ய அனுப்பி வைக்கும். எப்படி ஒருவர் பிறக்கும் போதே நடப்பவராக பிறப்பதில்லையோ, அப்படியே திறமையான தலைவர் ஞானஸ்நானத்திலேயே பிறப்பதில்லை. நாம் பிரதான கட்டளையை நிறைவேற்ற முயற்சிக்கும்போது, சபையின் எதிர்காலத்தையும் போஷித்து கவனித்துக் கொள்வோமாக!

தீமோத்தேயு பவுல் வெஸ்ட்புருக்

*தீமோத்தேயு பவுல் வெஸ்ட்புருக் ஹங்கேரியிலுள்ள ஸோல்னோக்கில், 1995-2003ல் ஒரு சுவிசேஷகராக பணியாற்றினார். மூன்று பட்டணங்களில் சபையை நிறுவிய அவர் LET எனும் கிறிஸ்தவ ஸ்தாபனம் மற்றும் வேதாகமப் பள்ளிகளின் அபிவிருத்தி பணியையும் செய்தார், இது ஹங்கேரியிலுள்ள கிறிஸ்துவின் சபைகளுக்கு பயிற்சி மையமாகவும் வழிகாட்டி ஆதாரமாகவும் இருந்து வருகிறது.*